விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

கிளை நூலகம்
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி 01 வியாழக்கிழமை (17.08.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 241

## இந்தியாவில் தடை செய்யப்பட்டதே இங்கு புகையிரதக் கடவைகளில்

### கடவைக் காப்பாளர் சங்கம் குற்றச்சாட்டு

(குருமன்காடு)

இந்தியாவில் தடைசெய்யப்பட்ட புகையிரத கடவை சமிக்ஞை விளக்குகளே வடக்கில் பொருத்தப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துவோம் என வடக்கு கிழக்கு புகையிரத கடவை காப்பாளர் சங்க தலைவர் றொகான் ராஜ்குமார் தெரிவித்துள் 23☛

## டிப்பரில் இருந்த கம்பி பஸ்ஸுக்குள் புகுந்தது

### சாரதி படுகாயம்

(குருமன்காடு)

ஏ9 வீதியில் பயணித்த டிப்பர் வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட கட்டுமானக் கம்பிகள் தனியார் பேருந்துக்குள் நுழைந்ததால் பேருந்து சாரதி படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். 24☛

## சமுர்த்தி கொடுப்பனவுகள் வழமைபோல் வழங்கப்படும்

### அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

சமுர்த்தி கொடுப்பனவுகள் வழமை போல வழங்கப்படும் என அமைச்சரவை உப குழு அங்கத்தவரும், அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி கொடுப்பனவிற்கான திருத்தத்தை முழுமையாக நிராகரிப்பதற்கு. அது தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட அமைச்சரவையின் உபகுழு தீர்மானித்துள்ளது.

நேற்றைய தினம் 23☛

## அவமானப்படுத்தல்கள் எனக்கு பிரச்சினையில்லை

### - ஜனாதிபதி

(கொழும்பு)

நாட்டுக்கும் மக்களுக்கும் சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்கான பயணத்தின் போது பழி கூறல் மற்றும் அவமானப்படுத்தல்கள் பிரச்சினையல்ல என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பிற் 23☛

## கோப்பாயில் 1987-ல் உயிரிழந்த இந்திய இராணுவ அதிகாரியின் கல்லறை புனரமைக்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்குப் பகுதியில் அமைந்திருந்த இந்திய இராணு அதிகாரியுடைய கல்லறை ஒன்றை 30 வருடங்களின் பின்னர் மீண்டும் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதற்கான ஆரம்ப கட்ட பணிகளை நேற்றைய தினம் 24☛



## தாயிடம் விசாரணை! கடும் கோபத்தில் பிள்ளைகள்

(கொழும்பு)

எமது குடும்பத்திலுள்ள ஐவரையும் சிறையில் அடைத்தாலும் இந்த அரசாங்கம் வீட்டிற்குச் செல்வது உறுதி என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஷிரந்தி ராஜபக்ஷவிடம் குற்ற விசாரணைப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகள் 23☛

# தேசத்தின் தாய் ஏன் சி.ஐ.டிக்கு அழைக்கப்பட்டார்?

## ஜே.வி.பியின் தலைவர் விளக்கம்

(கொழும்பு) முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிரந்தி ராஜபக்ஷவிடம் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணை மேற்கொண்டனர். அப்போது அவர்களின் ஆதரவாளர்கள் அங்கு சென்று சத்தமிடுகின்றனர். தேசத்தின் தாயாம்! அவர் தேசத்தின் தந்தையாம்! இது புதுமையான தேசமல்லவா! தேசத்தின் தாய் ஏன் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டார் என்பதை ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க விளக்கியுள்ளார். (23-ம் பக்கம்...)



## கன மழை தொடரலாம்

(கொழும்பு)

நாளை மற்றும் நாளை மறுதினம் கடுமையான காற்று வீசலாம் என்பதுடன் கடல் கொந்தளிப்பாகவும் காணப்படும் என வளி 23☛

## பொலிஸ்மா அதிபருக்கு எதிராக விசாரணை

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர மீது எழுந்துள்ள குற்றச்சாட்டு தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்படும் என நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் 23☛

## பொய் முறைப்பாடு; ஒப்புக்கொண்ட தம்பதி

(சாவகச்சேரி)

சுமார் 51 இலட்சம் பெறுமதியான 89 பவுண் நகைகள் திருட்டுப் போனதாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் பொய் முறைப்பாடு செய்த கனடா தம்பதிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டனர்.

நேற்றைய தினம் சாவ 24☛

## பூஜிதவை விசாரிக்க முடியாதாம்!

(கொழும்பு)

பொலிஸ் மா அதிபருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ள தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இல்லை என ஆணைக்குழுவின் செயலாளர் ஆரியதாச கூரே தெரி 23☛

## முன்னாள் போராளிகள் பொறுப்புடனே நடக்கின்றனர்

### இராணுவ தளபதி சுட்டிக்காட்டு



(கொழும்பு)

வடக்கின் அண்மைய சம்பவங்களுக்கும், விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்களுக்கும் எந்த நேரடித் தொடர்புகளும் கிடையாது. அவர்கள் பொறுப்புடனேயே நடக்கின்றனர்.

யாராவது ஒரு முன் 24☛

## யாழ். மின்சார நிலைய வீதியில் ஒன்பது கடைகள் அகற்றம்



24☛

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது பளைக் கோட்டப் பாடசாலைகளில் ஒன்றான கிளி/சோறன்பற்று கணேசா வித்தியாலய அதிபர்
திரு.இ.செபரத்தினராசா
அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர் செல்லையா இராசரத்தினம்**

அவர்களின் மறைவால் துயர் அடைந்துள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம்-22.10.1930
மறைவு-15.08.2017

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பளைக்கோட்ட அதிபர்களும்
கோட்டக் கல்விப் பணிப்பாளரும் பளை

(சி-9352)

## பொலிஸார் விரைந்து செயற்பட்டதால் திருட்டு முயற்சி தடுக்கப்பட்டது!

நெல்லியடி நகரில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று திருட்டுப் போன நிலையில் அதனை 15 நிமிடத்திற்குள் மீட்டு உரிமையாளரிடம் ஒப்படைத்தனர் நெல்லியடி பொலிஸார்.

நேற்று புதன்கிழமை மாலை 5.00 மணியளவில் நெல்லியடி நகரில் இடம்பெற்ற திருட்டு தொடர்பில் மேலும் தெரியவருவதாவது. வடமராட்சி இரும்பு மதவடியைச் சேர்ந்த நபர் ஒருவர் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு கடைக்கு பொருட்கள் வாங்குவதற்கு சென்றுள்ளார். சிறிது நேரத்தில் திரும்பி வந்த போது மோட்டார் சைக்கிளை காணாது திகைப்படைந்த அவர் நெல்லியடிப் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தார். பொலிஸ் பொறுப்பதிகாரி ஆர்.பி பிரியந்த தலைமையில் ஹரிதாஸ் உள்ளடங்கலான பொலிஸார் நெல்லியடி நகரினை திடீர் சுற்றிவளைப்பு மேற்கொண்டு துருவித் துருவி சோதனையிட்டனர். கண்காணிப்பு கமராக்களும் சோதனையிடப்பட்டது. இதனையடுத்து மோட்டார்சைக்கிளை திருடிய திருடன் அதனை எங்கும் கொண்டு செல்ல முடியாத நிலையில் நெல்லியடியில் இருந்து வதிரி செல்லும் வீதியில் நிறுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளான். பொலிஸாரின் விரைவான செயற்பாட்டால் பதினைந்து நிமிடத்தில் மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டு உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது. (மு-60)

### சேல்ஸ்மன் தேவை

எமது ஜவுளி நிறுவனத்துக்கு புடைவை வியாபாரத்தில் அனுபவம் உள்ள விற்பனையாளர் தேவை.

**சிவகணேசன் ரெக்ஸ்**
41, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்

(153)

# இதய அஞ்சலிகள்

## அமரர் செல்லையா இராசரத்தினம்



கிளி/சோறன்பற்று கணேசா வித்தியாலய அதிபர் திரு.இ.செபரத்தினராசா அவர்களின் அன்புத் தந்தையார் அமரர் செல்லையா இராசரத்தினம் அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

அதிபர்கள் சங்கம்
கிளிநொச்சி மாவட்டம்

(சி-9353)

# கண்ணீர் அஞ்சலி

## செல்வன் கந்தசாமி தயாகரன்

எமது பாடசாலை ஆசிரியை திருமதி தங்கலட்சுமி கந்தசாமி அவர்களின் புதல்வன் செல்வன் தயாகரன் அவர்கள் 10.08.2017 அன்று சுவிஸில் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/காட்டுப்புலம்
அ.த.க பாடசாலை, சுழிபுரம்

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பெற்றோர்கள்

(151)

# 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
12 - 11 - 1944



மறைவு
19 - 07 - 2017

## தேவசிகாமணி குமரகுரு
(பாஸ் ஐயா)

கடந்த 19.07.2017 அன்று இறைபதமடைந்த எமது குடும்ப தலைவர் தேவசிகாமணி குமரகுரு (பாஸ் ஐயா) அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து உதவி புரிந்தவர்களுக்கும், இறுதி கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலமாக அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதோடு நாளை 18.08.2017 காலை 4.00 மணிக்கு வல்வெட்டித்துறை ஊறணி அந்தியேட்டி மடத்தில் கிரியைகள் நடைபெற்று ஊறணி தீர்த்த சமுத்திரத்தில் அஸ்தி கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து மதியம் வீட்டில் நடைபெறும் சபீண்டீகரண கிரியைகளிலும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

ஆலடி ஒழுங்கை,
வல்வெட்டித்துறை

தகவல்: குடும்பத்தினர்
0773068750

(C-9350)

# அறிவித்தல்
## யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு இரண்டாவது தடவையாக ஆலோசனைக்குழுவை அமைத்தல்

"உள்ளூராட்சிக்கு பங்களிப்பு செய்யக்கூடிய சிரேஷ்ட பிரஜைகள், விடய அறிஞர்கள், வட்டார அங்கத்தவர்கள் மற்றும் பிரதேசத்தில் இருக்கக்கூடிய தகைமையாளர்களை உறுப்பினர்களாக கொண்டதாக ஒரு ஆலோசனைக்குழு ஒவ்வொரு உள்ளூராட்சி சபையிலும் அமைக்கப்பட வேண்டும். இந்தக் குழு பொதுமக்களுக்கும் உள்ளூராட்சி சபைக்குமிடையில் ஒரு பாலமாக விளங்க தொழிற்பாடுகளை செயல்படுத்த வேண்டும்" (உள்ளூராட்சி மறுசீரமைப்பு சுற்றறிக்கை இல 10 பகுதி 3.2)

மேற்குறித்த சுற்று நிருபத்தின் பிரகாரம் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு இரண்டாவது தடவையாக ஆலோசனைக்குழு உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### விண்ணப்பதாரர் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள்/ நிபந்தனைகள்

1.விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாகவும், யாழ்ப்பாணம் மாநகர சபையின் எல்லைக்குள் நிரந்தரமாக அல்லது ஆகக் குறைந்தது 5 வருடங்களாவது நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

2.விண்ணப்பதாரி பொதுச்சேவை பற்றிய தெளிவான சிந்தனையுள்ளவராகவும், 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

3.உள்ளூராட்சி சபைப் பணியாளராகவோ அல்லது உள்ளூராட்சி சபை உறுப்பினராகவோ அல்லது அரசியல் கட்சியொன்றின் உறுப்பினராகவோ இருத்தல் கூடாது.

4.விண்ணப்பதாரி குற்றவாளியாக நீதிமன்றத்தில் தண்டிக்கப்பட்டவராக இருத்தல் கூடாது. அவர் குற்றவாளியாகியிருந்தவர் என்று பின்னர் ஆதார பூர்வமாக அறியப்படும் சந்தர்ப்பத்தில் அவரது உறுப்புரிமை உடனடியாக இரத்துச் செய்யப்படும்.

5.இக்குழுவானது யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு ஒருவருட காலத்திற்கு ஆலோசனை வழங்கும்.

6.விண்ணப்பதாரி கீழ் குறிப்பிட்டவற்றில் ஒன்றில் அல்லது சிலவற்றில் யாழ்ப்பாணம் மாநகர வாழ்வியல் போக்கின் புரிதலுடன் கூடிய பரந்த அறிவினை / பாண்டித்தியத்தினை / நீண்டகால அனுபவத்தினை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

I.மாநகரசபை எல்லைக்குட்பட்ட அபிவிருத்தியும் உட்கட்டுமானமும்
II.திண்மக்கழிவு முகாமைத்துவமும் சூழல் பாதுகாப்பும்
III.நகரத்திட்டமிடல்
IV.பொதுச்சுகாதாரமும், சுகாதார நல மேம்பாடும்
V.மாநகரசபையால் வழங்கப்படும் மக்கள்-நட்புசேவைகள் தொடர்பானஅறிவு
VI.நீர் விநியோகமும் கழிவுநீர் பரிகரித்தலும்
VII.குளங்கள், வாய்க்கால்கள், வடிகால்கள் - செயற்பாடும் பராமரிப்பும்
VIII.நூலகங்கள், கல்வி மற்றும் கலாசார மேம்பாடு
IX.பொழுதுபோக்கு அம்சங்களும் ஓய்வு வசதிகளும்
X.பொதுச்சேவையின் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம்
XI.சபையின் வருமான மேம்பாடும் நிதி முகாமைத்துவமும்
XII.ஆளணி உள்ளிட்ட வளங்களின் ஒதுக்கீடு

7.ஆலோசனைக்குழுவில் 11 பேர் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர் என்பதோடு, அவர்கள் ஆலோசனை வழிகாட்டல் சட்டகம் ஒன்றின் கீழ் தம் பங்களிப்பை வழங்குவர்.

8.ஆலோசனைக்குழுவில் பெண்களின் பிரதிநிதித்துவம் கணிசமானஅளவு எதிர்பார்க்கப்படுகிறது.

9.தெரிவு செய்யப்படுபவர்கள் இலவசமாக பொது நோக்கோடு கூடிய ஆலோசனைகள வழங்குபவர்களாக இருத்தல் வேண்டும்.

10.தங்கள் தகைமைகளுடன் கூடிய சுயவிபரங்களை தாங்களே தயாரித்து 2017.09.10ஆம் திகதிக்கு முன் "ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "ஆலோசனைக்குழு உறுப்பினர்களுக்கான விண்ணப்பம்" என குறிப்பிடவும். விண்ணப்பங்கள் ஆணையாளரினால் நியமிக்கப்பட்ட குழுவொன்றினால் பரிசீலிக்கப்பட்டு தகைமையானவர்கள் வெளிப்படைத் தன்மையுடன் தெரிவு செய்யப்படுவர்.

**குறிப்பு:** முதலாவது தடவையாக ஆலோசனைக் குழுவிற்கு விண்ணப்பித்தவர்கள் மற்றும் தெரிவானவர்கள் மீளவும் விண்ணப்பிக்க முடியும்.

பொ.வாகீசன்,
ஆணையாளர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

(சி-9351)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடைமுறையிலுள்ள நீதிமன்றம் ஒன்றை விசேட நீதிமன்றமாக மாற்ற நடவடிக்கை

(கொழும்பு)

நிதிக் குற்றச்சாட்டுக்கள் குறித்த விசாரணைகளுக்காக தற்போது நடைமுறையிலுள்ள நீதிமன்றம் ஒன்றை விசேட நீதிமன்றமாக பெயரிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.



விசேட நீதிமன்றம் ஒன்றை அமைப்பதற்கு அரசியலமைப்பில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று நீதியமைச்சரால் அமைச்சரவையில் சுட்டிக்காட்டப்பட்டபோது பிரதம நீதியரசர் மற்றும் சட்டமா அதிபருடன் கலந்துரையாடி தற்போது நடைமுறையிலுள்ள நீதிமன்றம் ஒன்றை விசேட நீதிமன்றமாக பெயரிட்டு நடவடிக்கை எடுப்பதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவர்களுடன் கலந்துரையாடும் பொறுப்பு வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பனவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (இ-7)

## ஞானசார தேரருக்கு மீண்டும் அழைப்பு



பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர், தனக்கு அச்சுறுத்தல் விடுத்ததாக, வட்டரக்க விஜித தேரரால் கொழும்பு - கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய, இது தொடர்பில் வாக்குமூலம் அளிக்க, ஞானசார தேரருக்கு, கோட்டை பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

## இலங்கையின் பாதுகாப்பில் இந்தியாவுக்கு அக்கறை

### இந்தியத் தூதுவர் தரண்ஜித் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் பாதுகாப்பு, ஒற்றுமை மற்றும் ஆள்புல ஒருமைப்பாடு தொடர்பில் இந்தியா தொடர்ந்தும் அக்கறை கொண்டிருப்பதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் தரண்ஜித் சிங் சந்து தெரிவித்தார். பல்லின சமூகத்தில் அனைத்துப் பிரஜைகளுக்கும் சமத்துவம், பாதுகாப்பு மற்றும் ஒற்றுமை என்பவற்றுடன் தமது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்கு மக்களுக்குள்ள உரிமைகளுக்கு இந்தியா தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.



இந்தியாவின் சுதந்திர தினத்தை முன்னிட்டு இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் தலைமையில் கொழும்பில் உள்ள இந்திய இல்லத்தில் நேற்று முன்தினம் கொண்டாட்டங்கள் இடம்பெற்றன.

இந் நிகழ்வில் உரையாற்றிய தரண்ஜித் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகளைப் பலப்படுத்தும் வகையில் முன்னெடுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் பற்றி விளக்கிக் கூறினார். இலங்கையின் பாதுகாப்பு, இறைமை மற்றும் ஆட்புல ஒருமைப்பாடு என்பன தொடர்பில் இந்தியா கொண்டிருக்கும் அக்கறையையும் அவர் வெளிக்காட்டியிருந்தார். பங்குடைமைகள் மற்றும் ஒத்துழைப்புக்களில் இந்தியா இலங்கையுடன் தொடர்ந்தும் ஈடுபாட்டுடன் செயற்படும். இரு நாடுகளிலும் பரஸ்பர முதலீடுகள், உற்பத்திகள், கல்வி, தொழில்நுட்பம் ஆகியவற்றில் ஆழமான ஒத்துழைப்பு வழங்கப்படும் என்றார்.

கடந்த சில மாதங்களில் கொடூரமான பயங்கரவாத தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. பயங்கரவாத செயற்பாடுகளை நியாயப்படுத்துவதற்கு எந்தவொரு கோட்பாட்டையோ, நியாயத்தையோ, அல்லது அரசியல் காரணத்தையோ, உபயோகப்படுத்த முடியாது. பயங்கரவாதிகளை அல்லது பயங்கரவாத குழுக்களை ஆதரித்து, அனுசரணை வழங்கி மற்றும் பாதுகாப்பு புகலிடம் வழங்கும் நாடுகள் என்பன இவற்றுக்குப் பொறுப்புக் கூற வேண்டும்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்திற்கு ஒரு நிகர பாதுகாப்பு அளிப்பதாக இந்தியா, தன்னைக் காண்பிக்கிறது. அத்தோடு பிராந்தியத்தில் மனிதாபிமான உதவிகள் மற்றும் அனர்த்த நிவாரணம் வழங்கும் முதலாவது பதிலுறுப்பாளராகவும் இந்தியா திகழ்வதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையுடன் கொண்டுள்ள பங்குடைமைகள், நட்பின் வடிவமாகக் காணப்படுகிறது. 460 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான நன்கொடைகள் மற்றும் 2.6 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான அபிவிருத்தி உதவியை இலங்கைக்கு வழங்க இந்தியா உறுதியாகவுள்ளதாகவும் உயர்ஸ்தானிகர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சர்வஜன வாக்கெடுப்பு முதலில் நடத்தப்படும்

### அரசியலமைப்பு குறித்து அமைச்சர் ராஜித கருத்து



புதிய அரசியல் அமைப்பு தொடர்பில் முதலில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட உள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

உத்தேச அரசியல் சாசனம் அமைக்கப்பட்டதன் பின்னர் அது தொடர்பில் மக்களின் கருத்தை அறிந்து கொள்ளும் நோக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடாக அமைந்துள்ளது என அவர் தெரிவித்தார்.

ஒரு நபரைச் சுற்றி காணப்படும் அதிகாரங்களை அனைத்து மக்களுக்கும் பகிர்ந்தளிக்கும் வகையில் புதிய அரசியல் சாசனம் அமைக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

ஏனைய தேர்தல்களுக்கு முன்னதாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## 29 ஆவது உலகப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டியில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள்

(யாழ்ப்பாணம்)

ரைப்பேயில் நடைபெறவுள்ள 29 ஆவது உலகப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி 2017 இல் இலங்கைப் பல்கலைக்கழக அணி சார்பில் பங்குபற்றுவதற்காக யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இரு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதில் யாழ்.பல்கலைக்கழக பளுதூக்கும் அணி வீரர் யு.வினோத்குமார் (கலைப்பீடம்), மேசைப்பந்தாட்ட அணி வீராங்கனை ஆர்.ஏ.பிரசாதி(கலைப்பீடம்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி சுற்றுப் போட்டியானது நாளை மறு தினம் 19-30 ஆம் திகதி வரை ரைப்பேயில் இடம்பெறவுள்ளது என யாழ். பல்கலைக்க ழக உடற்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ

## நீதிமன்ற விவகாரங்களில் தலையீடு செய்யக்கூடாது

### பொதுபல சேனா கூறுகிறது

நீதிமன்ற விவகாரங்களில் எவரும் தலையீடு செய்யக் கூடாது என பொதுபலசேனா அமைப்பு கோரியுள்ளது. நீதிமன்றங்களும் சட்டமா அதிபர் திணைக்களமும் சுயாதீனமாக இயங்க வேண்டுமென அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

மேலும் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் நீதிமன்ற விவகாரங்களில் தலையீடு செய்யக் கூடாது எனவும் பக்கச்சார்பற்ற நிலையில் நீதி நிலைநாட்டப்பட வேண்டுமெனவும் தெரிவித்துள்ளது.

அத்துடன் சட்டத்தை மதிக்காத பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஜனாதிபதி கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் பொதுபல சேனா கோரியுள்ளது. (இ-7)

## 2020ம் ஆண்டு வரையில் இந்த அரசு ஆட்சி நடத்தும்

### அமைச்சர் ஹரிசன் நம்பிக்கை

(கொழும்பு)

2020 ஆம் ஆண்டு வரையில் இந்த அரசாங்கம் ஆட்சி நடத்தும் என கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பீ.ஹரிசன் தெரிவித்துள்ளார்.

ஆட்சி மாற்றம் பற்றி தற்போது பேசப்பட்டு வருவதாகவும் அவ்வாறான ஓர் நிலைமை ஏற்படக்கூடிய சாத்தியமில்லை எனவும் அவர் தெரிவித்தார்.



எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் நடைபெறும் வரையில் இந்த அரசாங்கத்தைக் கவிழ்க்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

பாரியளவில் போராட்டங்களை நடத்துவதன் மூலம் அரசாங்கத்தை கவிழ்க்க முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இரண்டு பிரதான கட்சிகள் கூட்டாக இணைந்து ஆட்சி நடத்தும் போது முரண்பாடுகள் ஏற்படுவது வழமையானதே எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வைட்வோஷ் ஆனதற்கு கிரிக்கெட் சபையே காரணம்

## ரணதுங்க ஆதங்கம்



இந்தியாவுடனான டெஸ்ட் தொடரில் இலங்கை அணி 3-0 என்ற கணக்கில் வைட்வோஷ் ஆனதற்கு இலங்கை கிரிக்கெட் சபையே காரணம் என முன்னாள் அணித் தலைவர் ரணதுங்க கடுமையாக சாடியுள்ளார்.

இந்திய அணி, இலங்கையுடன் 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் மற்றும் ஒரு ரி20 போட்டி கொண்ட கிரிக்கெட் தொடரில் விளையாடி வருகிறது.

இதில் டெஸ்ட் தொடரில், இலங்கை அணி 3-0 என்ற கணக்கில் சொந்த மண்ணில் வைட் வோஷ் ஆனது.

முதல் டெஸ்டில் 304 ஓட்டங்களாலும் 2ஆவது டெஸ்டில் இன்னிங்ஸ் மற்றும் 53 ஓட்டங்களாலும் 3ஆவது டெஸ்டில் இன்னிங்ஸ் மற்றும் 171 ஓட்டங்களாலும் வென்று இந்தியா தொடரை கைப்பற்றி அசத்தியது. மேலும், வெளிநாட்டில் நடந்த டெஸ்ட் தொடரின் அனைத்துப் போட்டிகளிலும் இந்தியா வெற்றி பெற்றது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இந்தியாவுடனான டெஸ்ட் தொடரில் இலங்கை அணி வைட்வோஷ் ஆனதற்காக இலங்கை கிரிக்கெட் சபையை ரணதுங்க கடுமையாக சாடியுள்ளார். இது தொடர்பாக அவர் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது,

இலங்கை கிரிக்கெட் அணி படுமோசமான நிலையை நோக்கிச் செல்கிறது. இந்த தோல்விக்கு நீங்கள் எந்த ஒரு வீரரையும் குறைசொல்லக் கூடாது. இதற்கு முழு முதல் காரணம் அணி நிர்வாகத்தினர்தான்.

இலங்கை கிரிக்கெட் அணி நிர்வாக தலைவர் திலங்க சுமதிபாலவிடம், இலங்கை அடைந்த தோல்வி குறித்து சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் விசாரணை நடத்த வேண்டும். எங்களிடம் தகுதியான வீரர்களை தேர்வு செய்யும் சிறப்பான தேர்வாளர்கள் இல்லை என இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 1996ஆம் ஆண்டில் ரணதுங்க தலைமையிலான இலங்கை அணி வெற்றி பெற்று உலகக் கிண்ணத்தை கைப்பற்றி அசத்தியது குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் தனது ரசிகர்களுடன் விராட்



இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் விராட் ஹோலி இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுலா மேற்கொண்டுள்ள நிலையில், அவரது காதலி அனுஷ்கா சர்மாவும் இலங்கை வந்துள்ளார்.

அவர்கள் இருவரும், விராட் ஹோலியின் இலங்கை ரசிகர்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்

இது தொடர்பான புகைப்படமொன்று viratkohli.club எனும் இன்ஸ்டகிராம் தளத்தில் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.


# வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 18.07.2017
செவ்வாய்க்கிழமை அன்று
சிவபதமடைந்த எங்கள்
குடும்பத் தலைவர்

அமரர்
**கந்தையா உதயராசா**
அவர்களின்

*வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (17.08.2017) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

பழம் வீதி,
ஆறுகால் மடம்,
யாழ்ப்பாணம்.

(C-9354)

குடும்பத்தினர்
077 171 3726
021 221 3199




இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பமாகிறது. பகலிரவு போட்டியாக நடைபெறும் இப்போட்டி பேர்மிங்ஹாம் எட்ஜ்பஸ்டனில் இலங்கை நேரப்படி மாலை 6.30 மணியளவில் தொடங்குகிறது.

# நடால் மீண்டும் 'நம்பர் 1'



சின்சினாட்டி டென்னிசில் விளையாட இயலாது என ரோஜர் பெடரர் கடைசி நேரத்தில் கூறிவிட்டதால், டென்னிஸ் தரவரிசையில் மீண்டும் முதலிடத்தை பிடிக்கும் வாய்ப்பு நடாலுக்கு பிரகாசமாகியுள்ளது.

ஒலிம்பிக் சம்பியனான இங்கிலாந்து வீரர் அன்டி முர்ரே, சர்வதேச டென்னிஸ் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கிறார். இடுப்பு பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக அவர் மொன்ட்ரியல் போட்டியில் விளையாடவில்லை. தற்போது அமெரிக்காவின் சின்சினாட்டியில் தொடங்கியுள்ள சர்வதேச மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியில் இருந்தும் வலகி இருக்கிறார். இதனால் அவரது நம்பர 1 இடம் பறிபோகிறது. தற்போது 2ஆவது இடத்தில் இருக்கும் 15 கிராண்ட்ஸ்லாம் வென்றவரான ஸ்பெயின் வீரர் ரபெல் நடால், 2014ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்கு பிறகு முதல்முறையாக மறுபடியும் முதலிடத்தை பிடிக்கிறார். புதிய தரவரிசை அடுத்த வாரம் வெளியாகும்.

3ஆம் நிலை வீரர் சுவிட்சர்லாந்தின் பெடரர் முதுகுவலியால் அவதிப்படுவதால் சின்சினாட்டி டென்னிசில் விளையாட இயலாது என்று கடைசி நேரத்தில் கூறிவிட்டார். இதில் பெடரர் பங்கேற்று இருந்தால் இந்த தொடரின் வெற்றி பெடரருக்கும், நடாலுக்கும் இடையே நம்பர் 1 இடத்தை தீர்மானிக்கும் வகையில் அமைந்திருக்கும். பெடரரின் விலகலால் நடாலின் முதலிடம் சிக்கலின்றி உறுதியாகி விட்டது.

# பவுன்சர் பந்து தாக்கியதில் பாகிஸ்தான் இளம் வீரர் பலி



பாகிஸ்தானின் முதல் தர போட்டிகளில் விளையாடி வந்த இளம் வீரர் ஜுபைர் அகமட், பவுன்சர் பந்து தலையில் தாக்கியதில் உயிரிழந்துள்ளார்.

பாகிஸ்தானின் கழக அணியில் விளையாடி வந்த இளம் வீரர் ஜுபைர் அகமட், மர்தானில் ஒகஸ்ட் 14ஆம் திகதி விளையாடிய போது பவுன்சர் பந்து அவரது தலையில் தாக்கியது.

துடுப்பாட்டம் செய்தபோது அவர் ஹெல்மெட் அணியாமையே மரணத்துக்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

ஜுபைர் அகமட் மரணத்திற்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, துடுப்பாட்ட வீரர்கள் ஹெல்மெட் அணிவதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தியுள்ளது.

ஜுபைர் அகமட் குவெட்டா பியர்ஸ் அணிக்காக 4 போட்டிகளில் விளையாடி உள்ளார்.

கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அவுஸ்திரேலிய தொடக்க ஆட்டக்காரர் பிலிப் ஹியுக்ஸ் உள்ளூர் போட்டியின் போது, பவுன்சர் பந்து பின்கழுத்து பகுதியில் தாக்கியதில் மைதானத்திலேயே நினைவு இழந்து சுருண்டு விழுந்து இறந்தார்.

இந்த சம்பவம் கிரிக்கெட் உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழுவால் வெளியிடப்படும் நல்லைக்குமரன் வெள்ளிவிழா மலர் வெளியீடும் சைவசமய விவகாரக்குழுவில் தொண்டாற்றியவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் நேற்று முன்தினம் காலை நாவலர் கலா சார மண்டபத்தில் யாழ். மாநகர சபை ஆணையாளரும் சைவசமய விவகாரக்குழுவின் தலைவருமான பொ.வாகீசன் தலை மையில் நடைபெற்றது. இதன்போது சைவசமய விவகாரக் குழுவின் வளர்ச்சிக்கு பங்காற்றியவர்கள் கௌரவிக்கப்படும் காட்சி.

# இராசி பலன்

17.08.2017
(ஆவணி 01, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
தசமி முற்பகல் 11.26 மணிவரை
மிருகசீரிடம் முன்னிரவு 10.35 மணிவரை
சுபநேரம் 7.35-9.05 மணிவரை
இராகுகாலம் 1.35-3.05 மணிவரை

வளவன்

**கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| | | சந் | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அனுசம், விசாகம்<br>பகல் 11.13 மணிக்கு<br>மிது-சந் | | ராகு, செவ், புத |
| கேது | | | சூரி, சுக் |
| | சனி | | குரு |

**மீனம்:** உறவினர்களின் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் பொன்னான செய்தியொன்று வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**மேடம்:** குடும்பத்தில் குதுகலம் தரும் சம்பவமொன்று இடம்பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு, பகையொன்று நட்பாகலாம், சவால்களை சமாளிக்கும் நாள்.

**இடபம்:** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்:** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றுமொரு வகையில் செலவு ஏற்படலாம், பெரிய மனிதர்களின் சந்திப்புண்டு, கற்பனை மிகுதியான நாள்.

**கும்பம்:** நட்பு வட்டம் விரிவடையும் நாள், புதிய பொருட்சேர்க்கையுண்டு, வியாபார விருத்தியுண்டு, புண்ணிய காரியங்களில் அக்கறை காட்டுவீர்கள்.

**கடகம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், சயனசுகக் குறைவுண்டு.

**மகரம்:** சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மறைமுகப் போட்டிகள் மாறும்.

**சிம்மம்:** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், இனிமையான நாள்.

**தனுசு:** நீண்ட நாளைய ஆசை யொன்று நிறைவேறும், பயணங்களால் பலனுண்டு, நண்பர்களின் சந்திப்பில் அனுகூலமுண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**விருச்சிகம்:** எடுத்த காரியத்தை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம், அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**துலாம்:** வெளியூர் பயணங்களால் ஆதாயம் ஏற்படும், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், சிலர் தொழில் ரீதியாக உதவி கேட்டு வரலாம்.

**கன்னி:** புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், காலைப் பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், போசனசுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சூர்யோற்சவம்



கார்த்திகை உற்சவம்





நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனத்தில் நேற்று முன்தினம் காலை சூர்யோற்சவ உற்சவம் இடம்பெற்றது. மாலை கார்த்திகைத் திருவிழா இடம்பெற்றது.





நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் 51 ஆவது பீடாரோஹண விழா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் மங்கல வாத்தியங்களுடன் அழைத்து வரப்படுவதையும் பீடாரோஹண நிகழ்வுகள் இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்.

# தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று வியாழக்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 8 மணி வரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறும். இதில் பாட்டு-சுகன்யா அரவிந்தன், வயலின்-அ.ஜெயராமன், மிருதங்கம்-வி.ரமணா, கடம்-கே.ரவிசங்கர், முகர்சிங்-சி.செந்தூரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-3)

# "முருகப் பெருமானின் திருப்பெருவடிவம்"

நல்லூர்க்கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு உலக சைவத் திருச்சபை நடத்தும் தெய்வீகச் சிறப்பு நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 7.45 மணி வரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் இடம்பெறும். சைவப்புலவர் சிவஸ்ரீ. கதிர்குமாரசாமி சுமுகலிங்கம் சிவாச்சாரியார் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் "முருகப் பெருமானின் திருப்பெருவடிவம்" எனும் தலைப்பில் சைவப்புலவர் சைவநெறிச் சன்மார்க்கர் செ.கந்தசத்தியதாசன் சொற்பொழிவாற்றுவார். (இ-3)

# "இறை நம்பிக்கை" ஆன்மீக அருளுரை

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் ஆன்மீக அருளுரைகள் (ஞான யக்ஞம்) இன்று வியாழக்கிழமை இரவு 7.30 மணிமுதல் 8.15 மணிவரை இல.700, பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள சின்மயா மிஷனில் இடம்பெறும். இந்நிகழ்வில் "இறை நம்பிக்கை" எனும் தலைப்பில் பிரமச்சாரி ஜாக்ரத சைதன்யா ஆன்மீக அருளுரை வழங்குவார். (இ-3)

# அருள்நெறி விழாவில் இன்று

நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் யாழ். மாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேறும் அருள்நெறி விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணி முதல் மாலை 6 மணி வரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள கணக்காளர் எம்.ஜி.காண்டீபன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் தே. இந்திரபாலா கலந்து கொள்வார். இந்நிகழ்வில் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சுருவில் ஐயனார் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் வில்லிசை, சின்னமடு ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பேச்சு, பருத்தியடைப்பு கதிரேசன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பண்ணிசை, பேச்சு, நடனம் என்பன இடம்பெறும்.

மேலும் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அண்ணமார் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பேச்சு, கன்னிவளவுப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நடனம், பேச்சு, நீலியம்பனைப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பண்ணிசை, வில்லிசை, நடனம் என்பனவும் இடம்பெறும். (இ-3)

# ஆன்மீக சொற்பொழிவு

நல்லூர்க் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ். கதிர் கலையகத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் ஆன்மீக நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு நல்லூர்க் கந்தசுவாமி கோவில் முன்பாக அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் காரைநகர் மடத்துக்கரை முத்துமாரி அம்மன் தேவஸ்தான ஆதீன குரு பிரம்மஸ்ரீ கு.சரவண பவானந்த சர்மா தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் சொற்பொழிவாற்றுவதுடன் கந்தபுராணம் தொடர்பான சொற்பொழிவை பண்டிதர் சைவப்புலவர் பொன். சுகந்தன் நிகழ்த்துவார். (இ-3)

# கந்தபுராண எழுச்சி விழா

நல்லூர்க்கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் கந்தபுராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் நிகழ்வுகள் அரங்கேறும் அருள்நெறி விழா இன்று வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் இடம்பெறும்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், சாவகச்சேரி விளைவேலி மருதடிப் பிள்ளையார் ஆலய பிரதம குரு கலாநிதி சிவஸ்ரீ.து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள் ஆகியோர் முன்னிலையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.கர்ஜின் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாநகரசபை ஆணையாளர் பொன்னம்பலம் வாகீசன் கலந்து கொள்வார். இந்நிகழ்வில் கிருஸ்ணா அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள், செல்வி தரங்கினி பாலமுருகனின் இசைக்கச்சேரி என்பனவும் இடம்பெறும். மேலும் கந்தபுராணம் தொடர்பான ஆன்மீகச் சொற்பொழிவை தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆசிரியர் சைவப்புலவர் ஏ.அனுசாந்தன் வழங்குவார். (இ-3)

# இசைப் பேருரையில் 'கண்டேன் சீதையை'

நல்லூர்க்கந்தப் பெருமானின் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவமகா சபை 30 வருடங்களுக்கு மேலாக நடத்திவரும் கம்பராமாயணம் தொடர்பான தெய்வீகத் தொடர் இசைப்பேருரை (சங்கீத கதாபிரசங்கம்) இன்று வியாழக்கிழமை மாலை 6.30 மணி முதல் இரவு 8 மணிவரை நல்லை ஆதீன குருமூர்த்தி ஆலய மண்டபத்தில் இடம்பெறும்.

இதில் "கண்டேன் சீதையை" எனும் தலைப்பில் நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதாவாரிதி கலாபூஷணம் பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா இசைப்பேருரை நிகழ்த்துவார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

93

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?

*2015 ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலும் அதனைத் தொடர்ந்து பொதுத்தேர்தலும் நடந்து ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருந்தாலும் புங்குடுதீவில் 2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற மாணவி வித்தியாவின் படுகொலை மிகப்பெரிய தாக்கத்தை இலங்கை முழுமையிலும் ஏற்படுத்தியிருந்தது.*

*அதன்காரணமாக வித்தியாவின் படுகொலைச் சம்பவம் தமிழர் தலைவிதி என்ற இத் தொடரில் சேர்க்கப்பட்டுள்ளது என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம்.*

*ஆசிரியர்*





வித்தியாவின் வீடு

## புங்குடுதீவில் மாணவி கொலை நடந்தது என்ன?

பொன்கொடு தீவு என்பது தான் புங்குடுதீவு என்று மருவியது என ஊர்ப் பெயருக்குக் காரணம் கூறுவர். புங்கை மரங்களின் செறிவு காரணமாகவும் இப்பெயர் ஏற்பட்டது என்ற கருத்துக்களும் இருக்கவே செய்கின்றன.

எதுவாயினும் விவசாயம், கடற்றொழில் என்பவற்றோடு வர்த்தகம் எழுச்சி பெற்ற ஊராகப் புங்குடுதீவைப் பார்க்க முடியும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து 32 கிலோமீற்றர் தொலைவில் உள்ள புங்குடுதீவு வேலணைப் பிரதேச செயலகத்தின் நிர்வாகப் பரப்பிற்கு உட்பட்டது.

வர்த்தகம், அரசியல், அரசபணி, கல்வித்துறை எனப் பல துறைகளிலும் புங்குடுதீவு மக்களின் வகிபங்கு காத்திரமாக இருந்த போதிலும் புங்குடுதீவைச் சேர்ந்த மக்கள் தொகையில் கணிசமானவர்கள் தீவகம் என்ற எல்லையைத் தாண்டி வாழ்கின்றனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்தச் சூழ்நிலையில் புங்குடுதீவில் வாழ்கின்ற சொற்பமான குடும்பங்களில் சிவலோகநாதனின் குடும்பமும் ஒன்று.

புங்குடுதீவு ஆலடிச் சந்தியின் தென்முகம் நோக்கிய பாதையூடாகச் சென்றடையும் புங்குடுதீவு தென்கிழக்கு கடலோரமாக வீராமலை என்ற குறிச்சி உண்டு. இங்குதான் சிவலோகநாதனின் வீடு இருக்கிறது.

கடலோரம் வீற்றிருக்கும் கண்ணகை அம்மன் ஆலயச் சூழலும் கடல் வெளி உப்புக் காற்றும் அந்தப் பகுதிக்கு ரம்மியமான அனுபவங்களைக் கொடுத்திருந்தன. சிவலோகநாதன் தம்பதியருக்கு ஒரு மகனும் இரண்டு மகள்களுமாக மூன்று பிள்ளைகள்.

மூத்த மகள் வவுனியா பல்கலைக்கழக வளாகத்தில் முகாமைத்துவப் பட்டத்தை மேற்கொண்டு வருகிறார். மூன்றாவது மகள்தான் இறந்து போன வித்தியா.

1991களில் புங்குடுதீவில் ஏற்பட்ட இடப்பெயர்வுக்கு சிவலோகநாதன் குடும்பமும் ஆளாகியிருந்தது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, துணுக்காய் இப்படியே இடப்பெயர்வுக் காற்று அவர்களையும் இடம்மாற்றிக் கொள்ள, கடைசி மகள் வித்தியாவை பாரிய சிரமங்களுக்கு மத்தியில் கொழும்பில் உள்ள உறவினர்களிடம் அனுப்பி வைத்தனர்.

கல்வி கற்கவேண்டும் என்ற நோக்கத்தை மையமாகக் கொண்டு பெற்றோர் செயற்பட்டதற்கு வித்தியாவும் கல்வியில் சிறந்து விளங்கினார்.

கொழும்பில் வித்தியாவின் கல்வி தொடர்ந்து கொண்டிருந்தது.2009 இல் வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த போரில் அகப்பட்டு மீண்ட சிவலோகநாதன் குடும்பம் வவுனியா அருணாசலம் முகாமில் தங்கியிருந்தது.

2010 இல் அவர்கள் சொந்த ஊருக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டபோது தாம் பிறந்த புங்குடுதீவு மண்ணில் நிம்மதியாக வாழலாம் என்ற நம்பிக்கையோடு அவர்களின் மீள்குடியமர்வு நடந்தேறியது.

தாய், தந்தை, சகோதரர்கள் புங்குடுதீவில் குடியேறிய 2010 இல் கொழும்பில் படித்துக் கொண்டிருந்த வித்தியாவும் புங்குடுதீவுக்கு வந்து சேர்ந்தார். புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் அவரின் கல்வி தொடர்ந்தது.

மாணவி வித்தியா கல்வியில் மிகவும் ஆர்வமானவர். ஆங்கிலத்திலும் அவர் தேர்ச்சி யடைந்திருந்தார்.

க.பொ.த சாதாரண தரத்தில் நல்ல பெறுபேற்றைப் பெற்றிருந்த அவர் புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் கலைப்பிரிவில் உயர்தரத்தைத் தொடர்ந்தார்.

ஊடகக் கற்கைநெறி, புவியியல், தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களைக் கற்றுவந்த வித்தியா பாடசாலைக்கு நல்ல பெறுபேற்றைப் பெற்றுத் தருவார் என்ற நம்பிக்கையைக் கொடுத்துள்ளார்.

அந்த நம்பிக்கை 2015 ஒகஸ்ட் மாதம் நிறைவேறும் என எதிர்பார்க்கப்பட்ட போது..

(வளரும்)

-புருசோத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்குநோய் அதிதீவிரமாகப் பரவும் அபாயம்

## உயிர்காப்புப் பணியில் ஈடுபட கிளிநொச்சி மக்களுக்கு அழைப்பு

கடந்த சில நாட்களாகப் பெய்துவரும் மழை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் டெங்கு நுளம்புகளின் பெருக்கம் சடுதியாக அதிகரித்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பூச்சியியல் ஆய்வுப் பிரிவினர் எச்சரித்துள்ளனர்.

இவ்வாறு அதிகரித்துள்ள நுளம்புகள் டெங்குநோயாளிகளைத் தாக்க நேரிட்டால் மாவட்டத்தில் அதிதீவிரமாக டெங்குநோய் பரவும் அபாயம் ஏற்படும்.

தை மாதத்திலிருந்து தற்போது வரையான 227 நாட்களில் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் மொத்தம் 815 நோயாளர்கள் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டது. இவர்களுள் 585 நோயாளர்கள் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். ஏனையோர் பிற மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில் உள்ள 585 கிளிநொச்சி மாவட்ட நோயாளர்களில் அநேகமானோர் கொழும்பு உள்ளிட்ட பிற மாவட்டங்களிலிருந்து டெங்குநோய் தொற்றிய நிலையில் கிளிநொச்சிக்கு வந்து சிகிச்சை பெற்றவர்களாவர். இவர்களுள் ஒருவர் டெங்குநோய் காரணமாக மரணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது .

மேலும் சராசரியாக நாளொன்றிற்கு டெங்குநோய்த் தொற்றுக்கு ஆளாகிய நிலையில் குறைந்தது மூன்றுபேர் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்குத் தினமும் வெளி மாவட்டங்களிலிருந்து வந்து கொண்டிருக்கிறார்கள்.

இவ் நெருக்கடியான நிலையில் மாவட்டத்தின் மக்களைப் பாதுகாக்கும் வகையில் கிளிநொச்சி சுகாதாரப் பிரிவினர் சிறு செய்திக் குறிப்பு ஒன்றினை வெளியிடுள்ளனர்.

குறித்த செய்திக் குறிப்பில் புகையிரத நிலையங்கள், பேருந்து நிலையங்கள், வைத்தியசாலைகள், உணவகங்கள் ஆகிய இடங்களை பொதுமக்கள் பாவிக்கும்போது அவ்விடங்களில் டெங்கு நுளம்புகள் காணப்படுமாயின் அவை டெங்கினால் பாதிக்கப்பட்ட நோயாளர்களின் டெங்கு வைரசு கலந்த இரத்தத்தினை உறிஞ்சிக் கொள்ளலாம்.

இவ்வாறு டெங்கு வைரசின் தாக்கம் காரணமாக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களிடம் இருந்து டெங்கு வைரசு கலந்த இரத்தத்தினைக் கிளிநொச்சியில் காணப்படும் டெங்கு நுளம்புகள் உறிஞ்சுமாயின், அந்த நுளம்புகளினால் தாக்கப்படும் அனைவரும் டெங்குநோயாளிகளாக நேரிடும். இதனால் கிளிநொச்சி மாவட்டத்தினுள்ளே டெங்கு காட்டுத் தீ போல அதிதீவிரமாகப் பரவத்தொடங்கும்.

இந்த அபாய நிலையைக் கருத்திற் கொண்டு இம்மாதம் 16 ஆம் திகதியிலிருந்து 3 தினங்களுக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் டெங்கு நுளம்புகள் இனங்காணப்பட்ட பொது இடங்களில் விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புகள் தத்தமது பகுதி பொதுச் சுகாதார பரிசோதகர்களுடன் தொடர்பு கொண்டு இந்த உயிர் காப்புப் பணியில் ஈடுபட முன்வருமாறு வேண்டுகிறோம் என குறிப்பிடப்பட்டுள்ளது. (8-312)

## பாதுகாப்பான புகையிரதக் கடவையை அமைக்க வவுனியா அரசாங்க அதிபருடன் கலந்துரையாடல்



வவுனியா தாண்டிக்குளத்தில் பாதுகாப்பான புகையிரத கடவையொன்றினை அமைத்து தருமாறு அப்பகுதி மக்கள் புகையிரதத்தினை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது புகையிரத கடவையில் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்துவதற்கு மூவரது பெயரை கிராம மக்கள் தரும் பட்சத்தில் அவர்களை தற்காலிகமாக நியமிப்பதாக பொலிஸார் வழங்கிய வாக்குறுதியை அடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டிருந்தது.

இந் நிலையில் நேற்று முன்தினம் மாலை வவுனியா அரசாங்க அதிபரை வட மாகாண சபை உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தலைமையிலான பொதுமக்கள் குழுவொன்று அரசாங்க அதிபருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். இதன்போது வீதி அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகள், பொலிஸார், புகையிரத திணைக்கள அதிகாரிகள் கலந்துகொண்டிருந்தனர். இக் கலந்துரையாடலில் குறித்த புகையிரத கடவையில் உள்ள ஆபத்துக்கள் குறித்து கலந்துரையாடப்பட்ட நிலையில் குறித்த வீதி சமிக்ஞையின் ஒளி மற்றும் ஒலியை அதிகரிப்பது, புகையிரத கடவையின் இருபுறமும் வீதியில் தடையை ஏற்படுத்துதல் போன்ற முடிவுகள் எடுக்கப்பட்டதுடன் தற்காலிக கடமையில் ஈடுபடுவோரின் பெயர்களை சிவில் பாதுகாப்பு குழுவின் கடித தலைப்பில் பொலிஸாரிடம் வழங்கவும் இணக்கம் காணப்பட்டிருந்தது.

இந் நிலையில் குறித்த புகையிரத கடவையினை அரசாங்க அதிபர் உட்பட சந்திப்பில் கலந்துகொண்ட அனைவரும் சென்று பார்வையிட்டிருந்தனர். (8-250)




## உதவி வழங்கல்



முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு 5 இலட்சம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வன்னி ஊடகவியலாளர் சங்கத்தின் முல்லைத்தீவின் ஒழுங்குபடுத்தலில் யாழ். இந்துக்கல்லூரியின்பழைய மாணவர் சங்கத்தின் விக்டோரியா அவுஸ்திரேலியா கிளையின் நிதிஅனுசரணையுடனும்வட்டுக் கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் அனுசரணையுடனும் தாய், தந்தை இழந்த வறிய மாணவர்களுக்கு அமைதிபுரத்தில் 27 மாணவர்களுக்கு சப்பாத்தும் 61 மாணவர்களுக்கு புத்தகப்பையும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 22 மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகளும் மாங்குள கிராம சேவகர் அலுவலகத்தில் வைத்து பழைய மாணவர் சங்கத்தின் உறுப்பினர்களினால் மாணவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

## இயற்கையை வென்ற மடு அன்னை



மன்னார் மடு திருத்தலத்தின் வருடாந்த ஆவணி மாத திருவிழா நேற்றுக் காலை கொழும்பு மறை மாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை தலைமையில் திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

திருப்பலியை தொடர்ந்து திருச்சொரூப பவனி இடம் பெற்று திருச்சொரூப ஆசிர் வாதத்துடன்நிறைவடைந்துள்ளது. இதன்போது நாட்டின் பல பாகங்களில் இருந்தும் சுமார் 7 இலட்சம் பக்தர்கள் கலந்து கொண்டு மடு அன்னையின் ஆசியைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

திடீரென மழை பெய்து மடுத்திருத்தலமே வெள்ளத்தில் மூழ்கி திருவிழா நடைபெறுமா எனும் அச்சம் பக்தர்கள் மத்தியில் சூழ்ந்திருந்த நிலையில் மடு அன்னையின் அருளால் எதிர்பாராத விதமாக மழை ஓய்ந்து இயற்கை அமைதியானது. பக்தர்கள் மத்தியில் மிகுந்த உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் வரலாறு காணாத மக்கள் தொகை ஆலய வளாகத்தை சூழ்ந்திருந்த நிலையில் எந்த ஒரு இடரும் நேராத வண்ணம் திருவிழா திருப்பலி இடம் பெற்றுள்ளமை மக்கள் மத்தியில் மிகுந்த நின்மதியை ஏற்படுத்தியுள்ளதுடன் மடு அன்னையின் மகத்தான அற்புதமாக எண்ணி பக்தர்கள் திருச் சொரூப ஆசீர்வாதத்தின் போது கண் [illegible] குறிப்பிடத்தக்கது (3-8)

## "ஆடி உழவுதேடி உழு"

### நெற் செய்கையாளர்களுக்கான விவசாயத் திணைக்களத்தின் கோரிக்கை

(வவுனியா)

"ஆடி உழவுதேடி உழு" என்பது பண்டைய பழமொழி. தற்போது வவுனியா மாவட்டத்தில் பெய்து வரும் மழை ஆடி உழவு மேற்கொள்ள சாதகமாகவுள்ளது. எனவே வவுனியா மாவட்டத்தில் வசிக்கும் நெற் செய்கையில் ஈடுபடும் அனைத்து நெற் செய்கையாளரும் இவ் ஆடி மழையைப் பயன்படுத்தி நெல் வயல்களை உழும் வண்ணம் வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.

ஆரம்ப மழையுடன் நிலப் பண்படுத்தலை மேற்கொள்ளும் போது நிலப் பண்படுத்தலுக்கென மேலதிக நீர் [illegible] தடுக்க [illegible] குளத்துநீர் வீண் விரயமாகாது தடுக்கப்படும்.

சிறந்த களைக் கட்டுப்பாட்டினை மேற்கொள்ள வேண்டுமாயின் 1 ஆவது மற்றும் 2 ஆவது நிலப் பண்படுத்தல்களுக்கிடையில் குறைந்தது 1 மாதகால அவகாசம் பேணப்பட வேண்டும். எனவே இக் காலப் பகுதியில் உழவுசெய்வதன் மூலம் அக்கால இடைவெளியைச் சிறப்பாகப் பேணி களைக் கட்டுப்பாட்டை வினைத்திறனான முறையில் மேற்கொள்ளலாம்.

தற்போது உழவு மேற்கொள்வதால் களைகளின் வேர்கள் அறுந்து களைகளும் களைவிதைகளும் பீடைகளின் வாழ்க்கை வட்டப் பருவங்களும் நிலமேற்பரப்பையடையும். மழையின் போது வயலில் தேங்கும் நீரில் அழுகியும் சூரியவெப்பத்தினாலும் இவை அழிவடையும்.

ஆடி உழவு உழுவதனால் 1 ஆவது மற்றும் 2 ஆவது நிலப் பண்படுத்தல்களுக்கிடையில் பேணப்படக்கூடியகால இடைவெளியினால் மண்ணின் காற்றோட்டம் மற்றும் நீரினைப் பற்றி வைத்திருக்கும் திறன் என்பன அதிகரிக்கும். வயலில் காணப்படும் சேதனப் பொருட்கள் போதியகால உழவு இடைவெளியில் உக்கலடைந்து பசளையாகும் என விவசாயத் திணைக்களத்தினர் ஆலோசனை வழங்கியுள்ளனர். (3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நேற்று முன்தினம் கிளிநொச்சியில் இடம் பெற்ற சர்வதேச கூட்டுறவாளர் தின நிகழ்வுகளின் பதிவுகள் சில...... (படங்கள்- நிபோஜன்)

# யுத்தகாலத்தில் கூட்டுறவாளர்களது பங்கு அளப்பெரியதாக இருந்தது



யுத்த காலத்தில் கூட்டுறவுப் பணியாளர்களின் பங்கு அளப்பெரியதாக இருந்தது என சிறுவர் மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச கூட்டுறவு தின நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக பா.உ.சிறிதரன் மற்றும் அனந்தி சசிதரன், கூட்டுறவு ஆணையாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதன்போது கூட்டுறவு தினப் போட்டியில் பங்குபெற்றி வெற்றி பெற்ற மாணவர்களிற்கு பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், கூட்டுறவு பணியில் ஈடுபட்டவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய அனந்தி சசிதரன், தெரிவித்ததாவது.

யுத்த காலத்தில் கூட்டுறவு பணியாளர்களின் பங்கு அளப்பெரியதாக இருந்தது. யுத்தம் இடம்பெற்ற சூழலில் காயமுற்றவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் என பலருக்கும் பல்வேறு உதவிகள் இந்த கூட்டுறவு சங்கங்களால் முன்னெடுக்கப்பட்டது, குறிப்பாக வடக்கில் கூட்டுறவு சங்கங்கள் மிகவும் சிறப்பாக இயங்கின என்றார்.

தற்போது நான் அமைச்சாராக பொறுப்பெடுத்துள்ள நிலையில் பல்வேறு சவால்களிற்கு முகம் கொடுக்கின்றேன். வழங்கப்பட்ட அமைச்சு பதவியும் எப்போது பறிக்கப்படும் என்ற அச்சம் உள்ளது. இருந்தாலும் நான் ஒரு பெண்ணாக சாதிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளேன். யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களிற்கு எவ்வாறு உதவலாம் என்பது தொடர்பில் இன்று அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்களுடன் சற்றுமுன் பேசியுள்ளேன். எவ்வாறாயினும் நான் ஒரு பெண்ணாக இருந்து எதையாவது சாதிக்க வேண்டும் என குறிப்பிட்டிருந்தார். (8-312)

# சட்டவிரோத மீன்பிடி வலைகள் பறிமுதல்

பூநகரி கௌதாரி முனையில் இருந்து குஞ்சுப்பரந்தன் வரையுள்ள கடல் நீரேரிப் பகுதியில் தடை செய்யப்பட்ட தங்கூசி வலை, இறால் கூடுகள் என்பவற்றை பொலிஸாரின் உதவியுடன் பூநகரி கடற்றொழிலாளர் திணைக்களத்தினர் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இதன்போது நூற்றுக்கும் மேற்பட்ட வலைகள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் இத் தொழிலில் ஈடுபட்ட இருவரைக் கைது செய்துள்ளதாகவும் இத் தொழிலில் ஈடு படுபவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பூநகரி பிரதேச கடற்றொழில் கூட்டுறவு பரிசோதகர் எம் நக்கீரன் தெரிவித்துள்ளார். (8-84)

# தமிழர்களிடம் இருந்த கரவலைப்பாடுகள் தற்போது தென்னிலங்கை மீனவர்களிடம்

## வடமாகாண சபை உறுப்பினர் து. ரவிகரன் தெரிவிப்பு



கடந்த காலத்தில், 1983 வரை தமிழர்களிடம் இருந்த கரவலைப்பாடுகள் இன்று தென்னிலங்கை மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களங்களின் முறையற்ற நடவடிக்கைகளே காரணம் என வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

சிறு தொழிலாளர்களுக்கு இறங்குதுறைகள் போதாத நிலைமை முல்லை கரையோர சில இடங்களில் நிலவுகின்றது. இருந்தும் கரவலைத் தொழில்களுக்காக முன்னைய காலத்தில் பாடுகள் வழங்கப்பட்டதில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியது 25 தொடக்கம் 40 வரையான தொழிலாளர்களின் வேலை வாய்ப்பாகும்.

தற்போது தென்னிலங்கையில் இருந்து கையூட்டுக்கள் கொடுத்து அனுமதிகளைப் பெற்று வருபவர்கள் உழவு இயந்திரத்தின் மூலம் கரவலை இழுக்கின்றனர். இதனைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் கடற்றொழில் திணைக்களங்கள் இருக்கின்றன.

கரவலைச்சட்டமானது ஆகக்கூடியது 2700மீற்றர் தூரம் வரையே வளைக்கலாம். இது மனித வலு மூலம் இழுக்கக்கூடியது. தற்போது மனித வலுவை புறந்தள்ளி உழவு இயந்திரத்தின் மூலம் 6000 மீற்றருக்கு மேல் கரவலை வளைக்கின்றார்கள். இதனால் தொழிலாளர்கள் வேலை வாய்ப்பின்மை தனிநபர் வாழ்வாதார பாதிப்பு மற்றும் நீண்ட தூரத்துக்கு வலை வளைப்பதால் சிறு படகு தொழிலாளர்கள் பாதிப்பு, கடலினும், மீன் உற்பத்திகளில் பாரிய பின்னடைவு, பாசிகள், சேறுகள், சிப்பிகள், சங்குகள் அதனோடிணைந்த கடல் தாவரங்கள் அழிக்கப்படுகின்றன.

உழவு இயந்திரத்தின் மூலம் கரவலை இழுப்பதால் தரையில் மண்ணரிப்பை தடுக்கவல்ல அடம்பன் கொடி, எருக்கலைகள், இராவணன் மீசை என்று சொல்லப்படும் தாவரங்கள் அழிக்கப்படுகின்றன.

சட்டவிரோத இத்தொழில் முறைகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டியவை என பலருக்கும் முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் சார்பாக வேண்டுகோள் விடுத்தும் இன்றுவரை இதற்கான தீர்வுகள் இல்லை.

சரியான தீர்வுகள் காணப்பட்டு இவை நிறுத்தப்படாவிட்டால் தமிழ் மீனவர்களின் வாழ்க்கை கேள்விக்குறியே என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (8)




வவுனியா, தரணிக்குளம் கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு வவுனியா மாவட்ட மாகாணசபை உறுப்பினரின், 2017இற்கான வருடாந்த நிதியொதுக்கீட்டில் ஒலிபெருக்கி உபகரணத்தொகுதி வழங்கி வைக்கப்பட்டுள்ளது



மானிப்பாய் நவாலி நாச்சிமார் கோவிலடி வீதியில் கொட்டப்படும் குப்பைகளால் இவ் வீதியினால் செல்லும் பாடசாலை சிறுவர்கள் மற்றும் வாகனங்களுக்கு இடையூறாக இருப்பதுடன் இவ்விடத்தில் டெங்கு பரவும் அபாயமும் காணப்படுகிறது. (படங்கள்- ஓமந்தை செய்தியாளர்)




யாழ். எய்ட்பால் முன்னாள் போராளிகள், பொது மக்களுக்கான வாழ்வாதார உதவிகளாக நல்லின பசு மாடுகள், ஆடுகள், கோழிகள் என பல தரப்பட்ட உதவிகள் அண்மையில் முள்ளியவளையிலும் கிளிநொச்சியிலும் வழங்கி வைக்கப்பட்டன.

# வாகன விபத்து

அரியாலை தபாற்கட்டுச் சந்தியில் இடம் பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நேற்றுக் காலை 9 மணியளவில் சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிளை குறுக்கே வந்த பட்டாவாகனம் மோதியதில் இவ் விபத்து இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் சாவகச்சேரி தெற்கு மடத்தடி நிலையத்தைச் சேர்ந்த ராஜகுணசிங்கம் கபிலேஷன் (வயது-24) என்ற இளைஞரே காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைப் பதிக்கு நேராய் நடந்து போவோம்

நல்லூரைக் கும்பிட்டு நீ பாடுஅதனாலேநாட்டில்உள்ள பிணிகள்ஓடும்என்றுசிவயோக சுவாமிகள் சொன்ன நற்சிந்தனைப் பாடல்கள் நல்லூர் கந்தன் தான் நல்லூர் என்ற உட்பொருளை உணர முடிகின்றது. எந்நாளும் நல்லூரை வலம் வந்து வணங்கினால் இடர்கள் எல்லாம் போமே. சிவயோக சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல்கள் நல்லைக் கந்தன் தான் நல்லூர். நல்லூர் தான் நல்லைக்கந்தன் என்பதை பலபாடல்கள் உணர்த்துகின்றன.

நல்லூரான் திருவடியை நான் நினைத்த மாத் திரத்தில் எல்லாம் மறப்பேனடி கிளியே இரவு பகல் காணேனடி! நல்லூர்க் கந்தன் தேரடி தான் செல்லப்பா சுவாமிகள் ஊடாக சிவயோக சுவாமிகளை நமக்கு நாம் உய்ய குருநாதனாக தந்தது.

நல்லூரில் தேரடியில் நான் கண்டு போற்றிசைத்தேன். சொல்லும் தரமோ சுகம். நல்லூர்க் கந்தன் தேரடி தான் நல்லமருந்தொரு குரு மருந்தை நல்லைக் குமரன் நமக்கு நல்லூரில் தந்தான். அருமருந்தான குருமருந்தான சிவயோக சுவாமிகள் தான் பெற்ற தெய்வீக ஞானத்தை நற்சிந்தனையாக தந்தருளினார்.

நல்லை நகர் தந்த ஆறுமுகநாவலர் பெருமானுக்கு அடுத்த குருநாதனாக நல்லூர் தந்த குருநாதன் சிவயோக சுவாமிகள். சுவாமிகளால் அருளப்பெற்ற நற்சிந்தனை குருநாதனின் மகா வாக்கியங்கள். குருநாதன் சொன்ன சீலத்தை மெள்ளத் தெளிந்தறிவார் சிவயோகிகளே என்று அருணகிரியார் கந்தர் அலங்காரத்தில் சொன்னவாறு 20ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிவயோகியாக போற்றப்பட்டவர் நாவலப்பிட்டியில் ஆத்மஜோதி சஞ்சிகை மூலம் அகில உலகிற்கும் ஆத்மீக நெறியை சித்தர்கள், யோகிகள், ஞானிகளின் அருள் உபதேசத்தை, அவர்களின் வரலாற்றை உலகெல்லாம் விளங்க வைத்த பெருந்தகை. இன்று இலங்கையில் மலையகத்தில் சைவநெறிதழைத்தோங்கி மிகுசைவத்துவறை விளங்கி நிற்கின்றது என்றால் இதற்கு முழுமையானவர் ஆத்மஜோதி நா.முத்தையா ஆசிரியரே.

சிவயோக சுவாமிகளால் ஆசீர்வதிக் கப்பட்ட சிவயோகி எமது ஆத்மீக வழிகாட்டியாக திகழ்ந்தவர். 1964 ஆம் ஆண்டு கொழும்பில் திவ்ய ஜீவன சங்கத்தின் பிரார்த்தனை நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய ஆத்மஜோதி நா.முத்தையா ஆசிரியர் விடுத்த வேண்டுகோள் சிவயோக சுவாமிகளின் திருவடிக் கலப்பை மையாக வைத்து நல்லூர்க் கந்தன் தேர்த் திருவிழாவையொட்டி நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் இருந்து நல்லூர்க் கந்தன் ஆலயத்திற்கு பஜனைப் பாத யாத்திரையை நடத்த வேண்டும் என்று ஆலோசனை கூறியதுடன் நில்லாது ம.நமசிவாயம் அவர்களையும் அடியேனையும் இணைத்துக் கொண்டு தானே முன்வந்து 1964ஆம் ஆண்டு நயினை நல்லூர் திருத்தலம் பஜனைப் பாத யாத்திரை ஆத்மஜோதி நா. முத்தையாவால் ஆரம்பிக்கப்பட்டு சிவயோக சுவாமிகள் சொன்னவாறு நல்லைப் பதிக்குநேராய்நடந்துபோவோம். நாமெல்லாம் வாரீர் சீராய் என்றவாறு கடந்த 52 ஆண்டுகளாக நயினை நல்லூர் திருத்தலப் பஜனைப் பாத யாத்திரை நடைபெற்று வருகின்றது.

சிவயோக சுவாமிகள் சொன்னவாறு சில நற்சிந்தனை வாசகங்கள் அன்றும் இன்றும் என்றும் வழி நடத்துகின்ற மகா வாக்கியங்கள். ஓடி வாடா! தொண்டா ஓடி வாடா! ஒரு பொல்லாப்புமில்லை என்று ஓடி வாடா! தேடி வாடா! தொண்டா தேடி வாடா! சிவனடியார் மனம் களிக்கத் தேடி வாடா! பாடி வாடா! தொண்டா பாடிவாடா! (பஜனை) பரமபதியொன்றெ ன்று பாடி வாடா! நாடி வாடா! தொண்டா நாடி வாடா! நாங்கள் சிவமென்று சொல்லி நாடி வாடா !கூடி வாடா! தொண்டா கூடி வாடா! குழந்தைகளோடு சேர்ந்து கூடி வாடா! சூடிவாடா! தொண்டா சூடி வாடா! தூய நீறு சூடிக் கொண்டு ஓடி வாடா! ஆடிவாடா! தொண்டா ஆடிவாடா! அஞ்செழுத்தைநாவிற்கொண்டு ஆடிவாடா! பஜனைப் பாத யாத்திரையை சுவாமிகள் அங்கீகரித்துள்ளார்கள் என்பது வெளிப்படையாக தெரிகின்றது.

ஒரு சில ஆண்டுகளுக்கு முன் நல்லைக் கந்தன் தேரோடும் வெளி வீதி அருளோடு கூடிய வழிபாட்டிற்கு இடைஞ்சலான, ஆசார மற்ற செயற்பாடுகள் கட்டுப்படுத்த முடியாத ஒரு நிலை காணப்பட்டது. இந்த செயற்பாட்டை சட்டம் தடுக்காமல் சித்தர்கள், ஞானிகள் நடமாடிய தெய்வீக பூமி என்ற அருள் அவை அனைவரையும் தன் வசப்படுத்தியது.

நல்லைக் கந்தன் அருள் அலையில் அனைவரும் அள்ளுண்ட நிலையாம் ஓதிய கல்வியும் எம் அறிவும் தாமே பெற, வேலவர் தந்ததனால் பூமேல் மயல் போய் அறமெய்ப் புணர்வீர் நாமேல் நடவீர்! நடவீர்! இனியே கந்தர் அனுபூதியில் சொன்னவாறு நல்லைக் கந்தன் வெளி வீதியும் அருளொடு பிரார்த்திக்கின்ற தெய்வீக நிலைக்கு அருள் மயமாகிவிட்டது.

குருநாதன் சொன்ன சீலத்தை மெள்ளத்தெளிந்து சிந்தித்தால் மகா மந்திர நற்சிந்தனை வாசகங்கள் நமக்கு புலப்படாமல் வழி நடத்துகின்றது என்பதை உணரலாம்.

ஒழுக்கம் விழுப்பந் தரும் தம்பிமாரே! ஓமென்று சிந்தை செய்வீர் தம்பிமாரே! அழுக்காறவாவெகுளி தம்பிமாரே! ஆன்மாவைப் பந்திக்குந் தம்பிமாரே! வழுக்கி விழுந்தாலும் தம்பிமாரே! மலரடியைச் சிந்தை செய்வீர் தம்பிமாரே! பழுத்த அடியாருடன் தம்பிமாரே! பாடிப் பணிய வேண்டும் தம்பிமாரே! மூப்பு வந்தடையுமுன்னே தம்பிமாரே! முழுதும் அறிய வேண்டும் தம்பிமாரே! நாப்பிளக்க பொய்யுரைத்துத் தம்பிமாரே! நாட்டிற்பொருள் தேட வேண்டாம் தம்பிமாரே! ஆதி யந்தம் நமக்கில்லைத் தம்பிமாரே! ஆன்மாவே நாங்கள் காணும் தம்பிமாரே! ஓதி உணர வேண்டும் தம்பிமாரே! உய்ய வழியதுகாணும் தம்பிமாரே! சாதி சமய பேதம் தம்பிமாரே! சங்கற்பமென்றறிவீர் தம்பிமாரே! வாழி வாழி சிவன் நாமந் தம்பிமாரே! மனசாரச் சொல்லுங்கள் தம்பிமாரே! வாழி சிவனடியார்கள் தம்பிமாரே! மன்னவனுஞ் செங்கோலும் தம்பிமாரே!

நல்லைக் கந்தன் வெளி வீதி இன்று ஆன்மீகத் தொண்டர்களின் முழுக் கட்டுப்பாட்டில் வந்துள்ளது என்றால் வாழி சிவனடியார்கள் தம்பிமாரே! மன்னவனும் செங்கோலும் தம்பிமாரே! சிவயோக சுவாமிகள் இன்றைய இளம் சமுதாயத்தை நல்வழிப்படுத்த சொன்ன நற்சிந்தனை வாசகங்கள் நல்லூரான் திருவீதியில் எல்லாம் அற என்னை இழந்த நலம் சொல்லாய் முருகா சுரபூபதியே என்று அருணகிரியார் அனுபூதியில் சொன்னவாறு தம்பிமார்கள் கூட்டம் பழுத்த அடியார்களுடன் கூடும் அன்பினில் கும்பிட்டு நிற்கும் தெய்வீகக் காட்சி தினமும் நல்லூரான் திருவீதியில் காண்பதற்கு திருவருளும் குருவருளும் ஒன்றிணைந்து அருள்வழி காட்டி நிற்கின்றது.


**நயினை நாகமணி கோபாலகிருஷ்ணன்**



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் உள்ள அன்பொளி கல்வியகத்தில் தரம் 5 புலமைப்பரிசில் வகுப்பில் கற்ற ஒரு தொகுதி மாணவர்களை வாழ்த்தி ஆசி வழங்கும் நிகழ்வு அண்மையில் நிறுவன இயக்குநர் மு.வே. அன்பழகன் தலைமையில் நடைபெற்றது. இதில் விருந்தினர்களாக யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை முன்னாள் அதிபர் தியாகலிங்கம், தென்மராட்சி கல்வி வலய வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி க.க. ஈஸ்வரன்,கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் ஆகியோர் கலந்து கொண்டனர். நிறுவனத்தில் கல்வி கற்ற மாணவர்கள் தமக்குப் போதித்த ஆசிரியர்களிடம் ஆசி பெற்றனர். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.



## நல்லூர் கந்தனுக்கு இன்று கஜவல்லி மஹாவல்லி உற்சவம்



## இந்துவாக வாழ்வோம்

அரஹரோஹரா அரஹரோஹரா
அரஹரோ ஹரா முருகா அரஹரோ ஹரா
அரஹரோ ஹரா நல்லை ஆறுமுகனே
அணங்கு தெய்வயானை வள்ளி நாதனே
(அரஹரோஹரா)

திருமதி சாந்தா வீரசிங்கம்
சின்மயா மிஷன்

## அடி பணிந்தோம் அருள் புரிவாய் முருகா

நல்லூரில் வீற்றிருக்கும் கந்த பெருமானே
நம்பினோர் துயர் களையும் எங்கள் பெருமானே
வண்ண மயில் ஏறிவரும் கதிர் வேலவனே
வணங்கினோர் கலி தீர்ப்பாய் வடிவேலவனே
பார் போற்றும் தெய்வம் நீயே முருகையா
பார்வதியாள் பாலகனே பால குமரா
நீ அள்ளி வீசும் அருளைப் பெற ஆறுமுகனே
நின் அடி பணிந்தோம் அருள் புரிவாய் திருமுருகா

சி.கஜா
முரசுமோட்டை.

## இடர் களைந்திடு கந்தனே

சித்திரத்தேர் எழில் பாரீர்-எங்கள்
நல்லைக் கந்தன் தரிசனம் பாரீர்
பக்தர் கூட்டம் அலை மோதிட
பாரில் சித்த மகிழ்வோடு வடம் பிடிக்க
வேதியர்கள் மந்திரமோத - உடன்
நாதஸ்வர மேளங்கள் முழங்க-உந்தன்
தேரேறும் காட்சியைக் காண...
கந்தனே சிங்கார வேலனே...
காத்திருந்தோம் ஐயா கேளீர்...
துவண்ட உள்ளங்களின் துயரைப் பாரீர்
அவர்கள் படும் துன்பங்களை அறிவீர்
தேரேறி வந்து எம் இடர் களைந்திடு - கந்தனே

பா.து.மதனபாரதி
அல்வாய்.

## மனமிரங்க மாட்டாயோ மாலவனின் மருமகனே

பண்ணிசையால் துதித்து நின்றோம் நல்லைப் பதி நாயகனே
நாட்டினிலே தமிழனுக்கோர் நல்ல தீர்வு பெற வேண்டுகிறோம்
கேட்டாயோ வேல் முருகா கேடுதான் நம் விதியோ
மனமிரங்க மாட்டாயோ மாலவனின் மருமகனே
மனத்தால் மந்தரித்தால் மாயைகள் மறைந்திடுமே
மாதுமை பாலகனே எங்களை ஆண்டருள வேண்டுமையா
சிந்தையில் உனை நினைத்தால் தேனருவி பெருக்கெடுக்கும்
பந்தபவம் தீர்ப்பவனே பதமலரில் சேர்ப்பவனே
தேவர் சிறை மீட்டவனே செந்தமிழ் பா கேட்டவனே
நீயே என் துணைவன் நிலைத்த துணை ஒருவரில்லை
நல்லை நகர பதியே கதியெனவே ஓடிவந்தேன்
தங்கரதம் ஊர்ந்துவரும் முருகா எனைப் பாரையா
எங்கள் குறை தீர்க்க நீ விரைந்தோடி வாராயோ.

கலாபூஷணம்.
க.லோகேஸ்வரன்,
தொல்புரத்தூர்.

## நல்லைக்கந்த சந்தப் "பா"



உலக முய்யவே வுதித்த கொற்றவா
உன்ன ரும்பெரும் பேறு வற்றுமா
கலக்க மின்றியே கவிதை யாத்திடக்
கண்ட விப்பிறப் பொன்று பற்றுமா
விலையி லாதொரு நிலையிற் றோன்றிடும்
வித்த காவுயர் வெற்றி வேலவா
நிலையி லாதவெம் நிலைமை மாற்றுவாய்
நீதி தேவனே நல்லைக் கந்தப்பா!

கலாபூஷணம். சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞாயிறு அல்ல சனிக்கிழமை

பிரதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் நல்லூர் மத்தியஸ்த சபை அமர்வு. நல்லூர் முருகன் ஆலய தேர்த்திருவிழாகாரணமாக 20.08.2017 இல் நடைபெற மாட்டாது. இத் தினத்திற்குப் பதிலாக 19.08.2017 சனிக்கிழமை மாநாடு இடம்பெறுமென மத்தியஸ்த சபைத் தவிசாளர் நா. நித்தியானந்தன் அறிவித்துள்ளார். (இ

## நூல் வெளியீட்டு விழா

பாசையூர் கவிஞர் இன்சுவைக் கவிமணி பெஞ்சமின் கிறிஸ் தோப்பரால் எழுதப்பட்ட ஞான சௌத்திரி நாட்டுக் கூத்து நூல் வெளியீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பாசையூர் பங்கு மண்டபத்தில் பங்குத் தந்தை லியோ ஆம்ஸ்றோங் தலைமையில் நடைபெறும். இந் நிகழ்வில் பிரதம விருந் தினராக தேசிய ஒன்றிணைப் பிற்கும் நல்லிணக்க நீதிக்கு மான அமைச்சின் செயலாளர் வே. சிவஞான சோதி, சிறப்பு விருந்தினராக சிறுவர் விவகார இராஜாங்க அமைச் சின் செயலாளர் இமெல்டா சுகுமார் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10-107)

## மரக்கன்றுகள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

யாழ். கந்தர்மடம் நொதேன் வாரியர்ஸ் விளையாட்டுக்கழகத்தினால் ஜே/102 பிரிவு சமுர்த்தி அலுவலர் பணிமனையில் கடந்த 12 ஆம் திகதி பயன் தரு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் நொதேன் வாரியர்ஸ் விளையாட்டு கழக தலைவர் தி.ரதீபன், கழக உறுப்பினரான கண்ணன், துவாரகன் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர் க. விமல்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-7)

## நீதியமைச்சர் விஜயதாஸ மீது ஐ.எஸ்.தீவிரவாதிகள் இலக்கு

### சிங்கள ராவய குற்றச்சாட்டு



(கொழும்பு)

நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டதன் பின்னணியில் ஐ.எஸ். ஐ.எஸ் தீவிரவாத அமைப்பு இருப்பதாக சிங்கள ராவய அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் மாகல் கந்தே சுதத்த தேரர் இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

"நீதியமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படுவதன் பின்னணி தொடர்பில் நாம் ஆராய்ந்து பார்த்தோம்.

அந்த வகையில், ஐ.எஸ். ஐ.எஸ் தீவிரவாத அமைப்புடன் தொடர்புடையவர்கள் இலங்கையில் இருப்பதாகவும், நாட்டில் சில முஸ்லிம் அடிப்படைவாத குழுக்கள் இருப்பதாகவும் நீதியமைச்சர் அண்மையில் நாடாளுமன்றில் தெரிவித்திருந்தார்.

நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ அவ்வாறு கருத்து தெரிவித்ததன் காரணமாகவே அவருக்கு எதிராக அடிப்படைவாத குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சிலர். அவருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டு வர முற்படுகின்றனர்"

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியானது தேசிய சிந்தனை கொண்டவர்களுக்கு இடமளிக்கும் கட்சி கிடையாது. அவ்வாறான கொள்கையினை உடையவர்களுக்கு எதிராகவே ஐக்கிய தேசியக் கட்சி இருக் கின்றது.

ஆகையினால்தான் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வர முற்படுவதாக" மாகல் கந்தே சுதத்த தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## கலந்துரையாடல்

குருநகர் றெக்கிளமேசன் சனசமூக நிலையத்தின் பிரதேச அபிவிருத்தி தொடர் பான கலந்துரையாடல் நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 6 மணிக்கு றெக்கிளமேசன் சனசமூக நிலையத்தின் தலைவர் ம. இம்மானுவேல் தலைமையில் நடைபெறும்.

இக் கலந்துரையாடலில் சனசமூக நிலைய அங்கத் தவர்கள் நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு சனசமூக நிலையத் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-10-109)

## தேரும் தீர்த்தமும்

(மந்துவில்)

மீசாலை இலந்தைக் கூடல் ஸ்ரீ கங்காணியர் முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 12 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து இடம் பெற்று வருகிறது.

இத் திருவிழாவில் எதிர் வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (இ-10-104)

## எழுத்தாளர்களை ஊக்குவிக்க பிரதேச செயலகம் நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பண் பாட்டலுவல்கள் திணைக் களத்தின் அனுசரணையுடன் வறுமைக் கோட்டுக்குட்பட்ட எழுத்தாளர்களை ஊக்குவிக் கும் முகமாக அவர்களின் கையெழுத்துப் பிரதியாகவுள்ள ஆக்கங்களைப் பதிப்பு செய்வதற்கு நல்லூர்ப் பிரதேச செயலகத்தினால் நிதியுதவி செய்யப்படவுள்ளது. எனவே அவ்வாறான எழுத்தாளர்கள் தங்களின் பிரதிகளுடன் கிராம அலுவலரின் வருமான சிபாரிசுடன் தமது விண்ணப்பங்களை நல்லூர்ப் பிரதேச செயலகக் கலாசாரப் பிரிவுக்கு 31.08.2017 க்கு முன்பாக சமர்ப்பிக்கும் படி நல்லூர்ப் பிரதேச செயலர் கேட்டுள்ளார். (இ

## ஒருவர் கொலை! இருவர் கைது

கடந்த வருடம் நவம்பர் மாதம் வெல்லம்பிட்டிய பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பகுதியில் கூரிய ஆயுதங்களைப் பயன்படுத்தி ஒருவ ரைக் கொலை செய்தமை தொடர்பில் இரு சந்தேக நபர் கள் நேற்றுக் கைது செய்யப் பட்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்கள் கரந்தெனிய பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர். (இ-7)


### கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் (புதுக்கோவில்)



பொதுக்கூட்ட அறிவித்தல்-2017

ஆலய யாப்பு விதிகளுக்கமைவாக

திகதி: 27.08.2017 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: மாலை 3 மணி
இடம்: ஆலய மண்டபம்
தலைவர்: திரு.நா. சண்முகரத்தினம்

நிகழ்ச்சி நிரல்

- தேவாரம்
- புதிய நிர்வாகத் தெரிவு
- நன்றியுரை

(9876)

நா. சண்முகரத்தினம்
தலைவர்

அ.ஸ்ரீதரன்(J.P)
செயலாளர்



### கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பூசம்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:O/L கட்டார்
தொ.இ: B/7609

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: மூலம்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்
தொ.இ: B/7611

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 54 சூரிசெவ் 12 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L/அரச தொழில்
தொ.இ: B/7614

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 26
தகைமை/தொழில்:BSc IT/அரச தொழில்
தொ.இ: B/7616

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 15 சூரிசெவ் 5 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:BA
தொ.இ: G/7612

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: செவ் 4 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:BBA/தனியார் தொழில்
தொ.இ: G/7613

பிறப்பு:. 1988 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: செவ் 2 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: G/7615

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: செவ் 12 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:IT/பொறியியலாளர்
தொ.இ: G/7618

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



### அழைப்பு

யாழ் விருது (2016) நாயகன்

உயர்திரு. திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்களின்

(கிளிநொச்சி மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபரும் வடக்கு மாகாண சபையின் பொது நிருவாக அமைச்சின் முன்னாள் செயலாளரும் மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் தலைவரும்)

பணிநயப்பும், "இமயம்" பாராட்டு விழா மலர் வெளியீடும் திரு. தி. இராசநாயகம் அவர்களின் பெயரில் கல்வி உதவி அறக்கட்டளை ஆரம்பித்தலுமான நிகழ்வு

**காலம்**

19.08.2017 (காலை 10.00 மணி)

**இடம்**

மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்ல விளையாட்டு மைதானம், ஜெயந்திநகர், கிளிநொச்சி.

சமூக சேவையினால் இமயம் தொட்டு விருது பெற்ற விருது நாயகனை வாழ்த்தி கௌரவிக்க அனைவரையும் அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

இதனைத் தங்களது தனிப்பட்ட அழைப்பாகக் கருதிச் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பொன் நித்தியானந்தம்
(முன்னாள் உதவி அரசாங்க அதிபர், கரைச்சி), தலைவர்
மலர் வெளியீடு மற்றும் பாராட்டு விழாக்குழுவும்

(C-9345)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி.மு.க. தலைவர் கருணாநிதி வைத்தியசாலையில் அனுமதி



(சென்னை)

தி.மு.க. தலைவர் கருணாநிதி சென்னை காவேரி வைத்தியசாலையில் மீண்டும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டு சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள காவேரி வைத்தியசாலையில் கடந்த டிசெம்பர் மாதம் அனுமதிக்கப்பட்டார். பின்னர், சிகிச்சை முடிந்து செயற்கை சுவாசக் குழாய் பொருத்தப்பட்ட நிலையில் வீடு திரும்பினார்.

கோபாலபுரத்தில் உள்ள தனது இல்லத்தில் கடந்த 7 மாதங்களாக ஓய்வு பெற்று வந்த அவருக்கு வீட்டிலிருந்தபடியே வைத்திய சிகிச்சை தொடர்ந்து வந்தது.

இந்நிலையில், தி.மு.க. தலைவர் கருணாநிதி காவேரி வைத்தியசாலையில் நேற்று காலை 6.30 மணியளவில் மீண்டும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். ராசாத்தி அம்மாள், கனிமொழி எம்.பி., முன்னாள் அமைச்சர் பொன்முடி உள்ளிட்டோர் வைத்தியசாலை சென்றுள்ளனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பொன்முடி, 'சாதாரண பரிசோதனைக்காகவே தலைவர் கருணாநிதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கருணாநிதிக்கு அளிக்கப்பட்டிருந்த செயற்கை உணவுக்குழாய் மாற்றப்படுகிறது' எனத் தெரிவித்தார்.

மேலும் காவிரி வைத்தியசாலை நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "கருணாநிதிக்கு தொண்டையில் பொருத்தப்பட்டுள்ள உணவுக் குழாய் மாற்றப்படுகிறது.

இது சாதாரண மருத்துவ பரிசோதனை தான். வைத்தியசாலையில் இருந்து மாலைக்குள் வீடு திரும்புவார்" என்று தெரிவிக்கப்பட்டது.

இதன்படி சுமார் நான்கு மணிநேர சிகிச்சையின் பின்னர் மாலை அவர் வீடு திரும்பினார். (3-8)

# ஆழ்துளைக் கிணற்றில் விழுந்தது குழந்தை;

## 13 மணிநேர போராட்டத்தின்பின் உயிருடன் மீட்பு



ஆந்திர மாநிலத்தில் குண்டூர் மாவட்டத்தைச் சேர்ந்த மல்லிகார்ஜுனா அனுஷா தம்பதிகளின் சந்திரசேகர் எனும் இரண்டு வயது ஆண் குழந்தை நேற்று முன்தினம் நண்பகல் ஆழ்துளைக் கிணற்றில் வீழ்ந்துள்ளது.

ஆந்திர மாநிலம் குண்டூர் அருகே ஆழ்துளை கிணற்றில் தவறி விழுந்த குழந்தையை 13 மணி நேரம் போராடி உயிருடன் மீட்டுள்ளனர்.

இது குறித்து பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதுடன் முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

குழந்தையை உடனடியாக மீட்க முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு உத்தரவிட்டார்.

சம்பவ இடத்துக்கு கலெக்டர் கிருத்திகா சுக்லா, பொலிஸ் சூப்பிரண்டு வெங்கடப்ப நாயுடு மற்றும் பொலிஸார், தீயணைப்பு படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர்.

உடனடியாக பொக்லைன் எந்திரம் கொண்டுவரப்பட்டது. அப்போது குழந்தை சந்திரசேகர் 13 அடியில் சிக்கிக்கொண்டிருப்பது தெரிய வந்தது. இதையடுத்து அருகில் 20 அடி ஆழத்தில் பள்ளம் தோண்டப்பட்டது. சிறுவன் சுவாசிக்க வசதியாக கிணற்றுக்குள் ஒட்சிசன் செலுத்தப்பட்டது.

அப்போது நேரம் இருட்டிவிட்டதால் விளக்குகளும் ஏற்பாடு செய்யப்பட்டன. தீயணைப்பு படையினர் தீவிரமாக போராடி இரவு 2.30 மணியளவில் குழந்தையை உயிருடன் மீட்டனர். சுமார் 13 மணி நேர போராட்டத்துக்கு பிறகு குழந்தை மீட்கப்பட்டது.

உடனே குழந்தையை நோயாளர் காவு வண்டியில் வைத்தியசாலைக்க கொண்டு சென்றனர்.

அங்கு உடனடியாக குழந்தைக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. குழந்தை தற்போது நலமாக உள்ளது. (3-8)

# இனிப்பு பரிமாறி சுதந்திர தினத்தை கொண்டாடிய இந்திய-சீன இராணுவம்



இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்திய-சீன இராணுவ வீரர்கள் இனிப்பு பரிமாறிக்கொண்டனர்.

ஆண்டுதோறும் இந்திய சுதந்திர தினத்தன்று, இந்திய-சீன இராணுவ அதிகாரிகள் சந்திப்பு நடைபெறுவது வழக்கம். ஆனால், டோக்லாம் பகுதியில், இந்திய-சீன இராணுவத்தினர் 2 மாதங்களாக போர் முஸ்தீபுகளில் ஈடுபட்டு வருவதால், நேற்று முன்தினம் அத்தகைய சந்திப்பு நடைபெறவில்லை.

அதற்கு பதிலாக, இரு நாட்டு இராணுவ வீரர்களும் இனிப்பு பரிமாறிக்கொண்டனர். டோக்லாம் பகுதியில் இருந்து 25 கி.மீ. தொலைவில் உள்ள நாதுலா எல்லையில் இந்நிகழ்வு நடைபெற்றது. இதுபோல, உள்ளூர் மக்களுக்கும் இந்திய வீரர்கள் இனிப்பு வழங்கினர். (3-8)

# கட்டார் விமானங்களை தாக்கி அழிப்போம்

## சவுதி அரேபியா எச்சரிக்கை

கட்டார் அரசாங்கத்துடன் தொடர்பை நிறுத்தியுள்ளதன் பின்னர், சவுதி விமான எல்லைக்குள் கட்டார் விமானங்கள் பறப்பதனை தவிர்க்குமாறு சவுதி அறிவித்திருந்தது.

இதற்கு செவி கொடுக்காமல் செயற்பட்டால் கட்டார் நாட்டு விமானங்களை தாக்குதல் நடத்தி வீழ்த்துவதாக சவுதி எச்சரிக்கை விடுத்துள்ளது.

தங்கள் விமானங்கள் மற்றும் ஏவுகணை அமைப்புகள் சீராக வைக்கப்பட்டுள்ளதாகவும் சவுதி மேலும் குறிப்பிட்டுள்ளது.

அண்மைக்காலமாக கட்டார் மற்றும் அதன் பிராந்திய நாடுகளுக்கு இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளன.

பயங்கரவாதிகள் மற்றும் ஈரானுடன் கட்டார் நெருங்கிய தொடர்புகளை கொண்டிருப்பதாக குற்றம் சாட்டி சவுதி அரேபியா தலைமையிலான நான்கு நாடுகள் இராஜதந்திர உறவுகளை துண்டித்துள்ளன.

இந்நிலையில் பிராந்திய நாடுகளினால் முன்வைக்கப்பட்டுள்ள சில கோரிக்கைகளை கட்டார் ஏற்றுக்கொள்ள மறுத்து வருகிறது.

இவ்வாறான நிலை தொடருமாயின் வளைகுடாவில் மற்றுமோர் போர் வெடிக்கும் அபாயம் உள்ளதாக சர்வதேச ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (3-8)

# தாக்குதல் அச்சத்தில் குவாம் மக்கள்



அமெரிக்காவின் பசுபிக் பிராந்தியமான குவாம் மீது ஏவுகணைத் தாக்குதல் மேற்கொள்ளும் திட்டத்தை வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் ஒத்திவைத்துள்ள போதிலும், தாக்குதல் மேற்கொள்ளப்படுமோ என்ற கவலையில் தாம் உள்ளதாக குவாம் மக்கள் தெரிவித்துள்ளனர்.

கண்டம் விட்டுக் கண்டம் பாயும் இரண்டு ஏவுகணைகளை கடந்த ஜூலை மாதம் வடகொரியா பரிசோதித்திருந்தது. இதனை அடுத்து, அந்நாட்டின் மீது இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரித்திருந்தார்.

இதற்குப் பதிலடியாக அமெரிக்காவின் பசுபிக் பிராந்தியமான குவாம் மீது ஏவுகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்படும் என்று வடகொரியாவும் எச்சரிக்கை விடுத்திருந்தது.

இதிலிருந்து வடகொரியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் முறுகல் நிலை வலுப்பெற்றிருந்தது. இந்நிலையில், அமெரிக்காவும் வடகொரியாவும் மாறி, மாறி சூடான வாக்குவாதங்களில் ஈடுபட்டிருந்தன.

இதற்கிடையில், சூடான வாக்குவாதங்களைத் தவிர்த்து, அமைதியைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அமெரிக்காவிடமும் வடகொரியாவிடமும் சீனா கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3-8)

# பங்களாதேஷில் அடைமழை; பலி எண்ணிக்கை அதிகரிப்பு

வட பங்களாதேஷில் கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாகப் பெய்துவரும் அடைமழை காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை 39ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், இந்த மழை காரணமாக 5 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இம்மழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கை அடுத்து, அங்குள்ள ஆறுகள் நிரம்பி வழிகின்றன.

இந்நிலையில், அங்குள்ள மக்கள் பலர் தங்களது வீடுகளிலிருந்து வெளியேறி, பொது இடங்களில் தங்கியுள்ளனர். இவர்களுக்கான உதவிகளை மீட்புப் பணியாளர்கள் வழங்கி வருகின்றனர். (3-8)

# பிலிப்பைன்ஸில் முற்றுகை

## 32 பேர் சுட்டுக் கொலை

பிலிப்பைன்ஸில் முன்னெடுக்கப்பட்ட முற்றுகை நடவடிக்கையொன்றின்போது, நாளில் 32 பேர் பொலிஸால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மேலும், இந்நடவடிக்கையின்போது 100 க்கும் அதிகளவானோர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் ஒழிப்புக்கு எதிரான முற்றுகை நடவடிக்கை, தலைநகர் மணிலாவின் வடபகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது, ஆயுதங்கள் மற்றும் போதைப்பொருட்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கொல்லப்பட்டவர்கள் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய குற்றவாளிகள் எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

பிலிப்பைன்ஸில் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்தும் நோக்கில் ஜனாதிபதி ரொட்ரிகோ டுடெர்ட்டின் பணிப்பின் பேரில், அங்கு கடந்த 2016ஆம் ஆண்டு முதல் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதி முதல் இதுவரையான காலப்பகுதியில் போதைப்பொருள் கடத்தல் சம்பவங்களுடன் தொடர்புடையதாகக் கருதப்படும் சுமார் ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நைஜீரியாவில் தற்கொலைப்படை தாக்குதல்

## 27 பேர் பலி; 83 பேர் படுகாயம்!

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் போகோஹராம் இயக்கத்தின் பெண் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 27 பேர் பலியாகியுள்ளதாகவும் 83 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் போகோஹராம் தீவிரவாத இயக்கம் பெருமளவில் தீவிரவாத தாக்குதல்களை நடத்தி வருகின்றது.

அங்குள்ள கிராமத்தினரை பணயக் கைதிகளாக பிடித்து அரசிடம் பேரம் பேசுவது உள்ளிட்ட அட்டூழியங்களில் இந்த இயக்கம் ஈடுபட்டு வருகிறது. இவர்களை வேட்டையாடும் பணியில் பன்னாட்டு ராணுவத்தினர் பணியாற்றி வருகின்றனர்.

இந்நிலையில், அந்நாட்டின் வடகிழக்கு பகுதியான மைதுகுரி என்ற நகரின் பக்கத்தில் இருக்கும் கோண்டுகா கிராமத்தில் உள்ள அகதிகள் முகாம் அருகே நேற்று முன்தினம் அந்த இயக்கத்தைச் சேர்ந்த இரு பெண் தற்கொலைப்படை தீவிரவாதிகள் தங்கள் உடலில் கட்டிவந்த வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்தனர்.

இக்கோரத் தாக்குதலில் அங்கிருந்த 27 பேர் பலியானதாகவும் 83 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

போகோஹராம் தீவிரவாத இயக்கம் இதுவரை நடத்தியுள்ள தற்கொலைப்படை தாக்குதலை பெண் தீவிரவாதிகளே அதிகளவில் நடத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (3-8)




# கனமழை மற்றும் நிலச்சரிவில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை அதிகரிப்பு



மேற்கு ஆபிரிக்க நாடான சியாராலியோனின் தலைநகரான பிரீடௌன் பகுதியில் ஏற்பட்டுள்ள பாரிய மண்சரிவு மற்றும் வெள்ளப் பெருக்கில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 400ஆக அதிகரித்துள்ளது. அத்துடன், இந்த அனர்த்தத்தில் சிக்கி காணாமல் போனோரின் எண்ணிக்கை சுமார் 600 ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில், காணாமல் போனவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் மீட்புப் பணியாளர்கள் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றனர்.

சியாரா லியோனில் ஏற்பட்டுள்ள அடை மழையைத் தொடர்ந்து, அங்கு கடந்த திங்கட்கிழமை பாரிய வெள்ளப்பெருக்குடன் மண்சரிவு ஏற்பட்டது.

இந்த அனர்த்தத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் இறுதிக்கிரியை நேற்று புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

இதற்கிடையில், அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து தற்காலிகக் கூடாரங்களில் தங்கியுள்ள மக்கள் மத்தியில் வயிற்றுப் போக்கு, நெருப்புக் காய்ச்சல் உள்ளிட்ட தொற்று நோய்கள் பரவுவதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் தெரிவித்துள்ளார்.

அனர்த்தம் இடம்பெற்றுள்ள பகுதிக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமையைப் பார்வையிட்ட ஜனாதிபதி ஏர்னஸ்ட் பே கொரோமா, இந்தப் பேரழிவால் தாம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும், தமக்கு அவசர உதவி தேவைப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (3-8)

# ஜப்பான்-அமெரிக்கா கூட்டுப்பயிற்சி



அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் இடையில் இராணுவக் கூட்டுப் பயிற்சி முன்னெடுக்கப்பட்டுள்ளது. வட ஜப்பானிய நகரமான என்வா ஹொக்கிடோவில் இந்தக் கூட்டுப் பயிற்சி இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில், ஜப்பானின் பாதுகாப்புப் படையினரும் மூன்றாம் பிரிவு அமெரிக்க மரைன்ஸூம் கூட்டுப் பயிற்சியில் நேற்று புதன்கிழமை ஈடுபட்டு வந்தன.

இதன்மூலம் அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் இடையிலான இராணுவ உறவு வலுப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

18 நாட்கள் நடைபெறவிருக்கும் இப்பயிற்சியானது, இம்மாதம் 28ஆம் திகதியுடன் முடிவடையும்.

ரொக்கெட் தாக்குதல், பீரங்கித் தாக்கு தல் பயிற்சி, நேரடி மோதல் உள்ளிட்டவை தொடர்பில் பயிற்சி அளிக்கப்படுகின்றன.

இதில் 3 ஆயிரத்து 500 படையினர் ஈடுபட்டுள்ளனர்.

மேலும், அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் இடையிலான இந்தக் கூட்டுப் பயிற்சியானது, கொரிய தீபகற்பத்தில் தற்போது எழுந்துள்ள பதற்றமான நிலைமையுடன் தொடர்புடையவை அல்ல. இருந்த போதிலும், அமெரிக்காவுக்கும் வட கொரியாவுக்கும் இடையிலான வெறுப்புக்கு மேலும் வழிவகுக்கும் என்ப தும் குறிப்பிடத்தக்கது. (3-8)

# போர்த்துக்கல்லில் தொடரும் காட்டுத்தீ

## 64 பேர் உயிரிழப்பு



போர்த்துக்கல்லில் பரவிய காட்டுத் தீ காரணமாக 64 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், அங்கு 100 ஹெக்டேயர் நிலப்பரப்பு தீயில் எரிந்து நாசமாகியுள்ளது. இந்நிலையில், அப்பகுதியை அண்டி வாழும் மக்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

பிரான்கோ காஸ்டிலோவில் விலா டி ரெய் எனும் காட்டுப்பகுதியே தீக்கிரையாகியுள்ளது.

போர்த்துக்கல்லில் வரட்சியான காலநிலை தற்போது நிலவிவரும் நிலையில், காட்டுத் தீ பரவியுள்ளது.

இந்நிலையில், தீயை அணைக்கும் நடவடிக்கையில் தீயணைப்புப் படையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். (3-8)

# வழிபாட்டுக் கூட்டத்தில் மரம் முறிந்து விபத்து

## இரு குழந்தைகள் உட்பட 12 பேர் பலி



போர்த்துக்கல் நாட்டில் தேவாலய வழிபாட்டுக் கூட்டத்தில் 200 வருட பழைமையான மரம் முறிந்து விழுந்து விபத்து ஏற்பட்டதில் இரண்டு குழந்தைகள் உள்ளிட்ட 12 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.


ஐரோப்பிய நாடான போர்த்துக்கலில் உள்ள மடேய்ரா நகரில் இருக்கும் கத்தோலிக்க தேவாலயத்தில் நேற்று முன்தினம் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. தேவாலயத்தின் வெளியே இருக்கும் கார் பார்க்கிங் பகுதியில் திரளானோர் கூடியிருந்து வழிபாடு நடத்திக்கொண்டிருந்தனர்.

அப்போது, அங்கு இருந்த சுமார் 200 ஆண்டுகள் பழைமையான மரம் ஒன்று முறிந்து கூடியிருந்தவர்கள் மீது பலமாக விழுந்தது.

இதனையடுத்து, அங்கிருந்தவர்கள் சிதறி ஓடினர். மரம்விழுந்த விபத்தில்இரண்டு குழந்தைகள் உள்ளிட்ட 12 பேர் பலியானதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. மேலும், ஜேர்மனி, பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பலர் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலியானவர்களுக்கு அந்நாட்டு பிரதமர் அந்தோனியா கோஸ்டா இரங்கல் தெரிவித்துள்ளார். கடந்த மாதம் இதே நாட்டில் ஏற்பட்ட காட்டுத்தீயில் சிக்கி 64 பேர் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (3-8)

# முடங்கியது காஷ்மீர்



(ஸ்ரீநகர்)

காஷ்மீரில் ஹூரியத் மாநாட்டு கட்சி மற்றும் காஷ்மீர் விடுதலை முன்னணி ஆகிய பிரிவினைவாத அமைப்புகள் சார்பில் நேற்று முன்தினம் முழு அடைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

சுதந்திர தின கொண்டாட்டங்களை தவிர்க்கும் விதமாக் பிரிவினைவாதிகள் இவ் அழைப்பை விடுத்திருந்ததால் சட்டம்-ஒழுங்கை பாதுகாப்பதற்காக ஸ்ரீநகர் முழுவதும் முக்கிய இடங்களில் குண்டு துளைக்காத உடை அணிந்து ஆயுதமேந்திய நூற்றுக்கணக்கான பாதுகாப்புப் படை வீரர்கள் குவிக்கப்பட்டனர்.

முழு அடைப்புக்கு ஆதரவு தெரிவித்து நகரில் கடைகள், வர்த்தக நிறுவனங்கள் அனைத்தும் மூடப்பட்டன. தனியார் வாகனங்களும் அரசு பேருந்துகளும் எதுவும் இயக்கப்படவில்லை.

[illegible] சிறப்பு மிக்க லால் சவுக் பகுதியை நோக்கி செல்லும் அனைத்து வீதிகளும் முள்வேலியால் மூடப்பட்டன.

மக்கள் வீடுகளுக்கு உள்ளேயே முடங்கியதால் வீதிகள் வெறிச்சோடி கிடந்தன. முழு அடைப்பையொட்டி ஸ்ரீநகரில் 2ஆவது நாளாக நேற்று முன்தினம். ஊரடங்கு உத்தரவு பிறப்பித்தல் போன்ற கட்டுப்பாடுகள் தொடர்ந்தன.

இதேபோல் தெற்கு காஷ்மீரில் முக்கியமான பெரிய, சிறு நகரங்களிலும் பாதுகாப்பு படையினரும் உள்ளூர் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

ஸ்ரீநகர்-ஜம்மு தேசிய நெடுஞ்சாலையில் பிரிவினைவாதிகள் வன்முறையில் ஈடுபடலாம் என்று கருதப்பட்டதால் அங்கும் பாதுகாப்பு படையினர் குவிக்கப்பட்டனர். வடக்கு காஷ்மீரிலும் முழு அடைப்பு காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை அடியோடு முடங்கியது.

மத்திய காஷ்மீர் மாவட்டங்களான கந்தர்பால், பத்காம் ஆகியவையும் பெரிதும் பாதிக்கப்பட்டன. (3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த குடும்பத்துக்கு எதிரான விசாரணைகளை தீவிரப்படுத்த அமைச்சரவையில் அழுத்தம்



மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தினர் மற்றும் முன்னைய அரசாங்கத்தின் அமைச்சர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் குறித்த விசாரணையில், தேவையற்ற இழுத்தடிப்புகள் மேற்கொள்ளப்படுவதாக, நேற்று முன்தினம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் காரசாரமான கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில், பல அமைச்சர்களும் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

இதன்போது கருத்து வெளியிட்ட ஐ.தே.க. அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா, உயர்மட்ட ஊழல்கள் மற்றும் குற்றங்களை - விசாரிக்க, சிறப்பு நீதிமன்றத்தை உருவாக்க அரசியலமைப்பில் இடமில்லை என்றால், தற்போதுள்ள நீதிமன்றங்களின் ஊடாக் இதனைக் கையாள வேண்டும் என்று வலியுறுத்தினார்.

திலக் மாரப்பன, சம்பிக்க ரணவக்க, சாகல ரத்நாயக்க உள்ளிட்ட பெரும்பாலானோர் இந்தக் கருத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

சட்டமா அதிபர் திணைக்களம் இந்த வழக்குகளை சரியான முறையில் கையாளவில்லை என்ற குற்றச்சாட்டுகளும் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டது.

அப்போது நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, தம்மால் நீதித்துறையில் தலையீடு செய்ய முடியாது என்று பதிலளித்துள்ளார். (இ-7)

# இலவச யோகாசன பயிற்சி ஆரம்பம்







தென்மராட்சி பிரதேச கலாசார அதிகார சபையின் ஏற்பாட்டில் இலவச யோகாசன பயிற்சி கடந்த ஞாயிற்றுக்கிழமை தென்மராட்சி கலை மன்றத்தில் பிரதேச கலாசார அதிகார சபையின் உப தலைவர் சி.பத்மநாதன் தலைமையில் இடம்பெற்றது.

யோகாகலாபூஷணம்ந.சிவனேஸ்வரராஜா கலந்துகொண்டு யோகா பயிற்சிகளை வழங்கினார்.

இலவச யோகா பயிற்சிகள் தொடர்ந்து ஒவ்வொரு சனி மற்றும் ஞாயிறு தினங்களில் பிற்பகல் 3.30 தொடக்கம் மாலை 5 மணிவரை இடம்பெறவுள்ளது.

இதில் மாணவர்கள்,முதியோர்கள் மற்றும் ஆர்வமுள்ள அனைவரும் கலந்து கொண்டு பயன்பெற முடியும் என சாவகச்சேரி பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (இ-89)

# அரச திணைக்களங்களில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

## வடக்கு ஆளுநர் உறுதியளிப்பு





வடமாகாண உள்ளக கணக்காய்வாளர்களுக்கான நியமனங்களை வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே வழங்கி வைத்துள்ளார்.

வடமாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டு தெரிவாகிய 13 பேருக்கான நியமனக் கடிதங்களை ஆளுநர் செயலகத்தில் வைத்து கையளித்தார்.

இந்நிகழ்வில் வடமாகாண பிரதம செயலர் அ.பத்திநாதன், ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன் உட்பட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது கருத்து வெளியிட்ட ஆளுநர் நேர்மையாக அனைவரும் நாட்டின் முன்னேற்றத்திற்காக செயலாற்ற நிர்ப்பந்திக்கும் அதே வேளை குறிப்பாக வடமாகாணத்தின் அபிவிருத்திக்காக உங்களை அர்ப்பணிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

வட மாகாணத்தில் படித்த இளைஞர், யுவதிகளின் வேலை வாய்ப்பு தொடர்பில் கூடிய கவனத்தினை நான் செலுத்தி வருகின்றேன். எதிர்காலத்தில் வடமாகாண அரச திணைக்களங்களில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புதவற்கான செயற்றிட்டங்களை முன்னெடுப்பேன் எனவும் தெரிவித்தார். (இ-60)

# இன்று ஒரு தகவல்

## மனசை விட்டுவிடாதீர்கள்!

எனக்குத் தெரிந்து ஒரு தையற்கடை முற்றிலுமாக எரிந்துபோனது. ஓகோ என்று இருந்தவரை ஒரே நாளில் நடுத்தெருவுக்கு இழுத்து வந்துவிட்டது. அந்தப் பாழும் நெருப்பு. ஆனால் அக்கடையின் உரிமையாளரை நான் சந்திக்க நேர்ந்தபோது எனக்கு வியப்பென்றால் அப்படி ஒரு வியப்பு!

மறுபடி கடையைத் தொடங்குவது பற்றி அவர் பேசிக் கொண்டிருந்தாரே தவிர, புலம்பல் தொனியே காணோம். கன்னத்தில் கையில்லை. தலையில் துண்டைப் போட்டுக் கொள்ளவில்லை. சிறுசோகம் காணப்பட்டபோதும் தன்னம்பிக்கையாலும் தைரியத்தாலும் அதைப் போட்டு அழுத்திக் கொண்டிருப்பது எனக்குப் புரிந்தது.

பிறிதொரு சந்தர்ப்பத்தில், வீதி விபத்தில் குடும்பத்தையே இழந்து தவித்த ஒருவருக்கு ஆறுதல் சொல்லப் போயிருந்தேன். ரொம்ப நேரம் குலுங்கிக் குலுங்கி அழுதார். தன் மனச் சுமையெல்லாம் கண்ணீராய் உருக்கி வெளியேற்றிவிட்டு, மனத்தை லேசாக்கிக் கொண்டு பிறகு இயல்பாகப் பேசினார்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு இந்த இருவரையும் காண நேர்ந்தது. தையற்கடைக்காரரின் புதிய கடை ஓகோ என்று நடக்கிறது. சோகத்தின் சுவடு சற்றும் தெரியவில்லை. பழையவீதியின்மீது மறுபடி வீதி போடுகிற மாதிரிப் போட்டு, சூழ்நிலையை முற்றிலும் மாற்றியாகிவிட்டது.

குடும்பத்தை இழந்த மனிதரும் தெய்வ காரியம், பொதுத் தொண்டு என்று இறங்கி, அவரா இவர் என்று புருவத்தை உயர்த்தச் செய்துவிட்டார்.

எல்லோருக்கும் மனக்கஷ்டம் இருக்கிறது! விகிதாசாரத்தில்தான் வித்தியாசம்!

எல்லோருக்கும் பணக் கஷ்டம் இருக்கிறது. எண்களில்தான் வித்தியாசம்!

ஆனால் ஒன்று, மனசைவிட்டு விடாமலிருந்தால் மிகப் பெரிய துன்பங்கள் கூடச் சாதாரணமாகிவிடுகின்றன.

வேறு வகையில் சொல்வதானால் நம் மனம் விஸ்வரூபம் எடுத்தால் துன்பங்கள் சாதாரணமாகத் தெரிகின்றன. துன்பங்கள் விஸ்வரூபம் எடுக்க நாம் அனுமதித்தால் அவை நம்மை ஏகமாய் மிரட்டுகின்றன.

நமக்கு விதிக்கப்பட்ட துன்பங்களை இதுதான் இறுதித் தீர்ப்பு என்று யாரும் நம்ப வேண்டாம். இத் தீர்ப்புகளை நம்மால் திருத்தி எழுத முடியும். இனிக் கடினம் என்று இருக்கிற நிலைமையை நாம் வென்றுவிட முடியும். இனி முடியாது என்கிற நிலைமையை நாம் சமாளிக்க முடியும். இனி முடியவே முடியாது என்கிற நிலைமையை நாம் வெல்வதற்குத் தான் நாம் பயிற்சி பெற வேண்டும். இது தான் பாக்கி. இதன் முதல் கட்டம் மனசை விட்டுவிடாமல் இருப்பது.

எத்தனைபேர் துணையிருந்தாலும் மனசை விட்டுவிட்டால் பயன் இல்லை.

அதே நேரத்தில் எல்லோரும் கைவிட்டாலும் பரவாயில்லை. நாம் நம் மனசை விட்டுவிடாமல் இருந்தால் அதுவே போதும்!

லேனா தமிழ்வாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15

# கலைத் தரிசனம்

பொம்மலாட்டம், அரிவிவெட்டு நடனம், கும்மி நடனம், குறத்தி நடனம், கோலாட்டம், கரகாட்டம், காவடியாட்டம், பாம்பு நடனம், வேப்பிலை நடனம் ஆகிய கிராமியக் கலை வடிவங்களை அதன் பாரம்பரியத் தன்மையிலிருந்து விலகாது ஆற்றுகை செய்து வரும் இவர் 1961 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 26 ஆம் திகதி புதுக்குடியிருப்பில் பிறந்தார். கலைக் குடும்பத்தில் பிறந்த இவர் நாடக நெறியாளராகவும் பாடகராகவும் நாட்டாரியல் கலையைக் கட்டிக் காப்பவராகவும் உள்ளார். எட்டு வயதில் கலைத்துறைக்குள் கால்பதித்த இவர் 2015 இல் புதுக்குடியிருப்புப் பிரதேசச் செயலகத்தினால் கலைச்சுடர் என்ற விருதையும் பல பாராட்டுக்களையும் பெற்றார். எதிர்காலத்தில் அன்னை கலாமன்றத்தை உருவாக்கி பல கலை நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளார். திருமதி யேசுராசா பிலோமினா அவர்கள் தன்னைப் பற்றியும் தன் கலைப் பணி பற்றியும் வலம்புரிக்குத் தெரிவித்த கருத்துக்களைத் தருகின்றோம்.



## திருமதி யேசுராசா பிலோமினா
## அவர்களுடனான சந்திப்பு

**❖ கலைத்துறையில் தங்களின் ஆரம்பம் பற்றி..,.?**

எனக்கு எட்டு வயது இருக்கும் போது சி.பூகம்மா அன்ரி ஒரு நடனத்தைப் பழக்கினார். இந்த நடனத்தை முதன் முதலாக ஆனந்தபுரம் அ.த.க. பாடசாலையில் மேடையேறி ஆடினேன். இதனைத் தொடர்ந்து பாடசாலைகளில் தொடர்ச்சியாகக் கலை நிகழ்வுகளில் பங்கெடுத்து வந்தேன். எனது தந்தையார் ஓர் அண்ணாவியார். அவர் நாங்கள் சிறு பிள்ளைகளாக இருக்கும் போது அப்பாவின் அருகே இருந்து பாடல்களைக் கேட்டு இரசிப்பேன். அப்படி இரசித்து இரசித்து நானும் மெல்ல பாட ஆரம்பித்தேன். குரல் சரியாக வந்துவிட்டது. தந்தையார் கூத்தினை ஆடும் போது பார்ப்பேன். அவரின் ஆட்டம் போல் நானும் ஆடிப் பழகினேன். பின்னாளில் கூத்தினையும் ஆட உதவியாக இருந்தது. எமது ஆலயத்தில் இடம்பெறுகின்ற கலை நிகழ்வுகளில் பங்கெடுத்து ஆடிப் பாடுகின்ற போது பலரும் பலவிதமாகப் பாராட்டுவார்கள். அந்தப் பாராட்டின் விளைவால் மேலும் கலைகளில் ஈடுபடத் தூண்டியது. எல்லாவற்றிற்கும் மேலாக எனது பெற்றோர்கள் ஊக்கமும் ஆக்கமும் தந்தார்கள். தட்டிக்கொடுத்து உற்சாகப் படுத்தினார்கள். எனது கலை சார்ந்த செயற்பாடுகளுக்கு ஒரு போதும் எனது பெற்றோர்கள்-சகோதரர்கள் தடையாக இராத காரணத்தினால் தான் நான் கலைத்துறைக்குள் முற்று முழு தாகக் கால்பதிக்க முடிந்தது.

**❖ தாங்கள் தயாரித்த நாடகங்கள், கூத்துக்கள் பற்றி...?**

இராவணன் நாடகம், எங்கள் கதை போன்ற நாடகங்களை பாடசாலை மாணவர்களுக்குப் பழக்கி அரங்கேற்றினேன். 2010 ஆம் ஆண்டு வவுனியா செட்டிகுளம் ஆனந்த குமாரசாமி இடைத்தங்கல் முகாமில் இருந்த பொழுது போரா ட்டமும் வாழ்வும் நொந்து போன உள்ளங்கள், வலுவிழந்தோரு க்கும் வாழ்வுண்டு, உன் கையில் விடியல், ஏமாறாதே, சோகங்கள் சொந்தமல்ல, திரும்பிப்பார், சிறகை விரித்துக் கொள் போன்ற பத்து விழிப்புணர்வு நாடகங்களை மேடையேற்றினேன். மக்கள் உளவியல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டு இருந்த போது அவர்களைத் தேற்றுவதாக இந்நாட கம் அமைந்தன. ஏமாந்தான் ஏரோது என்ற நாட்டுக்கூத்தும் ஊதாரிப்பிள்ளை உவமை இசை நாடகத்தையும் வருடா வருடம் அரங்கேற்றி வருகின்றேன்.

**❖ தங்களின் பொம்மலாட்டம் பற்றிக் கூறுங்கள்...?**

1995 ஆம் ஆண்டு வழிகாட்டல் ஆலோசனை ஆசிரிய ஆலோசகராக இருந்த ஜேம்ஸ் சபாபதி அவர்களின் வழிகாட்டலையும் ஒருமுறை எமது கோவிலில் திருமறைக் கலாமன்றத்தினர் பொம்மலாட்டத்தை நிகழ்த்தியிருந்தனர். அவர்களின் வழிகாட்லையும் பெற்று பொம் மலாட்டத்தைப் பயிற்றுவிக்கத் தொடங்கினேன். இயேசுநாதர் சிலுவை சுமந்து கொண்டு போறது, மரியன்னை இயேசுவை வந்து சந்திக்கிறது. இயேசுவின் திருப் பாடுகள், ஊதாரிப் பிள்ளையின் உவமை நல்ல சமாரியன் உவமை போன்ற காட்சிகளைப் பொ ம லாட்டத்தில் காண்பித்து வருகின்றேன். இவற்றினை விட சமூகத்திற்குத் தேவையான கருத்துக்களை இந்தப் பொம்மலாட்டம் மூலம் கொடுக்க முடியும். இன்று புதுக்குடியிருப்பில் பொம்ம லாட்டத்தைச் செய்கின்ற கலைஞர்கள் இல்லை. இத னைச் செய் யலாம் என்று பலரிடம் கேட்டால் அவர்கள் விரும்புகிறார்கள் இல்லை. இதற்குப் போனால் கொடுப்பனவு கிடைக்காது என்று ஒதுங்கி விடுகிறார்கள். விருப்பமுடைய ஒருசிலரும் சினிமாவுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்களே தவிர இந்தக் கலைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் இல்லை. ஆசிரியர்களுக்கு நடைபெறுகின்ற ''மகிழ்ச்சிகரமான கற்பித்தல்'' பயிற்சியில் வளவாளராகக் கலந்து கொண்டு பொம் மலாட்டத்தினைப் பழக்கியுள்ளேன். ஆர்வமுடையவர்கள் வந்தால் இதனைப் பயிற்றுவிக்கலாம்.

**❖ தங்களின் பாரம்பரிய கலைகளைப் பற்றிக் கூறுங்கள்...?**

அரிவிவெட்டு நடனம், கும்மி நடனம், குறத்தி நடனம், கோலாட்டம், கரகம், காவடி, பாம்பு நடனம் போன்ற பாரம்பரியக் கலைகளைச் செய்து வருகின்றோம். மாணவர்களுக்குப் பழக்கி பல இடங்களில் ஆற்றுகை செய்திருக்கின்றேன். எனது மகள் றியானா அவர்கள் மேற்குறிப்பிட்ட கலைகளைச் சிறப்பாக செய்து வருகின்றார். இவற்றோடு என்னுடன் இணைந்து இக்கலைகளைப் பயிற்றுவித்து வருகின்றார். இந்தக் கலைகளுக்குப் பொருத்தமான பாடல்கள் பாடப்பட்டு இசை வழங்கி ஆற்றுகை செய்யும் போது இதனுடைய புனிதத்தன்மை வெளிப்படும்.



இந்தக் கலைகளினூடாக பண்பாடுகளைக் காப்பாற்றிக் கொள்வதோடு இவைகள் அருமையான கலை வடிவம் என உணருவர். ஆரம்பத்தில் இத னைப் பழக நிறைய மாணவர் கள் வந்தார்கள். தற்பொழுது குறைந்து விட்டது.

**❖ தங்களின் தாளலயம் வில்லுப்பாட்டு பற்றி...?**

இன்றைய இளம் சமூகம் எமது பாரம்பரியக் கலைகளில் நாட்டமில்லாது உள்ளார்கள். தாங்கள்தான் இந்தக் கலைகளில் பங்குபற்றுகிறார்கள் இல்லையென்றாலும் அதனை இரசிப்பதற்குக்கூட மனமில்லாத இருக்கிறார்கள். நான் புதுக்குடியிருப்பு றோ.க.வித்தியாலயம், ஆனந்தபுரம் அ.த.க.பாடசாலை ஆகிய கலை நிகழ்வுகளின் போது தாளலயம், வில்லுப்பாட்டு என்பனவற்றை நானே எழுதி நெறியாள்கை செய்துள்ளேன். தற்போது ஆனந்தபுரம் அ.த.க. பாடசாலையில் ஆசிரியையாக இருப்பதனால் தமிழ்த்தினப் போட்டிகளுக்கு வில்லுப்பாட்டு, தாளலயம் என்பனவற்றைப் பழக்கி போட்டியில் பங்குபற்றி யுள்ளோம்.

இவற்றோடு பாடசாலைக் கலை நிகழ்வுகளிலும் அரங்கேற்றி வருகின்றேன். முன்னர் வில்லுப்பாட்டு, தாளலயம் என்றால் விரும்பிக் கேட்பார்கள். தற்போது நிகழ்ச்சி நிரலில் இவை இடம்பிடித்திருந்தால் சிலர் சலிப்புக் கொள்கிறார்கள். அவ் வாறு சலிப்புக் கொள்பவர்களால் ஒரு பாடலைக்கூட எழுத முடியாது, எழுதத்தான் முடியவில் லையாயினும் இரசிக்கின்ற மனநிலையாவது உருவாக்க முடியாதா? கலைகள் மனி தனை மகிழ்விப்பதோடு நின்று விடாது நல்ல கருத்துக்களையும் கொடுக்கின்றது. பல மூத்த கலைஞர்கள் வில்லுப்பாட்டு, தாளலயம் எங்கு நிகழும் என்று காத்திருக்கின்றார்கள். அந்த ஏக்கம் வரவேண்டும்.

**❖ கலையுலகிற்கு நீங்கள் மனந்திறந்து கூறுவது?**

பாரம்பரியக் கலைகளை அழிய விடக்கூடாது. அதற்கான பங்களிப்பை வழங்க வேண்டும். பெற்றோர்கள், ஆசிரியர்கள் எமது பாரம் பரியக் கலைகள் பற்றி பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். பிள்ளைகளும் நவீன தொடர்பு சாதனங்களிலிருந்து விடுபட்டு பாரம் பரியக் கல்லைகளில் அக்கறை கொள்ள வேண்டும். கலைகள் தொடர்பான குறுகிய அபிப் பிராயத்தை ஆசிரியர்களும் பெற்றோர்களும் கைவிட வேண்டும். கலைகளில் பங்குபற்றுவதனால் எமது கல்வி நிலையில் பின்னடைவு ஏற்படப் போவதில்லை. கல்விக் குச் சரியாகத் திட்டமிட்டு நேரம் ஒதுக்கிப் படிப்பது போல வாசகத் தில் ஒரு மணித்தியாலயம் ஆவது ஒதுக்கித் தன் துறைசார்ந்த கலையைக் கற்க வேண்டும். கைப்பேசி, மேக்கப், வைபர், பேஸ்புக் இவை அத்தனையும் எமது பிள்ளைகளின் கைகளுக்குள் இலகுவாகக் கிடைத்து விட்டன.

இந்தச் சாதனங்களினால் பலர் பாதகங்களைத்தான் அனுபவிக்கின்றனர். சிலர்தான் சாதனங்களைச் சாதகமாகப் பயன்படுத்துகின்றார்கள். எமது இளம் பிள்ளைகள் துணிச்சலாக, இலகுவாக கையிலிருந்த கைப்பேசியை விட, ஆபத்தான நிலைமை எங்குமில்லை. கலைகளைக் கையிலெடுத்தால் எம் இளைஞர்கள், யுவதிகள் தீய பாதையில் பயணிக்காது அவர்களது நேர் மறையான சிந்தனைகள் மாறிக் கலைகளால் உயர்ந்து கொள்வார்கள்.

**❖ தங்களின் எதிர்கால கலை நடவடிக்கைகள் பற்றி?**

அன்னை கலாமன்றம் என்ற ஒன்றை உருவாக்கி பாரம்பரியக் கலைகளை இன்னும் வளர்க்கப் போகின்றேன். எனக்குப் பின்னரும் இம் மன்றத்தினூடாகப் பாரம்பரியக் கலைகள் முன்னெடுக்கப்படும். இலங்கையில் எந்தப் பாகத்திற்குச் சென்றும் எமது கிராமி யக் கலைகளை ஆற்றுகை செய்யத் தயாராகவுள்ளோம். இம்மன்றத்தை உருவாக்குவதற்கான முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றேன்.

நேர்காணல்:
ஜெயம் ஜெகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணி மாத இராசி பலன்கள்

## 17.08.2017-16.09.2017

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும்



கொள்கைப் பிடிப்பை தளர்த்திக் கொள்ளும் மிதுன இராசி அன்பர்களே!

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன், தன ஸ்தானத்தில் பலம் பெற்று சஞ்சரிக்கிறார்.

எனவே பொருளாதார வளர்ச்சி திருப்திகரமாக இருக்கும். அதேநேரத்தில் சில நாட்களுக்கு முன்பு பெயர்ச்சியான இராகு-கேதுக்களின் அமைப்பின் படி பார்க்கும் பொழுது, கேது பகவான் 8இல் இருப்பதால் தொழில் சம்பந்தமாக எடுத்த முயற்சிக்கு கடன் வாங்கும் சூழ்நிலை ஒரு சிலருக்கு உருவாகலாம்.

அஷ்டமத்து இராகுவால் அலைச்சல் அதிகரிக்கும் என்றாலும், ஆதாயம் குறையாது. எந்தக் காரியமாக இருந்தாலும், ஒரு முறைக்கு இருமுறை முயற்சி செய்து தான் முடிவடையும். மாதத் தொடக்கத்தில் அர்த்தாஷ்டம குருவின் ஆதிக்கம் இருக்கிறது. 4இல் சஞ்சரிக்கும் குருவின் பார்வை அஷ்டம ஸ்தானத்திலும் விரய ஸ்தானத்திலும் தொழில் ஸ்தானத்திலும் பதிவதால் சென்ற மாதத்தில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்யும் வாய்ப்பு உருவாகும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு நீண்ட தூரங்களுக்கு மாறுதல் வந்து சேரும். அது தவிர்க்க முடியாததாகவும் அமையும். வீடு, தோட்டம் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். கட்டிய வீட்டைப் பழுது பார்க்கும் சந்தர்ப்பங்கள் கைகூடி வரலாம். சூரியன் சகாய ஸ்தானத்தில் பலம் பெற்று சஞ்சரிப்பதால், சகோதரர்களிடையே இருந்த பங்கு தொடர்பான பிரச்சினைகள் சுமுகமாகும். பங்கு வீட்டை ஒன்று சேர்ந்து பழுது பார்ப்பீர்கள்.

இம்மாதம் நிகழவுள்ள குருப்பெயர்ச்சிக்கு பிறகு, குருவின் பரிபூரண பார்வை உங்கள் இராசியில் பதியப் போகிறது. எனவே தடைக்கற்கள் எல்லாம் படிக்கற்களாக மாறும். தனவரவு திருப்தி தரும். மிகுந்த யோகங்கள் வந்து சேரப்போகிறது. விநாயகர் சதுர்த்தியன்று கற்பக கணபதியை உள்ளன்போடு வழிபடுவதோடு, சர்ப்பதோஷம் விலக அனுகூல நாளில் அதற்குரிய ஸ்தலங்களில் பரிகாரங்கள் செய்து நற்பலன்களைப் பெறலாம்.

கடக சுக்ரன்-சிம்ம சுக்ரன்

ஒகஸ்ட் 22இல் கடகத்திலும் செப்டெம்பர் 15இல் சிம்மத்திலும் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக பொன், பொருள் சேர்க்கை ஏற்படும். புதிய பாதை புலப்படும். பெண் வழிப் பிரச்சினைகள் அகலும். உத்தியோகத்தில் சம்பள உயர்வு கிடைக்கலாம். அடகு வைத்த நகைகளை மீட்கும் வாய்ப்பு கிட்டும். சகோதர ஸ்தானத்தில் சுக்ரன் சஞ்சரிக்கும் போது, உடன்பிறப்புகள் வழியில் விரயம் உண்டு. அவர்கள் இல்லத்தில் நிகழும் சுபகாரியங்களுக்கு உதவி செய்யும் நிர்ப்பந்தம் உருவாகலாம்.

சிம்மச் செவ்வாய் சஞ்சாரம்!

6,11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய், ஒகஸ்ட் 28 ஆம் திகதி சகாய ஸ்தானத்திற்கு செல்கிறார். எனவே உத்தியோக முயற்சிகள் கைகூடும். வெளிநாட்டில் வேலை பார்க்க விண்ணப்பித்தவர்களுக்கு விரைவில் அது கைகூடுவதற்கான அறிகுறி




கள் தோன்றும். எதிரிகள் விலகுவர். உத்தியோகத்தர்களுக்கு எதிர்பார்த்தபடியே இலாகா மாற்றங்கள் வந்து சேரலாம்.

சிம்ம புதன் சஞ்சாரம்

இராசிநாதன் புதன், சிம்மத்தில் சஞ்சரிக்கும் பொழுது தடைகள் அகலும். தைரியமும், தன்னம்பிக்கையும் கூடும். துயரங்களைப் போக்கிக் கொள்ள துணிந்து முடிவெடுப்பீர்கள். அயராது பாடுபட்டமைக்கு உரிய பலன் அதிகமாகவே இருக்கும். வழக்குகள் சாதகமாக முடியும். கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும்.

குதூகலம் தரும் குருப்பெயர்ச்சி

செப்டெம்பர் 2ஆம் திகதி துலாம் இராசிக்கு குருபகவான் பெயர்ச்சியாகிறார். அவரது பார்வை உங்கள் இராசியில் பூரணமாக பதிவதால் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். செலவிற்கேற்ப தொகை வந்து கொண்டேயிருக்கும். கல்யாண வாய்ப்புகள் கைகூடலாம். கடமையில் ஏற்பட்ட தொய்வு அகலும். பணவரவு திருப்தி தரும். பணியாளர் தொல்லை அகலும். நல்ல வாய்ப்புகள் பலவும் வந்து சேரும் நேரமிது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

மாதத்தின் முற்பாதியை விட பிற்பாதியில் மகிழ்ச்சி கூடுதலாக இருக்கும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். கட்டடம் கட்டும் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள். பணப்புழக்கம் நன்றாக இருக்கும். உடன்பிறப்புகளின் உதவி கிடைக்கும். தாய் வழியிலும் எதிர்பார்த்த நன்மைகள் வந்து சேரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு கேட்ட இடத்தில் மாறுதல் கிடைக்கும். சம்பள உயர்வு பற்றிய தகவல் வந்து சேரும். புதிய வாகனங்கள் வாங்கும் யோகம் உண்டு. விருப்ப ஓய்வில் வெளிவருவது பற்றி சிந்திப்பீர்கள். பிள்ளைகளின் கல்யாண வாய்ப்புகள் கைகூடும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. ஆதியந்த பிரபு வழிபாடு அனைத்து நலன்களையும் வழங்கும். நாகசாந்திப் பரிகாரங்களைச் செய்தால் நன்மைகள் அடுக்கடுக்காக வந்து சேரும்.

## புதிய தொழில் தொடங்கும் வாய்ப்பு கிட்டும்



பொதுவாழ்வில் ஈடுபட்டு புகழ் குவிக்கும் கடக இராசி அன்பர்களே!

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்க நாளில் உங்கள் இராசிநாதன் சந்திரன் உச்சம் பெற்றிருக்கிறார். உங்கள் இராசியில் யோகம் செய்யும் கிரகமான செவ்வாய், நீச்சம் பெற்றிருக்கிறார். அவரோடு விரயாதிபதி புதன் இணைந்திருக்கிறார். உங்கள் இராசியில் இராகுவும் சப்தம ஸ்தானத்தில் கேதுவும் வந்து அமர்ந்திருக்கிறார்கள். இதுபோன்ற காலங்களில் கொஞ்சம் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. வீடு மாற்றங்கள், நாடு மாற்றங்கள் விரும்பியபடி நடைபெறுமா? என்பது சந்தேகம்தான். விடா முயற்சியையும், தன்னம்பிக்கையையும் பக்கபலமாகக் கொள்ள வேண்டிய நேரமிது.

மாதத் தொடக்கத்தில் தனாதிபதி சூரியன் 2இல் இருப்பதால், பொருளாதார நிலை சீராக இருக்கும். பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும் மாற்றங்களும் வந்து சேரும். நீங்கள் ஆராய்ந்து அறிந்து ஒரு செயலில் ஈடுபட்டாலும் கூட அதில் தாமதங்களே ஆட்கொள்ளும். நல்லவர்களை பகைத்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது. தீவிர முயற்சிக்குப் பிறகே திருமணம் போன்ற சுப காரியங்கள் நடைபெறும். குடும்பத்தில் சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமல் இருப்பது நல்லது. எந்த புது முயற்சியில் ஈடுபட்டாலும் குடும்பப் பெரியவர்களிடம் கலந்து ஆலோசித்த பிறகு ஈடுபடுவது உகந்தது.

பயணங்களால் விரயங்கள் அதிகரிக்கலாம். அலுவலகப் பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் சக ஊழியர்களோடு ஒத்துப் போவது நல்லது. இந்த மாதத்தில் வரும் குருப் பெயர்ச்சிக்குப் பிறகு, அடகு வைத்த நகைகளை மீட்கும் சந்தர்ப்பங்கள் கைகூடி வரும்.

துலா இராசிக்கு பெயர்ச்சியாகும் குரு அஷ்டம ஸ்தானத்தைப் பார்க்கப் போகிறார். இழப்புகளை ஈடுசெய்யக்கூடிய சூழ்நிலை. எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி ஆகியவற்றை எதிர்பார்க்கலாம். இராகு-கேதுக்களின் பிடியில் உங்கள் இராசி சிக்கியிருப்பதால், பாம்புக் கிரகங்களின் பல மறிந்து நாகசாந்திப் பரிகாரங்களை விரைவில் செய்து கொள்வது நல்லது. விநாயகர் சதுர்த்தியன்று விநாயகப் பெருமானை வழிபடுவதன் மூலமும் வெற்றிகள் வந்து சேரும்.

கடக சுக்ரனும், சிம்ம சுக்ரனும்

ஒகஸ்ட் 22 ஆம் திகதி கடகத்திலும் செப்டெம்பர் 15 ஆம் திகதி சிம்மத்திலும் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக தொழில் வளர்ச்சியில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பெண்வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். வாகனம் வாங்கும் முயற்சியில் அதிக அக்கறை காட்டுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்கள் வீடு கட்ட அல்லது சொத்துகள் வாங்க, கடன் உதவி கேட்டு விண்ணப்பித்திருந்தால் அது கிடைத்து மகிழ்ச்சி பெருகும்.

சிம்ம செவ்வாய் சஞ்சாரம்

ஒகஸ்ட் 28 ஆம் திகதி சிம்மத்திற்குச் செவ்வாய் செல்கிறார். இது ஒரு பொற்காலமாகும். மனக்கலக்கம் அகலும். மகிழ்ச்சி




கூடும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பக்கபலமாக இருக்கும் நண்பர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பர். சகோதர வர்க்கத்தினரின் ஒத்துழைப்பு உங்களுக்கு கிடைக்கும்.

சிம்ம புதன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 3,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் செப்டெம்பர் 2 ஆம் திகதி சிம்மத்திற்கு செல்கிறார். விரயாதிபதி தன ஸ்தானத்திற்கு வரும் பொழுது, விரயத்திற்கேற்ற தனலாபம் உங்களுக்கு கிடைக்கும். வீடு வாங்க வேண்டும், வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்க வேண்டும் என்று நினைத்தவர்களுக்கு இந்த நேரம் உகந்ததாக அமையும். பணமில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு பணம் தானாக வந்து சேரும்.

குருப்பெயர்ச்சிப் பலன்கள்!

செப்டெம்பர் 2 ஆம் திகதி துலாத்தில் சஞ்சரிக்கும் குருபகவான் அர்த்தாஷ்டம குருவாக வருகிறார். எனவே இடமாற்றம், ஊர்மாற்றங்கள் உருவாகலாம். வரவைக் காட்டிலும் செலவு கூடும். சுப விரயங்களைச் செய்து கொள்வது நல்லது. அப்போதுதான் வீண் விரயங்களில் இருந்து விடுபட இயலும். குருவின் பார்வையால் பத்தாமிடம் புனிதமடைவதால் புதிய தொழில் தொடங்கும் வாய்ப்பு கிட்டும். குரு பிரீதி செய்வது நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

யோசித்து செயற்பட வேண்டிய மாதமிது. உறவினர் பகை உருவாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். பொருளாதாரத்தில் ஏற்றமும், இறக்கமும் கலந்தே இருக்கும். கணவன்-மனைவிக்குள் உறவு பலப்பட விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது.

குடும்பப் பெரியவர்கள் உங்கள் மீது குறை சொல்லலாம். பிள்ளைகளின் முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். உடன்பிறப்புகள் உதவிக் கரம் நீட்டுவர். உத்தியோகத்தில் உள்ளவர் களுக்கு ஊர் மாற்றம் உருவாகலாம். பதவி உயர்வு கிட்டும். சம்பள உயர்வு பற்றிய சந்தோசத் தகவலும் வந்து சேரும். துர்க்கை வழிபாட்டை மேற்கொள்வதோடு, சர்ப்பக் கிரக வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள் சந்தோஷம் கிடைக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜயதாஸவுக்கு எதிராக எழுபது பேர் கையொப்பம்



நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு எதிராகக் கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையிலாப் பிரேரணைக்கு ஆதரவாக ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி இதுவரை 70 உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளதாகவும் இன்று நடைபெறவுள்ள கட்சியின் உயர்பீட கூட்டத்தில் குறித்த நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை இன்றுநடைபெறவுள்ள உயர்பீட கூட்டமானது மிகவும் முக்கியமானதாக இருக்கும் எனவும் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தனது பதவியை இராஜினாமா செய்ய வலியுறுத்தப்படுவார் எனவும் தெரிய வந்துள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை குத்தகைக்கு வழங்குவது தொடர்பில் அமைச்சரவை தீர்மானத்திற்கு உடன்பட்டு பின்னர் அதற்கெதிராக கருத்து தெரிவித்தமையானது அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பிற்கு பாதகமாகியுள்ளதாக விஜயதாஸ ராஜபக்ஷ மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இதேவேளை தான் நீதியமைச்சராக இருக்கும் வரை முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது என நீதியமைச்சர் பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தமை ஐ.தே.க. உறுப்பினர்களிடையே பாரிய விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தமிழ்த் தலைமைகளின் ஒன்றிணைவே தீர்விற்கு வழியமைக்கும்-சாணக்கியன்

தமிழ்த்தலைமைகள் அனைவரும் ஒன்றிணைந்தால் மட்டுமே எமக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பங்கள் காணப்படும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பட்டிருப்பு தொகுதி அமைப்பாளர் சாணக்கியன் இராசமாணிக்கம் நேற்று செவ்வாய்க்கிழமை தெரிவித்தார். தமிழ்த்தலைமைகளின் இன்றையநிலை குறித்து ஊடகவியலாளர்களுக்குகருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.

"தமிழர்களுக்கான நிரந்தரத் தீர்வினை இந்த நல்லாட்சியினைப் பயன்படுத்தி அடைந்து கொள்ளவேண்டும். இச்சந்தர்ப்பத்தினைத் தவறவிடுவதன் மூலம் தமிழர்கள் வரலாற்றுத் தவறினை இழைத்துவிடக் கூடாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (இ-7)

# மகிந்த அணியின் 7 எம்.பிக்கள் மைத்திரி பக்கம் சாய்கின்றனர்

## சு.க.இளைஞர் அணித் தலைவர் தகவல்

(கொழும்பு)

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஏழு பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைய விருப்பதாக சுதந்திரக் கட்சியின் இளைஞர் முன்னணி தலைவர் சாந்த பண்டார தெரிவித்தார். எதிர்வரும் தேர்தல்களை இலக்கு வைத்து கட்சியை பலப்படுத்தும் நோக்கில் ஏழு உறுப்பினர்களும் அரசுடன் இணைய விருப்பம் தெரிவித்திருப்பதாக சு.க. தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சாந்த பண்டார தெரிவித்தார்.

கூடிய விரைவில் ஏழு பேர் இணைந்து கொள்ளவிருப்பதுடன், அதற்கான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் சுட்டிக்காட்டிய அவர், ஏழு பேரினதும் பெயர்களை அறிவிப்பதற்கான சூழல் கனியவில்லையென்றும் கூறினார். ஒன்றிணைந்த எதிர்க்கட்சியில்சு.க. உறுப்பினர்கள்பொது ஜன பெரமுன உள்ளிட்ட எந்தவொரு கட்சியிலும் உறுப்புரிமையைப் பெற மாட்டார்கள். எனவே அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கத் தேவையில்லை.

"ஒன்றிணைந்த எதிர்க்கட்சி ஆட்டங்கண்டுள்ளது. அவர்களுக்கிடையில் முறுகல் நிலை அதிகரித்துள்ளது" என்றும் சாந்த பண்டார கூறினார். இளைஞர் முன்னணியால் நடத்தப்பட்ட பக்கச் சார்பற்ற, சுதந்திரமான கணக்கெடுப்பின்படி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கான ஆதரவு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கணக்கெடுப்பில் கலந்துகொண்டவர்கள் இதனைத் தெளிவாகக் காண்பித்துள்ளனர். நடைபெறவுள்ள மாகாண சபை தேர்தல்களுக்கான வேட்பாளர்கள் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் பிற்போடப்படுவதற்கு ஜனாதிபதியே காரணம் என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை. உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்தைத் திருத்துவதாலேயே தாமதம் ஏற்பட்டுள்ளது.



எதிர்வரும் 24ஆம் திகதி இதனை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. சட்டத்திருத்தம் நிறைவேற்றப்பட்டதும் தேர்தல்களை நடத்த முடியும் என்றார்.

பாரத லக்ஷ்மன் படுகொலை செய்யப்பட்ட 2012 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தல்களின் போது, புதிய தேர்தல் முறைமையொன்று அவசியம் என மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

குறிப்பாக விருப்புவாக்கு முறையில் மாற்றம் வேண்டும் என மக்கள் வலியுறுத்தியிருந்தனர். இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா, சு.க.செயலாளர் துமிந்த திசாநாயக்கவுக்கு எதிராக முன்வைத்திருக்கும் குற்றச்சாட்டு தொடர்பில் மத்திய குழு கவனம் செலுத்தும் என்றார். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1159

Search for people, places and things | Nagendram Home

### பரதன்




### நித்தியா




### வரதன்




### சிந்து




### குமார்




### நிமா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்சி உலகில் மக்களை ஈர்த்த பிக்போஸ்




## விக்ரம் படத்தில் ஓவியா



நடிகை ஓவியா பிக்போஸ் நிகழ்ச்சியில் இருந்து வெளியே சென்ற அவரை தங்கள் படங்களில் நடிக்கவைக்க பல இயக்குனர்கள் முயன்று வருகிறார்கள்.

இந்நிலையில் அரிமா நம்பி, இருமுகன் ஆகிய படங்களை இயக்கிய ஆனந்த் ஷங்கர் தன் அடுத்த படத்தில் ஓவியாவை நடிக்கவைக்க விரும்புவதாக தெரிவித்துள்ளார்.

""சினிமாவை பார்க்காதவர்களும் பிக்போஸ் நிகழ்ச்சியை பார்த்து வருகின்றனர். ஹவுஸ் மேட்ஸ் எல்லோரும் இந்த நிகழ்ச்சியின் மூலமாக வீட்டில் இருப்பவர்களின் மனதில் பதிந்துவிட்டனர். அதனால் அவர்களின் மார்கெட் நிலைமை சற்று அதிகம்தான். என் படத்தில் ஓவியா நடித்தால் நன்றாகயிருக்கும் என்றிருந்தால் அவரை நடிக்க வைப்பேன்" என அவர் ஒரு பேட்டியில் தெரிவித்துள்ளார்.

## ஆட்டம் ஆரம்பம்



BiggBoss நிகழ்ச்சியில் நுழைந்த நாள் முதல் எல்லோரின் பிரச்சினையையும் பேசித் தீர்த்து வருபவர் சிநேகன். அண்மையில் வையாபுரி, ரைசாவைத் தாக்கிப் பேசுகிறார்.

இதற்கு ரைசா எனக்கு இதுபோல் செய்பவர்களை பிடிக்காது, என்னை வந்து இப்படிச் செய், அப்படிச் செய் என்று கூற யாருக்கு உரிமை கிடையாது என்று சிநேகனிடம் பேசுகிறார். ஒரு கட்டத்தில் ரைசா என்னை விட்டுவிடுங்கள் என்று கூறி அந்த இடத்தில் இருந்து கிளம்புகிறார். தற்போது பரணி, ஓவியாவைப் போல் ரைசா ஒதுக்கப்படுவதாக ரசிகர்களுக்கு எண்ணம் வந்துள்ளது.

## சண்டை


என்னால் தூங்க முடியவில்லை என்று ரைசா பிக்போஸிடம் தனது கோபத்தை வெளிப்படுத்தினார். அதுமட்டுமில்லாமல் தற்போது நடந்து வரும் பேய் டாஸ்க் அவருக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை. இதனால் நான் வீட்டுக்குப் போக வேண்டும் என்று பிக்போஸிடம் புலம்பிக் கொண்டிருந்தார்.

இந்நிலையில் சிநேகன் , வையாபுரி போன்ற வீட்டில் உள்ள சில பேரிடம் சண்டை போடு வது போல் நடந்து கொள்கிறார் ரைசா.

## யாரிந்த பிக்போஸ்?

பிக்போஸ் நிகழ்ச்சிக்கு பின்னால் இருந்து ஒலிக்கும் கம்பீரக் குரல் யார் என்பது குறித்த தகவல்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளது.

பிக்போஸில் ஒலிக்கும் அந்தக் குரல் பிரபல டப்பிங் கலைஞரான கோபி நாயரின் குரல் என்று சமீபத்தில் வெளியான தகவலை கோபிநாயரே ஒரு பேட்டியில் மறுத்தார். அந்தக் குரல் தன்னுடையது இல்லை என்று கூறியிருந்தார்.




இந்நிலையில் அம்புலி உள்ளிட்ட ஒரு சில படங்களில் நடித்தவரும் தனியார் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் நடன நிகழ்ச்சி மூலம் பிரபலமடைந்தவருமான கோகுல்நாத் தான் பிக்போஸ் நிகழ்ச்சிக்கு பின்னால் இருந்து குரல் கொடுத்து வருவதாக சமூக வலைத்தளங்களில் பரவலாக பேசப்பட்டு வருகிறது.

## ஆதரவு

பிக்போஸ் மக்களின் விமர்சனங்களை அதிகம் பெற்று வருகிறது. நாங்களும் போஸ் தான் என வாக்குகள் மூலம் மக்கள் தங்கள் மனதில் நிற்கும் பிரபலங்களுக்கு ஆதரவு காட்டி வருகின்றனர். தற்போது பிரபல நடன கலைஞரும், நடிகருமான சதிஷ் தன் டுவிட்டர் பக்கத்தில் மரியாதை இல்லா அட்டிடியுட் ஜாஸ்தி ஆகிடுச்சு. யாரு பேசுறாங்கன்னு பாருங்க. ஹவுஸ் மேட்ஸ் உள்ள தீபாவளி கொண்டாடுறாங்க. ஆனால் இந்த சனிக்கிழமை ஆரவ் [illegible] ஸ்மைலி[illegible] கேள்வி எழுப்பியுள்ளார்.

## சிநேகனின் கதை



பிக்போஸில் கலந்துகொண்ட போட்டியாளர்களில் ஒருவர் கவிஞர் சிநேகன். உள்ளுக்குள் இருப்பவர்களுக்கு சண்டை வந்தாலும் எல்லோருடனும் நட்பு பாராட்டுபவர் இவர்.

அனைவரும் ஆதரிக்கும் ஒருவர். உறவுகளை நினைத்து சில நேரம் அழுதிருக்கிறார். பிக்போஸ்'க்காக ஒரு பாடலையும் பாடினார். தனக்கென தற்போது யாரும் இல்லை எனக் கூறும் அவருக்கு தஞ்சாவூர் மாவட்டம், புதுக்கரிப்பட்டியே சொந்த ஊராகும்.

இவருக்கு 4 அண்ணன்கள் இருக்கிறார்கள். சிநேகன் என்று சொன்னால் ஊரில் இருப்பவர்களுக்கு தெரியாதாம். செல்லாம் என்று உடனே அடையாளம் காட்டிவிடுவார்களாம்.

தன் அண்ணன்களுக்காக ஒன்றரை ஏக்கர் இடத்தில் வீடு கட்டிக்கொடுத்துள்ளாராம். ஆனால் சிநேகன் சொந்த ஊருக்கு வந்தால் அந்த வீட்டுக்கு போகமாட்டாராம். மேலும் அவருக்கென்று ஒரு சிறிய வீடு இருக்கிறது. அவரின் நினைவுகள் முழுக்க அங்கு தான் இருக்கிறதாம். இந்த வீட்டில் தான் எப்போது தங்குவாராம். இங்கேதான் அவர் அதிகம் அன்பு வைத்துள்ள தன் அம்மாவை இழந்தார். இந்த வீட்டில் அவரைத் தவிர மறைந்த முதல்வர் வழங்கிய விருது மட்டும் இருக்கிறதாம்.

## ஓடிய சக்தி



பிக்போஸ் நிகழ்ச்சியில் இருந்து சக்தி வெளியேற்றப்பட்டார்.

அவர் வெளியே வரும்போது தனக்கு ரசிகர்களின் கரவொலி விண்ணை பிளக்கும் என்று எதிர்பார்த்தார். ஆனால் ரசிகர்கள் இவரை கண்டு கொள்ளவில்லை. அதேபோல கமல் ஓவியா பெயரை சொல்லும்போதெல்லாம் எழுந்த கரவொலியை பார்த்து சற்று அதிர்ச்சி அடைந்துதான் போனார். இந்த நிலையில் நீண்ட நாட்கள் நிலுவையில் இருந்த ஒரு விளம்பர படத்தில் நடிப்பதற்காக சக்தி சென்றுள்ளார்.

அப்போது அங்கு ஓவியாவின் ரசிகர்கள் சக்தியை சூழ்ந்து கொண்டனர். ஓவியா ரசிகர்கள் சேரச் சேர கூட்டம் அதிகமாகி கூச்சல் எழுந்து விளம்பரப் பட படப்பிடிப்பு தடைப்பட்டுள்ளது. மேலும் சக்தியிடம் ஓவியா ரசிகர்கள், ஓவியாவை ஏன் அடிக்கப் போனீர்கள். அவரை ஏன் தனிமைப்படுத்தினீர்கள் என்று அடுக்கடுக்காக கேள்விகளை எழுப்பியுள்ளனர்.

இதில் ஆடிப்போன சக்தி அந்த இடத்தில் இருந்து வெளியேறி காரில் ஏறி [illegible]ள்ளார். ஆனாலும் விடாமல் பைக்கில் துரத்திச் சென்றுள்ள [illegible]யா ரசிகர்களிடமிருந்து சக்தி தப்பியுள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஏறாவூரில் தாய்,மகள் படுகொலை! சந்தேகநபர்களுக்கு மறியல் நீடிப்பு


ஏறாவூரில் தாய் மற்றும் மகள் ஆகியோரை கொலை செய்த சந்தேக நபர்கள் அறு வரும் ஏறாவூர் சுற்றுலா நீதி மன்றத்தில் மேலதிக நீதவா னும் மேலதிக மாவட்ட நீதிப தியுமாகிய முஹம்மத் இஸ் மாயில் முஹம்மத் றிஷ்வி முன்னிலையில் நேற்று முன் தினம் ஆஜர்படுத்தப்பட்ட னர்.

இதன்போது சந்தேக நபர்களை ஓகஸ்ட் 23ஆம் திகதி வரை விளக்கமறிய லில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

ஏறாவூர் நகர பிரதேச த்தில் முகாந்திரம் வீதி முத லாவது குறுக்கு ஒழுங்கை யிலுள்ள வீட்டில் வசித்து வந்த தாயான நூர்முஹம்மது உஸைரா (வயது- 56), அவ ரது திருமணமாகிய மகளான ஜெனீராபானு மாஹிர் (வயது 32) ஆகியோர் கடந்த செப்டெம்பர் 11 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டிரு ந்தனர்.

சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட ஆறு சந்தேக நப ர்களும் கடந்த செப்டெம்பர் மாத த்திலிருந்து தொடர்ச்சியாக விளக்கமறியல் உத்தரவில் இருந்து வருகின்றனர்.

ஏறாவூர் ஆதார வைத்தி யசாலை பின் ஒழுங்கை யைச் சேர்ந்த இஸ்மாயில் முஹம்மது பாஹிர், அப்துல் மஜீத் மாவத்தை ஐயங்கே ணியைச் சேர்ந்த வசம்பு என் றழைக்கப்படும் உஸனார் முஹம்மது தில்ஷான், பாட சாலை வீதி மீராகேணியைச் சேர்ந்த கலீலுர் ரஹ்மான் அஹம்மது றாசிம், பள்ளியடி வீதி, காவத்தமுனை, ஓட்ட மாவடியைச் சேர்ந்த புஹாரி முஹம்மது அஸ்ஹர், ஏறா வூர் நகர் போக்கர் வீதியைச் சேர்ந்த இஸ்மாயில் சப்ரின் மற்றும் ஏறாவூர் காட்டுப்ப ள்ளி வீதியைச் சேர்ந்த அபூ பக்கர் முஹம்மது பிலால் ஆகி யோரே விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளவர்களாவர். (இ-7)




# பிழைகளை மூடி மறைப்பதற்கு பயன்படும் புத்தரின் வார்த்தைகள்

## ஜே.வி.பியின் தலைவர் அநுர விசனம்

(கொழும்பு)

மோசமான திருடன் தனது பிழையை மூடி மறைத்துக் கொள்ள கௌதம புத்தரின் வார்த்தைகளை பயன்படுத் திக் கொள்வதாக ஜே.வி.பி யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள் ளார்.

கொழும்பில் நேற்று நட ந்த உள்நாட்டு இறைவரித் திணைக்கள தொழிற்சங்க கூட்டத்தில் பங்கேற்று உரை யாற்றிய போது அவர் இத னைக் கூறியுள்ளார்.

வெளிவிவகார அமைச் சராக கடமையாற்றிய ரவி கருணாநாயக்க பதவியை ராஜினாமா செய்தமை குற்றச் செயலுக்கான தண்டனை கிடையாது. எனினும் இதனை ஓர் தண்டனையாக சமூகத் தில் எடுத்தியம்பப்பட்டுள்ளது.

தண்டனை விதிக்கப்ப டும் ஓர் நிறுவனத்தின் முன் னிலையில் ரவி கருணா நாயக்க நிறுத்தப்பட வேண் டும்.

மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பில் விசாரணை நடத்தவே ஜனா திபதி ஆணைக்குழு நிறு வப்பட்டது.

எனினும் கொலைகா ரனை தேடிச் செல்லும் போது கசிப்பு (சட்டவிரோத மதுபா னம்) உற்பத்தி செய்தவனை கைது செய்வதனைப் போன்ற நிகழ்வே ரவி கருணாநா யக்க பதவி விலகியதாகும்.

பிணை முறி கொடுக்கல் வாங்கல்களின் பின்னரே ரவி கருணாநாயக்கவின் வீட்டு க்கு அர்ஜுன் அலோசியஸ் வாடகை செலுத்தியுள் ளார்.

குற்றவாளி ஒருவர் துறை சார் அமைச்சரின் வீட்டு வாடகை செலுத்தியமை தொட ர்பில் தமக்கு தெரியாது என ரவி கருணாநாயக்க கூறியது சட்ட ஆலோசனைக்கு அமை வாக எனக் கூறியிருந்தால் அது கையூட்டல் பெற்ற குற் றச் செயலாகி விடும் என அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். (இ-7)

# புதிய சந்தையில் துர்நாற்றம்



நெல்லியடி புதிய சந் தைப் பகுதியில் குப்பை அகற்றும் வாகனம் தரித்து நிற்கும் இடத்தில் வெளி இடங்களில் உள்ளவர்கள் கோழிக் கழிவு களையும் வேறு கழிவுகளை யும் வாகனத்தில் கொண்டு வந்து போடுவதனால் துர்நா ற்றம் வீசுகின்றது எனவும் வியா பாரிகள் வியாபாரம் செய்ய முடியாத நிலை உள்ளது எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதேவேளை மீன் சந்தை க்குள் நாய்களும் பூனைக ளும் திரிவதைக் காணக் கூடி யதாக உள்ளது. இதேவேளை கரவெட்டி சுகாதாரப் பிரிவி னரும் நெல்லியடி பொலிஸா ரும் நேரில் சென்று எச்சரி க்கை செய்து ள்ளனர். அதே வேளை கரவெட்டி பிரதேச சபையினர் கழிவுகளை உட னுக்குடன் அகற்றுமாறு கேட் டுக் கொண்டனர். (இ-60)

# 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர். திருமதி.

## பிலோமினா வின்சென் டிப்போல்

அன்னை மடியில்
1940 - 08 - 24

ஆண்டவன் அடியில்
2008 - 08 - 17

ஆண்டு ஒன்பது அகன்றிட்ட வேளை
இன்றென எண்ணிடும் வேளையில்
நெஞ்சம் கனக்கிறதம்மா
நிகழ்வுகள் நினைவில் தெரிகிறதே
உங்களை விட உயர்வேது
உலகில் உங்கள் இனிய
நினைவுகளில் எங்கள்
வாழ்க்கைப் பயணமம்மா.
ஆண்டவன் அடியில் சாந்தி பெற
பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்திக்காக இன்று 17.08.2017 காலை 6.00 மணிக்கு பருத்தித்துறை புனித தோமையார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

வாழ்ந்தாலும் இறந்தாலும் நாம்
ஆண்டவருக்கே உரியவர்கள் (உரோ 14:8)

கடற்கரை வீதி,
பருத்தித்துறை.

(149)

நினைவில் வாழும்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## முனிவர் காட்டிய வழி



முன்னொரு காலத்தில் நந்திபுரத்தை ஆண்டு வந்த விக்கிரம சேனனுக்கு ஒரு அழகான ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு சிம்ம சேனன் எனப் பெயரிட்டு சீரும், சிறப்புமாக வளர்த்து வந்தான்.

ஆனால் சிம்மசேனனோ சிறு வயது முதலே பெரியவர்களையும் தாய், தந்தையரையும் மதிக்காமல் தன் கருத்துப்படி ஆணவத்துடன் வளர்ந்து வந்தான். அவனுக்கு எட்டு வயது நிரம்பியதும் கல்வி மற்றும் அனைத்து கலைகளையும் கற்கும் பொருட்டு குரு குலத்திற்கு அனுப்பி வைத்தார் மன்னர்.

அங்கும் அவன் யார் பேச்சையும் கேட்பதில்லை. குருவையே மதிப்பதில்லை. அவனுக்கு எப்படி புத்தி புகட்டுவது என்ற யோசனையில் இருந்தார் குரு. அந்த குருவிடம் மிருகங்களை வசியம் செய்து, அவர் நினைத்தபடி ஆட்டுவிக்கும் சக்தி இருந்தது. அதை உபயோகித்து அவனைத் திருத்தவும் ஒரு வழி கண்டுபிடித்தார்.

ஒரு நாள் அனைவரும் ஆற்றில் நீராடிக் கொண்டிருந்தபோது இளவரசன் மட்டும் கரையில் அமர்ந்து ஆற்றுக்குள் கல் வீசி விளையாடிக் கொண்டிருந்தான். தூரத்தில் தண்ணீர் அருந்திக் கொண்டிருந்த சிறுத்தையை, தன் வசிய சக்தியால் ஈர்த்து இளவரசனை துரத்தும்படி பணித்தார் குரு. சிறுத்தை இளவரசனை துரத்த ஆரம்பித்ததும், "அய்யோ!" என்று அலறியபடி அடர்ந்த காட்டிற்குள் ஓடத் தொடங்கினான் இளவரசன்.

அடர்ந்த காட்டினுள் ஓடிய இளவரசன் வெகு தூரம் ஓடிக் களைத்து, ஒரு பெரிய மரத்தில் ஏறி அதன் உச்சிக் கிளையில் அமர்ந்து கொண்டான். துரத்தி வந்த புலி அவனைக் காணாமல் அங்கேயே சுற்றி சுற்றி வந்தது. பசி வயிற்றைக் கிள்ள பயமும் அசதியும் சேர்ந்து கொள்ள அப்படியே தூங்கி போனான். திடீரென விழித்துப் பார்த்த பொழுது சிறுத்தையை காணவில்லை. சூரியன் உச்சியிலிருந்தான். பசி, களைப்பு, பயம், கவலை இவற்றால் கால், கை நடுக்கமுற என்ன செய்வதென்று புரியாமல் விழித்தான் இளவல்.

சிறு வயது முதலே தன்னை நன்றாக வளர்த்த தாய், தந்தை மற்றும் உறவினர் அனைவரையும் உதாசீனப் படுத்தியதை நினைத்து மிகவும் வருந்தினான். தன்னுடன் பயிலும் அனைத்து மாணவர்களும் குருவிடம் எவ்வளவு பயபக்தியுடன் நடந்து கொள்கிறார்கள். நான் மட்டும் ஏன் இப்படி இருக்கிறேன். மற்ற மாணவர்கள் குருவுக்கு செய்யும்பணிவிடைகளையும் நினைத்துக் கொண்டான். அதில் ஒன்றைக்கூட தான் செய்தது இல்லை. அதனால் தான் இத்துன்பம் நேர்ந்தது என்று நினைத்து வருந்தினான்.

உடன் அங்கேயே குருவை மனதில் நினைத்து வணங்கினான். குருகுலத்தை சென்று அடைய வழி காட்டும்படி மானசீகமாக குருவிடம் வேண்டிக் கொண்டான். அடுத்த நொடி யானையின் பிளிறல் சப்தம் கேட்டது. கீழே உற்று நோக்கிய இளவரசன் யானை ஒன்று தனியே நடந்து செல்வதை கவனித்தான். யானையின் பின்னே சீரான இடைவெளி விட்டு நரி ஒன்று செல்வதையும் பார்த்தான். யானைகள் தண்ணீர் இருக்கும் இடத்தை கண்டுபிடிக்கும் திறன் பெற்றவை என்று கேள்விப் பட்டிருக்கிறான். யானை தண்ணீருக்காக செல்வதை அறிந்து, அதன் பின்னால் நரியும் தொடர்ந்திருக்கக்கூடும் என்று ஊகித்த இளவரசன் அவைகளுக்கு பின்னால் அவனும் நடக்க ஆரம்பித்தான்.

வெகு நேரத்திற்கு பின் யானை ஒரு ஆற்றங்கரையை அடைந்து நீர் அருந்த தொடங்கியது. ஆற்றைக் கண்டதும் மகிழ்ச்சியடைந்த இளவரசன் ஆற்றின் கரையோரமாக நடந்து குருவின் குடிலை அடைந்தான். குருவின் காலடியில் விழுந்து தன்னை மன்னிக்கும்படி வேண்டிக் கொண்டான்.

நாடாள வேண்டிய மன்னன் தவறான வழியில் செல்வதை தடுக்க, இச்சிறு நாடகம் நடத்த வேண்டி வந்ததை எண்ணிய குரு, அதன் பிறகு அவனுக்கு கற்பிக்க வேண்டிய அனைத்து கலைகளையும் கற்றுக் கொடுத்து ஒரு நல்ல நாளில் மன்னரிடம் அனுப்பி வைத்தார்.

## 08.2017 17 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1807 - ராபர்ட் ஃபுல்ட்டனின் முதலாவது அமெரிக்க நீராவிப்படகு நியூ யார்க்கில் இருந்து புறப்பட்டது. இதுவே உலகின் முதலாவது வர்த்தக நீராவிப்படகு ஆகும்.
- 1862 - லக்கோட்டா பழங்குடியினர் அமெரிக்காவின் மினசோட்டாவில் வெள்ளையினக் குடியேற்றவாதிகள் மீது தாக்குதலைத் தொடுத்தனர்.
- 1918 - போல்ஷெவிக் புரட்சியாளர் மொயிசேய் யுரீட்ஸ்கி படுகொலை செய்யபட்டார்.
- 1939 - த வைசார்ட் ஒஃப் ஓஸ், முதற்தடவையாக நியூ யோர்க் நகரில் காண்பிக்கப்பட்டது.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்காவின் எட்டாவது வான்படையினர் ஜெர்மனியில் தமது 60 குண்டுவீச்சு விமானங்களை இழந்தனர்.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: வின்ஸ்டன் சேர்ச்சில், பிராங்கிளின் ரூஸ்வெல்ட், கனடா பிரதமர் வில்லியம் லயன் மக்கென்சி கிங் ஆகியோர் கலந்து கொண்ட கியூபெக் மாநாடு ஆரம்பமானது.
- 1945 - இந்தோனேசியா விடுதலையை அறிவித்தது.
- 1947 - இந்தியாவையும் பாகிஸ்தானையும் பிரிக்கும் ராட்கிலிஃப் கோடு வெளியிடப்பட்டது.
- 1958 - பயனியர் 0 சந்திரனைச் சுற்ற அனுப்பப்பட்டது. புறப்பட்ட 77 செக்கன்களில் இது அழிந்தது.
- 1959 - மொன்டானாவில் இடம்பெற்ற 7.5 அளவு நிலநடுக்கத்தினால் குவேக் ஏரி அமைக்கப்பட்டது.
- 1960 - காபொன் பிரான்சிடம் இருந்து விடுதலை அடைந்தது.
- 1962-கிழக்கு ஜெர்மனியில் இருந்து பேர்லின் சுவரைக் கடந்து தப்பித்துச் செல்ல முயன்ற 18-வயது பேட்டர் ஃபெக்டர் சுட்டுக் கொல்லப் பட்டார். இந்தச் சுவரைக் கடந்து செல்ல முயன்று இறந்த முதலாவது நபர் இவராவார்.
- 1969 - மிசிசிப்பியில் இடம்பெற்ற சூறாவளியில் 248 பேர் கொல்லப்பட்டனர்.

பிறப்புகள்

- 1961 - திருமாவளவன், தமிழக அரசியல்வாதி
- 1962-தொல். திருமாவளவன்,தமிழக அரசியல்வ் சாதி
- 1963 - சங்கர், இந்தியத் திரைப்பட இயக்குநர்

இறப்புகள்

- 1909-மதன் லால் டிங்கரா, இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (பி. 1883)
- 1983-கே. ஏ. மதியழகன், தமிழக அரசியல்வாதி, தமிழ்நாடு அமைச்சர் (பி. 1926)
- 1986-எம். ஜி. சக்கரபாணி, தென்னிந்திய நாடக, திரைப்பட நடிகர் (பி. 1911)
- 2007-தசரத் மான்ஜி, இந்தியப் பொறியாளர் (பி. 1934)

சிறப்பு நாள்

- விடுதலை நாள் (இந்தோனேசியா, சப்பானிடம் இருந்து 1945)
- விடுதலை நாள் (காபோன், பிரான்சிடம் இருந்து 1960)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 80 | 100 | 140 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 200 | 240 | 300 |
| தக்காளி | 160 | 200 | 120 | 120 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 60 | 80 | 80 |
| கோவா | 100 | 140 | 80 | 120 | 120 |
| கரட் | 100 | 250 | 150 | 200 | 200 |
| பூசணி | 50 | 100 | 40 | 60 | 60 |
| புடோல் | 50 | 100 | 50 | 120 | 80 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 160 | 200 | 150 | 200 | 160 |
| பெரிய வெங்காயம் | 120 | 140 | 120 | 120 | 140 |
| பாகற்காய் | 200 | 200 | 150 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 50 | 100 | 70 | 80 | 70 |
| கருணைக்கிழங்கு | 120 | 150 | 80 | 160 | 90 |
| பயற்றங்காய் | 100 | 120 | 100 | 80 | 120 |
| லீக்ஸ் | 100 | 120 | 70 | 100 | 100 |
| பீற்றூட் | 50 | 120 | 35 | 80 | 80 |
| கறிமிளகாய் | 100 | 180 | 120 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 50 | 20 | 20 | 60 | 50 |
| போஞ்சி | 200 | 200 | 150 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 100 | 60 | 60 | 80 | 120 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 30 | 30 | 15 |
| தேசிக்காய் | 80 | 80 | 80 | 200 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 60 | 70 | 50-70 | 60 |
| இராசவள்ளி | 200 | 200 | — | — | — |
| வெங்காயப்பூ | 200 | 200 | 150 | 200 | 200 |
| முள்ளங்கி | 80 | 100 | 30 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 40 | 25 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 80 | 60 | — | 80 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> ஆடம்பரத்தின் மென்மையான மெத்தையின் மீது தான் பெரும்பாலான ராஜ்யங்கள் அழிந்தன.
> ~ யங்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஒற்றுமை இன்றேல் அனைவருக்கும் தாழ்வு

தமிழ் அரசியல் தரப்பினருக்கு ஒரு முக்கிய மான பணி இருப்பதாக இருந்தால், அது அவர்கள் அனைவரும் ஒற்றுமைப்படுதல்; ஒன்றுபடுதல் என்பதாகவே இருக்க முடியும்.

இந்த ஒற்றுமை விரைவாக ஏற்படாத கட்டத் தில் நிலைமை படுமோசமாகும் என்பது நிறு திட்டமான உண்மை. எனினும் ஒற்றுமைப்படுவ தில் எவரும் கரிசனை கொள்வதாகத் தெரிய வில்லை.

மாறாக ஒற்றுமையைக் குலைத்து அதன் மூலம் தமிழ் மக்களின் உரிமை விடயத்தில் தளர்வு அடையச் செய்வதிலேயே கவனம் செலுத்தப்படுகிறது என்பதையும் உணர முடி கின்றது.

இவ்வாறு ஒற்றுமையைக் குலைத்து தமிழ் அரசியல் தரப்புகளைச் சின்னாபின்னமாக்கி எவரிடமும் தமிழ்ப்பற்று; தமிழ் மக்களுக்கான உரிமை என்ற விடயத்தை இல்லாமல் செய்து,

அடுத்த தேர்தலில் எனக்கான பதவியை எங்ஙனம் தக்கவைப்பது என்ற நிலைமைக் குள் கொண்டு வரும் பணியை நம் அரசியல் தரப்பில் இருக்கக்கூடிய சிலர் கனகச்சிதமாக செய்கின்றனர் என்பது உண்மை.

எதுவாக இருந்தாலும் இப்போது இருக்கக் கூடிய மிகமிக முக்கியமான விடயம் தமிழ் அரசியல் தரப்புகள் ஒன்றுபடுவதுதான்.

இதைச் செய்வதில் நாம் காட்டும் அசமந்தம் தமிழினத்துக்குப் பேரிழப்புக்களையும் மீட்சி பெறமுடியாத சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் தோற்றுவிக்கும் என்பதில் இருவேறு கருத்துக் கிடமில்லை.

இத்தகைய நிலைமை ஏற்பட்டுவிட்டால் இல ங்கைத் தமிழர்கள் ஏதுமற்றவர்கள் என்பதாக நிலைமை முடியும்.

எங்கள் தமிழினம் இன்றுவரை துன் பத்தை அனுபவிக்கின்றது. காணாமல்போன வர்கள் தொடர்பில் எந்த முடிவும் இல்லை; சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் வாழ்க்கை சூனியமாய்ப் போயுள்ளது.

தவிர, இளம் வயதில் குடும்பத் தலைவனை இழந்து விதவைக் கோலத்தில் வாழும் பரி தாபம் சொல்லுந்தரமன்று. இதுவே எங்கள் இனத்தின் கோலம்.

இது இவ்வாறாக இருக்க, எங்கள் அரசி யல் தலைமைகள் தங்களுக்குள் குத்துப்பட்டு அரசியல் பதவி ஆசைக்கு அடிபடுகின்றனர். இந்தக் கொடுமைகள் முடிவுக்கு கொண்டு வரப் பட வேண்டும்.

இனத்துக்காக தமிழ் மக்களுக்காக வாழு தல்; அரசியல் பணி செய்தல் என்ற ஒரு உயரிய மனமாற்றத்தை நம் அரசியல் தரப்புகளிடம் ஏற்படுத்தியேயாக வேண்டும்.

நாம் அனைவரும் ஒன்றுபடுவது தவிர்க்க முடியாத - காலத்தின் அவசிய தேவையாகும்.

இருந்தும் நாளுக்கு நாள் தமிழ் அரசியல் தரப்புக்களுக்கிடையேயான ஒற்றுமை குலை ந்து போகிறது.

இதைப்பார்க்கும் போது இதன் பின்னணி யில் பலமான சக்தி ஒன்று செயற்படுகிறது என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

இருந்தும் இந்த தீய சக்திகளை உடைத்து - தகர்த்து எம் இனம் பட்ட வேதனைகள், எம் மக் கள் கொன்றொழிக்கப்பட்ட கொடூரங்கள் இவ ற்றை நினைத்தேனும் ஒன்றுபட்டு எங்கள் அரசியல் கட்டமைப்பை வீரியமாக்க வேண்டும்.

இதில் தக்கார் தலையிடல் அவசியமான தாகும்.

# தமிழ் உணர்வோடு கற்கும் மாணவர்களை எம்மால் உருவாக்கமுடியாமல் போயுள்ளது

## வடக்கு ஆளுநரின் செயலாளர் கவலை

தமிழ் உணர்வோடு கல்வி கற்கும் மாணவர் களை எம்மால் உருவாக்க முடியாமல் போயுள்ளது என தெரிவித்த வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ. இளங்கோவன், தமிழ்,சைவ பாடங்கள் எமது வாழ்க்கை யுடன் எவ்வாறு இணைந்து ள்ளன என்பதை எடுத்துரை க்கும் வகையில் கல்வி முறை மாற வேண்டும் என வும் வேண்டுகோள் விடுத் துள்ளார்.

யாழ்.மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு வால் வெளியிடப்படும் நல் லைக் குமரன் வெள்ளி விழா மலர் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் யாழ்ப்பா ணம் நாவலர் வீதியிலுள்ள நாவலர் கலாசார மண்டபத் தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற் றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்று கையில்,

யாழ். குடாநாட்டின் முகப்பாக யாழ். மாநகர சபை காணப்படுகிறது. அது எமது அடையாளமாக உள் ளது. மாநகர சபையானது பல் வேறு பணிகளை ஆற்றி வருகின்ற போதிலும் முக்கி யமாக எமது அடையாளங் களை பேணும் சமயம் சார் ந்த விடயங்களில் பல்வேறு நெருக்கடிகளை தாண்டி பல விடயங்களை தொடர்ச்சி யாக செய்துவருகிறது.

முன்னைய காலங்க ளில் எமது சமய விழாக்க ளில் முன்னின்று உழைத் தவர்களின் பெயர்களை சொல்லி விளிப்பதற்கு கூட தற்போது தயக்கமாக உள் ளது. நாம் கூறுவதை எவ் வாறு எடுத்துக்கொள்வார்கள் என்ற ஐயம் ஏற்படுகின்ற வாறு இன்றைய கால கட்டம் மாறியுள்ளதை நாம் அறிய வேண்டும். இருப்பினும் வரலாறுகளில் நடந்த சம்ப வங்களை நாம் மறந்து விடா மல் பதிவு செய்ய வேண்டும் என்பது மிக மிக முக்கியம் ஆகும்.

நாம் வடபகுதியில் இரு ந்து கொழும்பு செல்லும் போது பல இடங்களை கட ந்து செல்வோம். அந்த இடங் களில் தொன்மை, பழைமை எவ்வாறு பேணப்பட்டுள்ளது என்பதை அவதானிக்க முடியும்.

அதேபோன்று நல் லைக் கந்தனுடைய சூழல் பகு தியும் அவ்வாறு தொன்மை, பழைமை பேணப்படும் பகு தியாக இருக்க வேண்டும் என்பதை நாம் உணர்ந்து செயற்பட வேண்டும்.

எமது பழைமையை காப் பது என்பது ஒவ்வொரு தனிப் பட்டவருடைய உறுதியான நிலைப்பாடாக இருக்க வேண் டும். எந்தவொரு விடயமும் நடந்து முடிந்த பின் அதைப் பற்றி கதைத்து பயனில்லை. ஒரு செயற்பாடு நடக்க முன்னர் ஆலோசனைகளை சரியான முறையில் முன் வைத்தால் எந்த விடயங் களிலும் நல்ல சூழலை ஏற்ப டுத்த அனைவருக்கும் வாய்ப் பாக அமையும்.

எமது சமூகத்தில் சுயந லம் பார்க்காது பலர் உதவி கள் செய்து வந்துள்ளார்கள். தற்போதும் செய்து வருகிறார் கள்.சமூக அக்கறையுடன் செயற்படுபவர்கள் உள்ளார் கள். அவர்கள் கௌரவிக்கப் பட வேண்டும். அவர்களின் பணிகள் பதிவிடப்பட வேண டும்.

எமது மாணவர்களுக்கு ரிய தமிழ்,சைவம் பற்றிய கற்கை முறை மாற்றம் செய் யப்பட வேண்டும். ஏனெ னில் உணர்வோடு கல்வி கற்கும் மாணவர்களை எம் மால் உருவாக்கமுடியாமல் போயுள்ளது.

ஆசிரியரின் பணிகள் மிக முக்கியமானது. தமிழ், சைவ பாடநெறிகள் எமது வரலாறு சார்ந்ததாகவும் எமது வாழ்க்கையுடன் எவ் வாறு இணைந்துள்ளது எனற வகையில் அந்த கல்வி முறை மாற வேண்டும்.

கல்விப்புலம் சார்ந்த வர்கள் அதற்கு முழுமுயற்சி எடுக்க வேண் டும் என வேண்டுகோள் விடுக்கின் றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## இராமகிருஷ்ணமிஷன் வெளியீடுகளின் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

நல்லூர் உற்சவ கால த்தை முன்னிட்டு நல்லூர் ஆலயப் பின் வீதியிலுள்ள மூத்ததம்பி அன்னதான மட த்தில் புத்தகக் கண்காட்சி யும் விற்பனையும் இடம்பெ ற்று வருகின்றது.

சப்பறம், தேர், தீர்த்தத் திருவிழாக்களை முன்னிட்டு பல சிறந்த புத்தகங்கள் விசேடமாகத் தருவிக்கப்பட் டுள்ளன.

தினசரி மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரை கண்காட்சி நடைபெற்று வரு கிறது. தேர், தீர்த்தத் திருவிழா நாட்களில் மட்டும் காலை 7 மணி முதல் இரவு 8 மணி வரை கண்காட்சி நடைபெ றும். (இ

## சாஸ்திரங்கள்

✦ இரு தரப்பும் ஒப்புக்கொண்ட அளவு எதுவோ அதன்படி வட்டி பெறவேண்டும். வட்டி பேசாது தரப் பட்ட கடனுக்கு வட்டி கிடையாது. வட்டி கேட்கப்பட் டால் அந்நாளிலிருந்து வட்டி கொடுத்தாக வேண்டும். வட்டி வர்ணமுறைப்படி ஐந்து வட்டி வரை வணங்க லாம். ஒப்புக்கொண்டவாறு வட்டி தரப்படாத போதி லும் வட்டிக்கு வட்டி வாங்கக்கூடாது- மனுசாஸ்திரம

## உயர்தொழில்நுட்பவியல் நிறுவன 14 ஆவது பட்டமளிப்பு விழா

2016 ஆம் கல்வியாண் டில் முழுமையாகக் கற்கை நெறியினை பூர்த்தி செய்த அனைத்து கற்கை நெறிகள் சார்ந்த மாணவர்கள் அனை வரும் இன்று 17 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் செப் டெம்பர் 9 ஆம் திகதிக்கு முன் அலுவலகத்தில் தொட ர்பு கொண்டு உரிய ஆவ ணத்தினைப் பெற்று உரிய காலக்கிரமத்தில் பட்டமளிப்பு விழாவிற்கான விண்ணப் பங்களைச் சமர்ப்பிக்குமாறு உதவிப் பதிவாளர் யோ. ரிசா ந்தன் அறிவித்துள்ளார். (இ

## நயினை-நல்லூர் திருத்தல பஜனை பாதயாத்திரை இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய தேர்த்திருவிழாவை முன்னிட்டு ஆண்டு தோறும் நடைபெற்று வரும் நயினை- நல்லூர் திருத்தல பஜனை பாத யாத்திரை இன்று வியா ழக்கிழமை காலை நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் பூஜை வழிபா டுகள் இடம்பெற்று வேல் எடுத்துக் கொண்டு பிற்பகல் 2 மணிக்கு ஆலயத்திலிரு ந்து ஆரம்பமாகும்.

இத்தல பாதயாத்திரை யானது குறிகாட்டுவான், புங் குடுதீவு, வேலணை, மண் கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவு, பண்ணை, யாழ்ப்பாணம், வில்லூன்றி, கந்தர்மடம் வழியாக எதிர்வ ரும் 20 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை (தேர்த்திருவிழா வன்று) அதிகாலை நல்லூர் கந்தசுவாமி கோவிலை வந்தடையும். (இ-3)

## உறவினரால் உரிமை கோரப்படாத சடலம்

யாழ். போதனா வைத் திய சாலையில் 12.08.2017 ஆம் திகதி முற்பகல் 10.50 மணியளவில் 50 வயது மதிக்கத்தக்க பொது நிறமு டைய ஆண் குளப்பிட்டிச் சந்தியில் இடம்பெற்ற விபத் தில் படுகாயமடைந்து ஆபத் தான நிலையில் (பெயர், முகவரி, வயது தெரியாது) அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்காக அனுமதித்து சிகிச்சை பெற்றுக் கொண் டிருந்த அவர் 15.08.2017 அன்று பிற்பகல் 4.30 மணியளவில் உயிரிழந்துள் ளார்.

இவரது சடலம் உறவி னர்கள் யாரும் உரிமை கோராத நிலையில் வைத் தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

எனவே இச்சடலத்தை உறவினர்/உரித்துடையோர் வந்து பெற்றுக் கொள்ளு மாறு கேட்டுக் கொள்கின் றேன் என யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் அறிவித்துள் ளார். (இ

## சத்திய தரிசனம்



### அன்பெனும் விதை விதையுங்கள்

❖ தியானத்தில் அமர முடியவில்லையே, தெய்வவழிபாடு செய்ய முடியவில்லையே என்று ஏங்காதீர்கள். வீட்டில் வழக்கமான பணிகளை வழிபாடாக்குங்கள். சமையலும் ஒரு தியானமே.

❖ காய்கறிகளை நறுக்கும் போது வேண்டாதவற்றை நறுக்கித் தள்ளுவது போல, வேண்டாத தீய குணங்களை மனதி லிருந்து தூக்கி எறியுங்கள். காய்கறிகளை தண் ணீரில் போடுவதுபோல, அருள் என்னும் மழையில் மனம் நனையட்டும்.

❖ காய்கறிகளை வேக விடுவதுபோலவே, மனதை ஞானத்தீயில் வேக விடுங்கள். இப்படி எண்ணும்போது நாம் செய்யும் சமையல் வேலையும் தெய்வப் பணியாகி விடும்.

❖ தெய்வம் என்னும் ஆதார சக்திக்கு பணி செய்யும் கருவியாக உங்களை மாற்றிக் கொள்ளுங்கள். மனதை தெய்வீகமாக்கிக் கொண்டு ஆனந்தமாக இருங்கள்.

❖ அன்பு என்னும் விதை விதைத்து மெய்யுணர்வை அறுவடை செய்யுங்கள். அருள் என்னும் நீர் பாய்ச் சுங் கள். விதையில் மரத்தின் தன்மை முழுமையாக இருப்ப [illegible] இருக் கிறது.

## கழிவுகளை தரம்பிரித்து அகற்றிடுவோம்

கழிவுகளை அதற்கான நிறக்குறியீட்டுக் கூடைகளிலோ/ பைகளிலோ சேகரித்து வினைத்திறனுடன் மீள் சுழற்சிக்கு உதவிடலாம். நேரமும் மீதப்படுத்தப்படும்.

கண்ணாடிக்கழிவுகள்- சிவப்பு நிறக்கூடை
கடதாசிக் கழிவுகள்- நீலநிறக் கூடை
பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகள்- செம்மஞ்சள் நிறக்கூடை
இலத்திரனியல் கழிவுகள்- கறுப்பு நிறக்கூடை
உக்கக்கூடிய கழிவுகள்- பச்சை நிறக்கூடை

நகர்ச்சுத்தம் நலம் தரும்

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகர சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணம்-2017

## ரி.சி.சி. 75.95 புள்ளிகளுடன் முன்னிலையில்

ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் 2010 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்து 8 வருடங்களாக நடத்தி வரும் யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவு (Rating) நிகழ்வில் 01.01.2017 தொடக்கம் 30.06.2017 வரை நடைபெற்ற 81 போட்டிகளுக்கு வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் ரி.சி.சி. அணி 12 போட்டிகளில் பங்கு பற்றி 8 போட்டிகளில் வெற்றி பெற்று 75.95 புள்ளிகளை பெற்று 1ஆம் இடத்திலும் யாழ். பல்கலைக்கழக அணி 11 போட்டிகளில் பங்குபற்றி 8 போட்டிகளில் வெற்றி பெற்று 68.68 புள்ளிகளை பெற்று 2 ஆம் இடத்திலும்,யாழ். ஜொனியன்ஸ் அணி 9 போட்டிகளில் பங்கு பற்றி 7 போட்டிகளில் வெற்றி பெற்று 60.31 புள்ளிகளை பெற்று 3ம் இடத்திலும் உள்ளனர்.

ஏனைய கழகங்களின் நிலை பின்வருமாறு.

கே.சி.சி.சி 59.70 (11/07), சென்றலைட்ஸ் 54.71 (09/06), ஸ்ரான்லி 41.95 (09/04), ஜொலிஸ்ரார் 39.73 (08/04), ஹாட்லியைற்ஸ் 38.88 (07/04), ஓல்ட் கோல்ஸ் 36.90. (06/03), அரியாலை சென்றல் 33.28 (07/04) மானிப்பாய் பரீஸ் 33.05 (06/03) 1யாழ். சென்றல் 32.33 (05/04) கிறஸ் கொப்பர்ஸ் 31.60 (07/03) திருநெல்வேலி YMHA 24.38 (06/02), விங்ஸ் 22.66 (05/02) ,



யூனியன்ஸ் 22.55 (05/02), ஸ்கந்தாஸ்ரார் 21.70 (06.02), பற்றீசியன்ஸ் 21.40 (05/01), விக்டோறி 15.99 (05/01) , நியூஸ்ரார் 15.79 (05/01) டிறிபேக்ஸ்ரார் 15.34 (05/01), சிறிகாமாட்சி 15.30 (04/01), றெயின்போ 11.70 (05/00) டிறைற்ரோன் 1.68 (01/00)

கடந்த 7 வருடங்களாக 1 ஆம் இடத்தை பெற்ற கழகங்களின் நிலை பின்வருமாறு.

2010 யாழ். பல்கலைக்கழகம் 44 புள்ளிகள் (13/11), 2011 யாழ். பல்கலைக்கழகம் 54 புள்ளிகள் (20/14), 2012 கே.சி.சி.சி 152.3 புள்ளிகள் (24/22), 2013 யாழ். ஜொனியன்ஸ் 160.4 புள்ளிகள் (32/24),2014 சென்றலைட்ஸ் 131.4 புள்ளிகள் (22/19), 2015 சென்றலைட்ஸ் 100.49 புள்ளிகள் (19/15), 2016 கே.சி.சி.சி. 140.34 புள்ளிகள் (24/17). (கு)

**நெடியகாடு விளையாட்டு விழா**

## ஆண்களுக்கான மென்பந்தாட்டம் நீல இல்ல அணி சம்பியன்




நெடியகாடு விளையாட்டு விழா 2017 இல் அண்மையில் நடைபெற்ற கீழ்ப் பிரிவு ஆண்களுக்கான மென்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் முதலாவது தெரிவு ஆட்டத்தில் நீல இல்ல அணியை எதிர்த்து சிவப்பு இல்ல அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிவப்பு இல்ல அணி 6.3 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 47 ஓட்டங்களை பெற்றது. பதிலடியாக நீல இல்ல அணி 5.2 பந்துபரி மாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 48 ஓட்டங்களை பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவானது.

இரண்டாவது தெரிவு ஆட்டத்தில் சிவப்பு.மஞ்சள் அணிகள் மோதின.

முதலில் துடுப்பாடிய சிவப்பு அணி 8 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 80 ஓட்டங்களை பெற்றது. பதிலளித்த மஞ்சள் இல்ல அணி 8 பந்துப்பரிமாற்ற நிறைவில் 4 இலக்குகளை இழந்து 78 ஓட்டங்களை மட்டுமே பெற்று 2 ஓட்டங்களினால் இறுதிப்போட்டி வாய்ப்பை நழுவவிட்டது.

தொடர்ந்து நடைபெற்ற இறுதிப் போட்டியில்

சிவப்பு நீல அணிகள் மோதியது. முதலில் துடுப்பாடிய சிவப்பு இல்ல அணி 8 ஓவர்களில் 5 இலக்கு இழப்பிற்கு 59 ஓட்டங்களை பெற்றது.

பதிலளித்த நீல இல்ல அணி 6.1 ஓவர்களில் 4 இலக்கு இழப்பிற்கு 60 ஓட்டங்களை பெற்று கீழ்ப்பிரிவு ஆண்களுக்கான வெற்றிக் கிண்ணக்கை சுவீகரிக்கக்கொண்டகு.(க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# நெடியகாடு விளையாட்டு விழா மென்பந்தாட்ட சுற்றுப் போட்டி




நெடியகாடு விளையாட்டு விழா - 2017 இல் அண்மையில் நடைபெற்ற மென்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இரண்டாவது தெரிவு ஆட்டத்தில் மேற்பிரிவு ஆண்களுக்கான போட்டியில், சிவப்பு இல்ல அணியை எதிர்த்து ஆடிய நீல இல்லம் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவானது,

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று களத்தடுப்பை தெரிவு செய்தது சிவப்பு இல்ல அணி. இதன்படி முதலில் துடுப்பாடிய நீல இல்ல அணி 93 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது. பதிலடித்த சிவப்பு அணி 58 ஓட்டங்களை மட்டுமே பெற்று தோல்வியை தழுவியது.

இரண்டாவதாக நடைபெற்ற திறந்த பிரிவு பெண்களுக்கான போட்டியில் மஞ்சள் இல்ல அணியை எதிர்த்து நீல இல்ல அணி மோதியது.

முதலில் துடுப்பாடிய மஞ்சள் இல்ல அணி 28 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது. பதிலளித்த நீல இல்ல பெண்கள் அணி 3 ஓவர்களில் 32 ஓட்டங்களை பெற்று வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. (க)

# வி.ரி. மகாலிங்கம் பிறிமியர் லீக் பற்றீசியன்ஸ் அணி வெற்றி

வி.ரி. மகாலிங்கம் கிரிக்கெட் தொடரின் 11 ஆவது போட்டி (13.08. 2017) ஞாயிற்றுக்கிழமை அன்று ஜாட்லி கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் பற்றீசியன்ஸ் அணி, மானிப்பாய் பரீஸ் அணியை 8 இலக்குகளால் வெற்றி பெற்று தங்களது முதல் வெற்றியை பதிவு செய்துள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரீஸ் அணி 20 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து 142 ஓட்டங்களை பெற்றனர். கிசோக்குமார்-61, சுபதீபன்-27, வினோத்-14 ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில் பற்றீசியன்ஸ் அணியை சார்ந்த றோபேட் -2, மனோச் -1, றதீசன்-2, கவஸ்கார்-2 இலக்கினைக் கைப்பற்றினர். பதிலுக்கு துடுப் பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் அணி 16.4 ஓவர்களில் 2 இலக்குகளை இழந்து



143 ஓட்டங்களை பெற்றனர். சிந்துஜன் -24, ரியூடர்-62, அனோஜன் ஆட்டமிழக்காது 47 ஓட்டங்களை பெற்ற னர். சஜீத், கிசோக்குமார் தலா ஒரு இலக்கினை கைப்பற்றினர். இப் போட்டி யின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் 8 வது ஆண்டாக நடத்திவரும் தரவரிசை (Rating) பட்டியலுக்கு பற்றீசியன்ஸ் அணி 4.93 புள்ளிகளையும் மானிப்பாய் பரீஸ் அணி 1.62 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டனர்.

# உதைபந்தாட்டத்திற்கு விண்ணப்பிக்குக

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் வடமராட்சிக்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையிலான 35 வயதுக்கு மேற்பட்டோருக்கான ஓய்வுக்கால உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

உதைபந்தாட்ட தொரில் பங்கு பற்ற விரும்பும் அணிகள் தங்கள் பதிவினை 18.08.2017 க்கு முன் 077 197 3261 ,077 263 7653 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசத்தின் தாய்...

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க இரத்தினபுரியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையில்,

மேலும் தெரிவித்ததாவது,

ஷிரந்தி ராஜபக்ஷவை குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு அழைத்திருந்தனர். அதில் புதுமை அடைவதற்கு ஒன்றுமில்லை. தாஜுடீன் கொலை செய்யப்பட்ட போது திம்பிரிக்கசாய எரிபொருள் நிரப்பு நிலையத்தின் அருகில் உள்ள கடை ஒன்றில் தன்து ஜீப்பை நிறுத்தி தாஜுடீன் குடிநீர் போத்தல் ஒன்றை வாங்கியுள்ளார். குடிநீர் போத்தல் ஒன்றை எடுத்துக்கொண்டு ஜீப் வண்டி செல்லும் போது டிப்பன்டர் வண்டி ஒன்று வந்தது. அந்த டிப்பன்டர் வண்டியை சி.ஐ.டி அடையாளம் கண்டது. விசாரணை மேற்கொள்ளும் போது சமூக சேவை அமைச்சுக்கு சொந்தமானதே அந்த வண்டி என்பது தெரியவந்தது.

பீலிக்ஸ் பெரேராவுக்கு சமூக சேவை அமைச்சுக்காக செஞ்சிலுவைச் சங்கத்தினால் குறித்த ஜீப் வண்டி அன்பளிப்பு செய்யப்பட்டது. இதனை வழங்குவதை ஷிரந்தி ராஜபக்ஷ கண்டார். தயது செய்து தமது பாவனைக்கு வழங்குமாறு ஷிரந்தி கூறினார்.

என்னிடம் புகைப்படம் உள்ளது. பீலிக்ஸ் பெரேரா ஜீப் வண்டியோடு ஷிரந்தி ராஜபக்ஷவுக்கு திறப்பை வழங்கும் புகைப்படம் என்னிடம் உள்ளது. பின்னர் ஜனாதிபதி செயலகம் அவ் டிப்பன்டர் வண்டிக்கு எரிபொருள் நிரப்பியுள்ளது. ஜனாதிபதி செயலகத்தின் அறிக்கையின் படி அந்த வண்டியை யோஷித ராஜபக்ஷவே பயன்படுத்தியுள்ளார். வண்டி காணாமல் போயுள்ளது. கபரணையில் [illegible]வைத்து சி.ஐ.டி அவ் வண்டியை கைப்பற்றியது. ஜனாதிபதி செயலகம் ஏன் கபரணையில் இருக்க வேண்டும்? அவ்வாறு குற்றப் புலனாய்வு திணைக்களம் அவ் வாகனத்தைக் கண்டுபிடிக்கும் போது வாகனத்தின் நிறம் மூன்று தடவைகள் நிறம் மாற்றப்பட்டது. அதனை கையளிக்கும் போது வண்டி (வெள்ளை நிறம்) இருந்தது. அதன் பின்னர் இரண்டு தடவை நிறம் மாற்றப்பட்டது. அதாவது தாஜுடீன் கொலை செய்யப்பட்ட அன்று இரவு அவ் ஜீப் வண்டியுடன் இன்னொரு டிப்பன்டர் வண்டி வந்தது. அந்த டிப்பன்டரை ஷிராந்தி தனது சிரிரிய மன்றத்திற்கு பெற்று அதனை யோஷித பயன்படுத்தியுள்ளார்.

கபரணையில் ஒளித்து வைத்துள்ளனர். நிறத்தை மாற்றியுள்ளனர். கண்டு பிடித்தனர். எனவே இது குறித்து வாக்குமூலம் பெறுவதற்கு குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு அவர்கள் அழைக்கப்பட்டனர். இதில் நியா[illegible] இல்லையா?

ஆனால் இன்று என்ன நட க்குகின்றது. குற்றப்புலனாய்விற்கு அவர் செல்லும் போது அங்கு சென்று சத்தம் இடுகின்றனர். இவ்வாறு,

தேசத்தின் தாயாம்! அவர் தேசத்தின் தந்தையாம்! இது புதுமையான தேசமல்லவா? தேசத்தின் தாய் ஏன் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டார். இளைஞர் கொலை தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காகவே அவர் அழைக்கப்பட்டிருந்தார் என்றார் அநுரகுமார திஸாநாயக்க. (மு-11)

## இந்தியாவில்...

ளார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

தாண்டிக்குளம் புகையிரத கடவையில் விபத்து ஏற்பட்டு ஒருவர் மரணமடைந்தமையை கண்டித்து அப்பகுதி மக்களால் புகையிரதத்தை மறித்து நடத்தப்பட்ட போராட்டத்தின்போது மக்கள் பிரதிநிதிகளும், பொலிஸாரும் அங்கு கலந்துகொண்டிருந்தனர். இதன்போது பொலிஸார் புகையிரத திணைக்களத்திற்கு உரித்தான கடவைக்கு சென்று புகையிரத கடவை காப்பாளர்கள் மீது குற்றச்சாட்டை சுமத்தியுள்ளனர். இதனை நாம் கண்டிக்கின்றோம்.

எம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கு எந்த நிலையிலான பொலிஸ் அதிகாரியானாலும் புகையிரத கடவை காப்பாளர்களிடம் பொதுவான மன்னிப்பை கோரவேண்டும்.

வடக்கிற்கான புகையிரத சேவை இடம்பெற்றதன் பின்னர் 41 புகையிரத விபத்துக்கள் இடம்பெற்றுள்ளது. இதில் 35 உயிரிழப்புகள் இடம்பெற்றுள்ளது. இதில் குறிப்பிடப்பட வேண்டிய விடயம் எங்களது ஊழியர்கள் கடமையில் உள்ள கடவைகளில் எந்த விபத்துக்களும் ஏற்படவில்லை.

இவ் விபத்துக்கள் பொலிஸாரின் கவனயீனத்தால் ஏற்பட்ட விபத்துக்களும் புகையிரத திணைக்களம் அவ்விடங்களில் இருந்து தமது ஊழியர்களை வெளியேற்றியமையினாலுமே ஏற்பட்டுள்ளது.

அத்துடன் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வாவினால் சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்பட்டமையினாலும் ஏற்பட்ட விபத்துகளுக்கு புகையிரத திணைக்களமும் பொலிஸ் திணைக்களமும் முழுமையான பொறுப்பேற்க வேண்டும்.

இந்தியாவில் இருந்து வருவிக்கப்பட்டதான தானியங்கி சமிக்ஞைகள் இந்தியாவில் பாவனையில் இருந்து அகற்றப்பட்டவை. இந்த சமிக்ஞை விளக்குகள் அந்த நாட்டில் பயன்படுத்த தடை செய்யப்பட்டவை என்பதனை நாம் உறுதிப்படுத்துவோம். இந்த சமிக்ஞைகள் தொடர்ந்தும் இயங்குவதனால் மின்சார சபைக்கு பெரும் நட்டம் ஏற்படுவதுடன் அதில் உள்ள மின்குமிழ்கள் தொடர்ந்து பழுதடைவதால் அதனை இந்தியாவில் இருந்தே கொண்டுவரவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. ஆகவே புகையிரத திணைக்களம் இதனை கவனத்தில் கொள்ள வேண்டும்.

போக்குவரத்து அமைச்சர், இந்த நாட்டின் பிரஜைகளான புகையிரத கடவை காப்பாளர்களை மனிதர்களாக மதித்து அவர்களது சேவைக்கான கௌரவத்தினை வழங்கி நிரந்தர நியமனத்தினை வழங்க முன்வர வேண்டும் என தெரிவித்தார். (மு-250)

## பூஜிதவை...

வித்துள்ளார்.

பொலிஸ் தலைமையகத்தில் “லிப்ட்” திருத்தம் செய்யும் ஊழியர் ஒருவரின் சட்டையைப் பிடித்து அச்சுறுத்தியதாக பொலிஸ் மா அதிபருக்கு எதிராக சுமத்தப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் பொலிஸ் ஆணைக்குழு விசாரணை செய்யாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் மா அதிபர் தவிர்ந்த ஏனைய பொலிஸ் அதிகாரிகள் தொடர்பிலேயே விசாரணை செய்வதற்கான அதிகாரத்தை ஆணைக்குழு கொண்டுள்ளது.

அரசியலமைப்பு சபையின் சிபாரிசின் பிரகாரம் ஜனாதிபதியினாலேயே பொலிஸ் மா அதிபர் நியமனம் இடம்பெறுகின்றது. இதனால், பொலிஸ் மா அதிபருக்கு எதிராக குற்றச்சாட்டை முன்வைக்கவோ அதனை விசாரணை செய்யவோ ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இல்லையெனவும் அதன் செயலாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர மீது எழுந்துள்ள குற்றச்சாட்டு தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்படும் என நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டின் போது பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (மு-11)

## பொலிஸ்மா...

மாநாட்டின் போது பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

மேலும் இதுபற்றி கருத்து தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர, பொலிஸ்மா அதிபர் தொடர்பில் எழுந்துள்ள குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படும் என்றும் இது தொடர்பான அடுத்த கட்ட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் 17 பேர் கொண்ட பொலிஸ் சட்டத்தரணிகள் சங்கம் அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றி கலந்தாலோசித்து வருவதாகவும் அத்தோடு இது பற்றி சட்டமா அதிபருடன் கலந்தாலோசித்து சிவில் நீதிமன்றில் வழக்குத் தொடர நடவடிக்கை எடுப்பதாகவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை அச்சுறுத்தியதாக தெரிவிக்கப்படும் சம்பவம் போலியானது என்றும் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு-11)

## சமுர்த்தி...

காலை இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் சமுர்த்தி கொடுப்பனவு களில் மாற்றங்கள் எதுவுமில்லையெனவும்

# யோஷித ராஜபக்ஷவிடம் 4 மணி நேரம் விசாரணை



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷ நேற்று முற்பகல் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்.

சிரிலிய சவிய மன்றத்தின் ஜீப் வண்டி தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காகவே அவர் அழைக்கப்பட்டிருந்தார்.

சுமார் 4 மணித்தியாலங்கள் யோஷித ராஜபக்ஷவிடம் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. (மு-11)

# எனக்கு ஒன்றும் தெரியாது ஷிராந்தியின் பதில்

(கொழும்பு)

ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீன் கொலை தொடர்பாக முன்னாள் முதற்பெண்மணி, சிராந்தி ராஜபக்சவிடம் எழுப்பப்பட்ட பெரும்பாலான கேள்விகளுக்கு அவர் ஒன்றும் தெரியாது என்றே பதிலளித்தார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

தாஜுதீன் கொலைக்குப் பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும், சிராந்தி ராஜபக்ஷவின் கீழ் இருந்த சிரிரிய சவிய அறக்கட்டளைக்கு சொந்தமான டிபென்டர் வாகனம் தொடர்பான விசாரணைக்கு நேற்றுக்காலை குற்றப் புலனாய்வுப் பிரிவு தலைமையகத்துக்கு சிராந்தி ராஜபக்ஷ அழைக்கப்பட்டிருந்தார்.

அவருடன் மகிந்த ராஜபக்ஷ மற்றும் யோசித ராஜபக்ஷ ஆகியோரும் அங்கு வந்திருந்தனர்.

இந்த விசாரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, குற்றப் புலனாய்வுப் பிரிவு-தலைமையகத்துக்கு வெளியே மகிந்த ராஜபக்ஷ ஆதரவாளர்கள் திரண்டு நின்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இரண்டரை மணிநேரம் சிராந்தி ராஜபக்ஷவிடம் விசாரணைகள் நடத்தப்பட்டன. இதன்போது குற்றப் புலனாய்வுப் பிரிவினர் எழுப்பிய கேள்விகளுக்கு சிராந்தி பெரும்பாலும் வாயை மூடிக்கொண்டிருந்தார்.

சில கேள்விகளுக்கு மாத்திரம் தனக்கு ஒன்றும் தெரியாது என்று பதிலளித்தார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கொலை தொடர்பாக விசாரணைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இது தொடர்பாக சில உயர்மட்ட கைதுகள் தவிர்க்க முடியாதது என்றும் அதிகார பூர்வ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (மு-11)

அமைச்சர் மகிந்த அமரவீர சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மைக் காலங்களில் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளில் கடந்த அரசாங்கத்தால் வழங்கப்பட்ட சமுர்த்தி கொடுப்பனவுகளை இந்த அரசாங்கம் முறையாக வழங்குவதில்லை எனவும், இடை நிறுத்தி விட்டதாகவும் தெரிவித்து பொது மக்கள் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (மு-11)

## அவமானப்படுத்தல்...

பகல் பன்னிப்பிட்டிய, ஸ்ரீ தர்ம விஜயாலோக்க விகாரைக்கு மியன்மாரிலிருந்து கொண்டுவரப்பட்ட புத்த பிரானின் திருவுருவத்தை திரைநீக்கம் செய்யும் நிகழ்வில் கலந்துகொண்டுவிட்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்,

அன்று புத்தபிரான் கூட அவமானப்படுத்தல்களுக்கு உட்பட்டிருந்த நிலையில் வர்த்தகமயமாக்கலுடன் இன்று சீர்குலைந்து போயுள்ள சமூகத்தில் தான் அவமானப்படுத்தப்படுவது புதுமையான விடயமல்ல.

அத்துடன் இந்திய சுதந்திரத்துக்காக போராடிய மகாத்மா காந்தி, இலங்கையின் முன்னோடி அரசியல் தலைவரான பண்டாரநாயக்க ஆகியோர், நாட்டுக்காகவும், மக்களுக்காகவும் தமது வரலாற்றுக் கடமையை ஆற்றிய போது அவர்கள் அவமானப்படுத்தப்பட்ட முறையையும் ஜனாதிபதி நினைவுகூர்ந்தார்.

அறிவைப் பெறுவதற்காகவும், சமூக அபிவிருத்திக்கோ அன்றி அவமானப்படுத்தல்களுக்காகவே இன்று நவீன தொழில்நுட்பம் பாவிக்கப்படுவதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இந்த மோசமான நிலையிலிருந்து இளம் தலைமுறையினரை மீட்பதற்காக அவர்களின் ஆன்மீக அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார். (மு-11)

## கன மழை...

மண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. இந்த அறிவிப்பினை நேற்று நண்பகல் மேற்படி திணைக்களம் விடுத்துள்ளது.

குறிப்பாக யாழ்ப்பாணம், மன்னார், கேகாலை, அவிசாவளை மற்றும் பொத்துவில் ஆகிய பகுதிகளில் இந்த நிலைமையினை எதிர்பார்க்கலாம் என்று கூறியுள்ளது.

யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் பல இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய கன மழை பொழியலாம்.

மேலும் மேற்கு, தெற்கு, சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் புத்தளம் மாவட்டங்களிலும் இடி மின்னலுடனான மழை பெய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மழை பெய்யும்போது சில பிரதேசங்களில் வலுவான காற்று வீசக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படலாம். மின்னலினால் ஏற்படும் ஆபத்துக்களையும் சேதங்களையும் தவிர்ப்பதற்கு போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொது மக்களுக்கு மேற்படி திணைக்களத்தால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (மு-11)

## தாயிடம் விசாரணை...

குறித்து கருத்து தெரிவிக்கும் போதே நாமல் இதை குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்து தெரிவிக்கையில்,

எமது அம்மாவை சி.ஐ.டி (குற்ற விசாரணைப் பிரிவு)க்கு அழைத்து விசாரணை செய்கின்றார்கள். தாஜுடீன் கொலை தொடர்பில் விசாரணை நடத்துகின்றார்கள்.

இறுதியில் என்ன நடந்தது. மகிந்த ராஜபக்ஷவின் மனைவியைக் கூட இந்த அரசாங்கம் விட்டு வைக்கவில்லை. அவரை பழிவாங்கும் அளவுக்கு கீழ்த்தரமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நாட்டின் தலைவருக்கு நான் ஒன்றை சொல்லுகின்றேன். எமது குடும்பத்திலுள்ள ஐவரையும் சிறையில் அடைத்தாலும், உங்களது அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பும் நடவடிக்கைக்கு இந்த நாட்டு மக்களை கொண்டு செல்வோம் என ஆவேசமாக தெரிவித்தார். (மு-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளை நூலகம்



## முன்னாள் போரா...

னாள் புலி உறுப்பினர் இதுபோன்ற சம்பவங்களுடன் தொடர்புபட்டிருந்தாலும் கூட அது, தேசிய பாதுகாப்புக்கான் அச்சுறுத்தல் என்று அர்த்தம் இல்லை என இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஸ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் அண்மையில் பொலிஸார் மற்றும் மேல் நீதிமன்ற நீதிபதி ஆகியோருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் உள்ளூர் விவகாரங்களாகும். இதனால் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை.

கொழும்பில் உள்ள இராணுவத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதுதொடர்பாக மேலும் கருத்து வெளியிடுகையில்,

கடந்த மாதம் யாழ்ப்பாணத்தில் பொலிஸ் அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டதை அடுத்தும், மேலும் இரு பொலிஸார் மீது தாக்குதல் நடத்தப்பட்டதை அடுத்தும் பாதுகாப்பு அதிகாரிகள் ரோந்து நடவடிக்கைகளை அதிகரித்துள்ளனர்.

வடக்கில் இராணுவ மற்றும் பொலிஸ் பிரசன்னம் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த தாக்குதல் உள்ளூர் சம்பவங்களாகும். இதனை பரந்துபட்ட செயற்பாடு ஒன்றின் அங்கமாக கருதக் கூடாது.

அங்கொன்றும் இங்கொன்றுமாக நடக்கின்ற ஒவ்வொரு சம்பவங்களையும் தேசிய பாதுகாப்புடன் தொடர்புபடுத்த ஒவ்வொருவரும் முயற்சிக்கின்றனர்.

நல்லூர் துப்பாக்கிச் சூட்டுடன் தொடர்புடையவர் விடுதலைப் புலிகளின் பின்னணியைக் கொண்டவர் தான். ஆனால் அவர் 1996 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அந்த அமைப்பில் இருக்கவில்லை.

தெற்கில் நடக்கின்ற இதுபோன்ற தாக்குதல்களை யாருமே, தேசிய பாதுகாப்பு விவகாரத்துடன் தொடர்புபடுத்துவதில்லையே. இது போருக்குப் பிந்திய சமூகத்தில் இது போன்ற சம்பவங்கள் நிகழ்வது இயற்கையே.

கொக்குவிலில் இரண்டு பொலிஸார் தாக்கப்பட்ட சம்பவத்தில் கூட முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்குத் தொடர்பில்லை. 2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த பின்னர், 12ஆயிரத்து 180 விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டது. இவர்களில் ஆயிரத்து 963 பேர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருக்கின்றனர். அவர்களில் 600 பேர் பெண்களாவர்.

அதேவேளை, விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்த மேலும் 200 பேர் புனர்வாழ்வு அளிக்கப்படாத நிலையில் இன்னமும் யாழ்ப்பாணத்தில் உள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (மு-11)

## பொய் முறைப்பாடு...

கச்சேரி நீதிமன்றத்தில் கொடிகாமம் பொலிஸார் பொய் முறைப்பாடு மேற்கொண்டதற்கான வழக்கினை தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்கு மாவட்ட நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

திருட்டுப் போனதாக பொய் முறைப்பாடு செய்த கனடா நாட்டில் இருந்து வந்திருந்த தம்பதிகள் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

இதன்போதே நகைகள் திருட்டுப் போனதாக பொய் முறைப்பாட்டினை மேற்கொண்ட குற்றத்தை நீதிமன்றில் கனடா தம்பதிகள் ஏற்றுக்கொண்டனர்.

குற்றத்தை ஒப்புக்கொண்ட கனடா தம்பதிகளை பிணையில் செல்ல அனுமதித்த நீதவான் அவர்களுக்கு எதிரான குற்றப்பத்திரிகையை எதிர்வரும் 23-ம் திகதி மன்றில் சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கனடாவில் இருந்து வந்திருந்த தம்பதிகள் கனடாவில் காப்புறுதிப் பணத்தினை பெற்றுக்கொள்ளும் நோக்கில் கடந்த 7-ம் திகதி வரணியில் உள்ள வீட்டில் வைத்து சுமார் 51 இலட்சம் பெறுமதியான 89 பவுண் நகைகளை கத்தி முனையில் கொள்ளையிடப்பட்டதாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (மு-89)

## யாழ்.மின்சார...

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைக்கு மருத்துவபீட மாணவர்களுக்கான மருத்துவ சிகிச்சைகள் கற்கை நிலையத்தை அமைப்பதற்காக மாநகரசபையால் வழங்கப்பட்டிருந்த காணியில் அமைக்கப்பட்டிருந்த வியாபார நிலையங்கள் நீதிமன்ற உத்தரவினையடுத்து அகற்றப்பட்டுள்ளது. யாழ்.மின்சார நிலைய வீதியில் அமைக்கப்பட்டிருந்த 9 வியாபார நிலையங்களே இவ்வாறு நேற்றைய தினம் அகற்றப்பட்டிருந்தது.

கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்திருக்கும் நிலையில் அவ் வழக்கானது நாளை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ள நிலையிலேயே அவசர அவசரமாக இடிக்கப்பட்டுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு பின்புறமாக மாநகரசபைக்கு சொந்தமான குறிக்கப்பட்ட காணியானது காணப்பட்டிருந்தது. பின்னர் இக் காணியானது யாழ்.போதனா வைத்தியசாலையின் மருத்துவ சிகிச்சையியல் கற்கை நிறுவகத்தை அமைப்பதற்காக மாநகர சபையினால் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டிருந்தது.

இருந்த போதிலும் இக் காணியானது கடந்த ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் மாநகர சபையினால் வியாபாரிகளுக்கு வியாபார நிலையங்களை அமைப்பதற்காக வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறு வழங்கப்பட்ட இடத்தில் ஒன்பது வியாபார நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இதனை தொடர்ந்து குறித்த காணியினை மீள ஒப்படைக்குமாறு கோரி யாழ்.பிரதேச செயலகத்தால் யாழ்.நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல்செய்யப்பட்டிருந்தது.

இவ் வழக்கினை விசாரணை செய்த நீதிமன்றானது குறித்த வியாபார நிலையங்களை அங்கிருந்து அகற்றுமாறு வியாபார நிலையங்களின் உரிமையாளர்களுக்கு கட்டளை பிறப்பித்ததுடன் அதற்கான கால அவகாசத்தையும் வழங்கியிருந்தது. இருந்த போதிலும் வியாபார நிலையங்கள் அகற்றப்படாமையால் நேற்றைய தினம் நீதிமன்றம் உடனடியாக அவ் வியாபார நிலையங்களை அகற்றுமாறு கட்டளையொன்றை வழங்கியிருந்தது.

இதனையடுத்து யாழ்.நீதிவான் நீதிமன்ற பதிவாளர் மற்றும் பொலிஸார் குறித்த வியாபார நிலையங்களுக்கு சென்று அங்கிருந்து குறித்த வியாபார நிலையங்களை அகற்றும் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது வியாபார நிலையங்களின் உரிமையாளர்கள் தாமாக தமது வியாபார நிலையங்களை விட்டு வெளியேறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

இதேவேளை குறித்த விடயம் தொடர்பாக வியாபாரிகள் தமது அதிருப்தியையும் தம்பக்க நியாயத்தை கேட்பதற்கு சந்தர்ப்பம் ஒன்றை வழங்க வேண்டும் எனவும் கோரியிருந்தனர்.

குறிப்பாக இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டு தாம் சட்டத்தரணிகளுடன் செல்வதற்காக சந்தர்ப்பம் வழங்கி கடந்த 24.07.2017 அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது சட்டத்தரணிகளின் பணிப்புறக்கணிப்பு காரணமாக சட்டத்தரணிகள் மன்றில் முன்னிலையாகததால் நீதிமன்றானது வெளியகற்றல் கட்டளையை அன்றைய தினமே பிறப்பித்திருந்தது.

இதன் பின்னர் நாம் இது தொடர்பாக யாழ்.மேல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்த போதும் வழக்கினை மேல் நீதிமன்றானது தள்ளுபடி செய்திருந்தது.

இதனையடுத்து இவ்வழக்கினை கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்திருக்கும் நிலையில் அவ் வழக்கானது நாளைய தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள நிலையில் தற்போது யாழ்.நீதிவான் நீதிமன்றம் வியாபார நிலையங்களை அகற்றுமாறு கட்டளையிட்டுள்ளதாக வியாபாரிகள் தெரிவித்திருந்தார்கள். (மு-4)

## இந்திய இராணுவ...

இலங்கை இராணுவத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

கடந்த 1987 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாத காலப்பகுதியில் கோப்பாய் தெற்கு, இராஜ வீதியில் உள்ள வெள்ளவாய்க்கால் பிராயடி பகுதிக்கு அண்மையில் அமைந்திருந்த இந்திய இராணுவ முகாமின் பொறுப்பதிகாரியாக இருந்த மேஜர் ஜெனரல் ஒருவர் அந்தக் காலப் பகுதியில் இடம்பெற்ற மோதலின் போது உயிரிழந்துள்ளார்.

அப்போது குறித்த பகுதியில் அவரின் நினைவாக கல்லறை அமைக்கப்பட்டுள்ளது. இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்தின் பின்னர் அந்த இடம் தற்போது வரை கவனிப்பாரற்று இருந்துள்ளது.

இந்நிலையில், கடந்த 1987 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்குறித்த இராணுவ அதிகாரியுடன் பணியாற்றிய சக இராணுவ அதிகாரி பி.எம்.ஹறிஸ் (லெப்டினன் ஜெனரல்) தற்போது இந்திய இராணுவ தென் பிராந்தியத் தளபதியாக உள்ளார். அவருடைய வேண்டுகோளுக்கு இணங்க குறித்த கல்லறை புனரமைக்கப்படவுள்ளதாக தெரியவருகிறது.

அத்துடன் நாளை மறுதினம் 19 ஆம் திகதி குறித்த பகுதியில் உள்ள நினைவிடத்துக்கு அஞ்சலி செலுத்துவதற்காக குறித்த தளபதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளதாகவும் தெரியவருகிறது.

எனவே 19 ஆம் திகதி நடைபெறவுள்ள அஞ்சலி நிகழ்வுக்கு குறித்த பகுதியை தயார்படுத்தும் வகையில், அப்பகுதியில் சுற்றியுள்ள பற்றைகளை நேற்றைய தினம் இலங்கை இராணுவத்தினர் அகற்றியுள்ளனர். அத்துடன் இராணுவ அதிகாரிகள் சிலரும் குறித்த பகுதியை பார்வையிட்டுச் சென்றுள்ளனர். (மு-9)

## டிப்பரில் இருந்த...



வவுனியா மதவாச்சியில் நேற்று மாலை 4.30 மணியளவில் கட்டுமான கம்பிகளுடன் சென்ற டிப்பர் வாகனத்துடன் தனியார் பேருந்து மோதியதிலேயே இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியாவிலிருந்து அம்பாறை நோக்கி பயணிகளுடன் சென்ற தனியார் பேருந்து கண்டி வீதி, மதவாச்சி பகுதியில் அநுராதபுரம் நோக்கி கட்டுமான கம்பிகளை உரிய அடையாளப்படுத்தல்கள் இன்றி ஏற்றி சென்ற டிப்பர் வாகனத்தை முந்தி செல்ல முற்பட்ட போது டிப்பர் சடுதியாக நிறுத்தப்பட்டமையினால் தனியார் பேருந்தின் கண்ணாடிகளை உடைத்து கட்டுமான கம்பிகள் பாய்ந்ததில் சாரதி படுகாயமடைந்துள்ளார்.

கட்டுமான கம்பிகள் அடையாளப்படுத்தாத வகையில் கொண்டு சென்றதன் காரணத்தினாலே இவ் விபத்து சம்பவம் இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மதவாச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (மு-250)

எவரெஸ்ட் குமாரிக்கா
சந்தனாதி தைலம்
- நீண்ட கூந்தல் வளர்ச்சிக்கும்
- இளநரையை போக்கவும்
- பொடுகிலிருந்து நிவாரணம் பெறவும்
- கண் எரிச்சல், தலை வலியை நீக்கவும்
- ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யவும்
- ஏழு வகையான மூலிகைகள் உள் அடங்கிய சிறப்பு தைலம்

100 வீதம் இயற்கையானது
(கற்றாழை, வல்லாரை, நெல்லிக்காய், கரிசலாங் கண்ணி, கறிவேப்பிலை, பொன்னாங்காணி, அவுரி மற்றும் விற்றமின் E)
(9447)
எல்லா மருந்தகங்களிலும் சாதாரண கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்
தயாரிப்பு:
எவரெஸ்ட் மருந்தகம்,
உசன், மிருசுவில்,
யாழ்ப்பாணம்.
ஏக விநியோகஸ்தர்
பிரமநாதன் & Co
எண்.28, 26, பேரின்பநாயகம் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
கைபேசி எண்: 0776389356, 0777153571

அறிவுபூர்வமான முதலீடு - வளமான எதிர்காலம்
யாழ் - முதலீட்டாளர் கருத்துக்களம்
Aug.26 (Saturday) @ 9.30am
@Tilko City Hotel
முன்பதிவு : Call & SMS to 0777822014
(C-9331)
CSE
COLOMBO STOCK EXCHANGE

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org
(102)
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

விரைவு பொதிகள் சேவை,
விமான பயணச்சீட்டுகள்
விசா சேவைகள்
- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK - 550/= (C-9275)
கப்பல் மூலம் கனடாவிற்குப்பொதிகள் அனுப்ப
CANADA - 400/= மட்டுமே
(நிபந்தனைக்குட்பட்டது)
V2 TRAVELS-0768226240
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி
• சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

V2 TRAVELS
PASSPORT
வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு இலங்கை வீசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.
VISA EXTENSION
FOR FOREIGN PASSPORT
(வீசா எக்ஸ்ரென்சன்)
(C-9275)
0768227499
VISA
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி
• சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org